வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 04 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 267 பக்கங்கள் : 20



07 கொழும்பு விஜயத்தை இறுதியில் கைவிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர்!



08 ஜனாதிபதி தேர்தலின் மீது திரும்பியிருக்கும் எதிரணிகளின் கவனம்



09 இனவாதம் மதவாதமாக மாறும்!



10 மாணவர்களை மேம்படுத்துவதற்கு உடல்சார் தண்டனைகள் அவசியமா?

# வடக்கு - கிழக்கில் விகாரைகளை கட்டக்கூடாதென சட்டம் உண்டா?

## கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் விதுர

### *25 மாவட்டங்களிலும் இந்து ஆலயங்கள் உள்ளனதானே என்கிறார் அவர்*



கொழும்பு, செப்ரெம்பர் 03

**“இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன. அவர்கள் அங்கு சென்று சுதந்திரமாக வழிபடுகின்றார்கள். இந்நிலையில், 25 மாவட்டங்களிலும் சிங்களவர்களுக்காகப் பௌத்த விகாரைகள் இருப்பதில் என்ன பிரச்னை? வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கக்கூடாது என்று எந்தச் சட்டத்தில் உள்ளது.”**

*- இவ்வாறு கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க.*

*“திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேசத்தில் 10 கிராம சேவகர் பிரிவுகளில் வசிக்கும் 238 சிங்களவர்களுக்கு 23 பௌத்த விகாரைகள் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன. 10 சிங்களவர்களின் வழிபாட்டுக்காகத் தலா ஒரு விகாரை வீதம் அமைக்கப்படவுள்ளது. குச்சவெளி பகுதியில் இந்தப் புதிய விகாரைகளை அமைக்கும் திட்டத்துக்கான அனுமதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது” - என்று கடந்த வாரம் ஊடகங்களில்*

15



# ஐ.நா. வதிவிட பிரதிநிதி பிரதமருடன் சந்திப்பு

*கொழும்பு, செப். 03*

*ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் மார்க் அன்ரே பிரெஞ்ச் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.*

*இந்த சந்திப்பு நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்றது.*

*அபிவிருத்தி ஒத்துழைப்பு மற்றும் பொருளாதார மீட்சி தொடர்பான விடயங்கள் குறித்து*

15

# கோப்பாயில் பழ வியாபாரி பட்டப்பகலில் கடத்தப்பட்டார்

*யாழ்ப்பாணம், செப். 03*

*கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்வியங்காடு பகுதியில் பழ வியாபாரத்தில் ஈடுபடும் 23 வயதுடைய வியாபாரி ஒருவர் பட்டப்பகலில் கும்பல் ஒன்றினால் கடத்தப்பட்டுள்ளார் என கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.*

*3 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்னையில் வியாபாரி கடத்தப்பட்டதாக கோப்பாய் பொலிஸில்*

15

# புதிய கூட்டணியில் இணையவுள்ள மொட்டுவின் உள்ளூர் பிரதிநிதிகள்?

*கொழும்பு, செப். 03*

*கொழும்பு மற்றும் புத்தளம் உட்பட சில மாவட்டங்களின் மாநகர சபை, நகர சபை மற்றும் பிரதேச சபைகளின் பொதுஜன பெரமுனவின் முன்னாள் தலைவர்கள் கடந்த வாரம் பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸாவை சந்தித்து, புதிய அரசியல் கூட்டணியில் இணைவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.*

*இந்த பேச்சுவார்த்தையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் தனிப்பட்ட செயலாளர்*

15

# பிரதமர் வேட்பாளராக விமுக்தி குமாரதுங்க?



*கொழும்பு, செப். 03*

*எதிர்வரும் பொதுத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் விமுக்தி குமாரதுங்கவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த அரசாங்கத்துக்கு உதவி வரும் எதிர்க்கட்சியின் முக்கிய அரசியல் அணியொன்று நடவடிக்கை எடுத்து வருவதாக தெரியவருகிறது.*

*கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்*

15

# காற்றாலை மின்பிறப்பாக்கிகள் மக்களுக்கு பாதிப்பாகக்கூடாது

### *சித்தார்த்தன் எம்.பி தெரிவிப்பு*



*கொழும்பு, செப். 03*

*பூநகரி மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் அமைக்க விருக்கும் காற்றாலைகள் மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் இல்லாத வகையில் அமைக்கப்படவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.*

*யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.*

15

# மிகச்சிறந்த மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேரில் ஒருவராக நந்தலால் வீரசிங்க



*கொழும்பு, செப். 03*

*உலகின் மிகச்சிறந்த மத்திய வங்கி ஆளுநர்கள் 21 பேரில் ஒருவராக, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.*

*குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச தரப்படுத்தலுக்கு அமைய அவருக்கு இந்த கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.*

*1994 ஆம் ஆண்டு முதல் குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் மேற்கொள்ளப்படும் இந்த சர்வதேச தரப்படுத்தலில் 101 நாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.*

*பணவீக்க கட்டுப்பாடு, பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்தல், நிதி ஸ்திரத்தன்மை மற்றும் வட்டி வீத முகாமைத்துவம் உள்ளிட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு,*

15

# நாணய நிதிய நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் காலதாமதம்

### *ஒப்புக்கொள்கிறார் மத்திய வங்கி ஆளுநர்*

*கொழும்பு, செப். 03*

*உள்நாட்டு கடனை மறுசீரமைக்கும் நிபந்தனையை கடந்த ஜூலை மாத இறுதிக்குள் நிறைவேற்ற முடியாது போயுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.*

*அவர் மேலும் தெரிவிக்கையில்*

*உள்நாட்டு கடன் மறுசீரமைப்புத் தொடர்பில் பல்வேறு தரப்பினராலும் வழங்கப்பட்ட தவறான தகவல் களின் அடிப்படையில் இதற்கு எதிராக வழக்கு தொடர்ந்தமை காரணமாக உரிய கால*

15

# 7 மீனவர்கள் கைது

*யாழ்ப்பாணம், செப். 03*

*வெற்றிலைக்கேணி பகுதியில் சட்டவிரோத மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 07 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*கைதானவர்களுடன் இரண்டு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.*

*கட்டைக்காடு முள்ளியானை பகுதிகளைச் சேர்ந்த 21 முதல் 38 வயதுக்குட்பட்டவர்கள் என*

15

# இப்படியும் நடக்கிறது

நண்பர் ஒருவர் ஒரு விழாவுக்கு அழைத்திருந்தார். அந்த நேரத்தில் இந்த ஊர்க்குருவி கொழும்பில் இருந்தார். அவர் அழைத்த அன்று மாலைதான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பவிருந்தேன்.

'நான்கு மணிக்கு கூட்டம் ஆரம்பமாகின்றது என்கிறீர்கள். நான் வந்து சேர ஐந்து மணிக்கு மேல் ஆகிவிடுமே' என்றேன். அதற்கு அவர் சொன்னார், 'அது நான்கு மணி என்றுதான் நோட்டீசில் போட்டிருக்கின்றோம். ஆனாலும் சனங்கள் வந்து தொடங்க எப்படியும் ஐந்து மணி ஆகிவிடும் தானே. நீங்கள் கட்டாயம் வந்துவிடுங்கள்' என்றார் நண்பர்.

இது நமது நிகழ்ச்சிகள் நடக்கின்ற லட்சணத்தை எடுத்துச் சொல்வதற்காக உங்களுடன் பகிர்ந்து கொண்டது.

நல்லூரில் கந்தன் ஆலயத்தில் இப்போது உற்சவம் தொடங்கி நடந்து வருகின்றது. சுவாமி வெளியே வருகின்றபோது போய், சுவாமி கோவிலுக்கு உள்ளே போனதும் வீடு திரும்புவது வழமை.

சுவாமி வெளியே வருவதற்கு சில நிமிடங்கள் முன்னதாக போய்விட்டு காத்திருப்பேன். சுவாமி வெளியே வருகின்றபோது மணிக்கூட்டைப் பார்க்கத் தேவையிருக்காது. சரியாக ஆறு மணி ஆகியிருக்கும். அதே போலத்தான் சுவாமி கோவிலுக்குள் போகின்றபோது நேரம் சரியாக ஏழு மணி ஆகியிருக்கும்.

இப்படியொரு ஒழுங்கு யாழ்ப்பாணத்தில் எந்தக் கோவிலிலும் இருப்பதாக தெரியவில்லை. இந்த ஊர்க்குருவிக்கு தெரியாமல் எங்காவது இருக்கலாம். ஆனால் பெரும்பாலான கோவில்களில் இத்தனை ஒழுங்குமுறையுடன் காரியங்கள் நடப்பதாக தெரியவில்லை.

ஓர் ஆலயத்தில் தேர்த்திருவிழா நடைபெறுகின்றது என்றால் அங்கே பக்தர்கள் திரண்டு வருவது தவிர்க்க முடியாததுதான்.

தேர்த்திருவிழா என்றால் இப்படி பெருந்தொகையான பக்தர்கள் வருவார்கள் என்பதாலேயே சிலர் அவற்றை தவிர்ப்பதற்காக தாமதமாக கோவிலுக்கு செல்வதும் உண்டு. சிலர் தேர் முதல் முதலில் அசையத் தொடங்கும்போது பார்க்கவேண்டும், அந்தக் காட்சியை காண வேண்டும் என்று விரும்பி தேர் ஓடத் தொடங்கும்போது பார்க்க வருவார்கள். சிலர் தேரில் இருந்து சுவாமி பச்சை சாத்தி பூசை முடிந்து கோவிலுக்குள் போகும்போது பார்க்கவேண்டும் என்று வருவார்கள். வேறும் சிலர் தேரில் சுவாமி வீற்றிருக்கும்போது அர்ச்சனை செய்யவேண்டும் என்று வருவார்கள்.

இப்படி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விருப்பம் இருக்கும். அப்படியிருக்கும் போது தேர்த்திருவிழா காலை எட்டு மணிக்கென்றால், ஒன்பது பத்து மணிக்கு தேர் ஆலயத்தைச் சுற்றி உலா வந்து முடிந்துவிடும் என்பதை கணக்கிட்டு பக்தர்கள் கோவிலுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள்.

இப்போது யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி வடக்கு, கிழக்கு எங்கும் ஆலயங்களில் உற்சவங்கள் ஆரம்பமாகி நடந்து வருகின்றன.

சில ஆலயங்களில் எட்டு மணிக்கு தேர் உற்சவம் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் காலை பதினொரு மணிவரை தாமதமாகின்றன என்கின்றன சில செய்திகள். இவ்வாறு தாமதமாவதால் தேர் உலா முடிந்த பின்னர் தரிசனம் செய்வோம் என்று ஆலயத் திற்கு வருகின்றவர்களும் வந்துசேர்ந்து விடுவதால் மக்கள் கூட்டம் அளவுக்கதிகமாகி பக்தர்கள் பல அசௌகரியங்களை அடைய நேரிட்டதாகவும் செய்திகள் வெளிவருகின்றன.

அதிகம் ஏன், அண்மையில் ஓர் ஆலயத்தில் இருபத்தி ஐந்து பவுணுக்கும் அதிகமான நகைகள் திருட்டுப்போனதாகவும் ஒரு செய்தி வெளிவந்திருந்தது.

அதற்காக அவ்வாறு சனநடமாட்டம் அதிகமான இடங்களுக்கு ஏன் நகைகளை போட்டுக்கொண்டு வருகிறீர்கள் என்று கேட்பதும் சரியானது அல்ல. அது அவரவர் விருப்பங்கள் சம்பந்தப்பட்டது.

ஆனால், மக்கள் அளவுக்கதிகமாக கூடுவதை தவிர்க்கின்ற வகையில் ஆலயங்கள் சரியான நேர அட்டவணைகளை பயன்படுத்தி, பக்தர்களுக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதைத் தவிர்க்க உதவினாலும் இதுபோன்ற சம்பவங்களைத் தவிர்க்கலாம்.

- ஊர்க்குருவி.

# மானிப்பாயில் வாள்,கோடரியுடன் நடந்து சென்ற இளைஞன் கைது!



யாழ்ப்பாணம், செப். 03

மானிப்பாய், கட்டுடையில் நேற்று முன்தினம் இரவு வாள் மற்றும் கோடரியுடன் இளைஞர் ஒருவரை கைது செய்துள்ளதாக மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற புலனாய்வு தகவலுக்கமைய மானிப்பாய், கட்டுடைப் பகுதிக்கு விரைந்தபோது வாள் மற்றும் கைக்கோடரியுடன் நடந்து சென்ற நபரையே பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

குறித்த நபர் வன்முறை செயலுக்காக இவ்வாறு சென்றிருக்கக்கூடும் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த 29 வயதான இளைஞருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

(அ)

# பிம்புத் நிதி நிறுவன உரிமம் இரத்து

கொழும்பு, செப். 03

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையினால் பட்டியலிடப்பட்ட பிம்புத் நிதி நிறுவனத்தின் உரிமம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட பல பொதுவான அறிவுறுத்தல்கள், விதிகள் தொடர்ச்சியாக மீறப்பட்டதனால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

மூலதன மட்டம் இல்லாமை, தரம் குறைந்த சொத்துகள், தொடர்ச்சியாக பதிவாகியுள்ள இழப்புகள் காரணமாக நிறுவனத்தின் நிதி நிலைமை மேலும் பலவீனமடைந்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில், பிம்புத் நிதி நிறுவன உரிமம் இரத்து செய்யப்படுவதுடன், அவர்கள் நிதி வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ)

# முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தின் நினைவு தின நிகழ்வு





யாழ்ப்பாணம், செப். 03

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வி.தர்மலிங்கத்தின் 38ஆம் ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்று காலை 7 மணியளவில் தாவடியில் அமைந்துள்ள அன்னாரின் நினைவுத் தூபியில் இடம்பெற்றது.

முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஆ.சி.கணேசவேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மலர் மாலை அணிவித்து அஞ்சலி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

ஈழத்தமிழரின் சமகால அரசியல் எனும் தலைப்பில் நினைவுப் பேருரையினை யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைப் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் ஆற்றினார்.

நினைவஞ்சலியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் முன்னாள் தவிசாளர்கள், உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# வவுனியாவில் கரடி தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்!

வவுனியா, செப். 03

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கரடி தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்கு சென்ற குடும்பஸ்தர் மீதே கரடி தாக்கியுள்ளது.

கரடியின் தாக்குதலுக்கு உள்ளான குறித்த குடும்பஸ்தர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

கரடியின் பிடியில் இருந்து தப்பி வந்த அவரை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, சிதம்பரபுரம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஆறுகளின் நீர்மட்டம் உயர்கிறது!

கொழும்பு, செப். 03

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக நாட்டில் உள்ள பல ஆறுகளின் நீர்மட்டம் உயர்வடைந்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், ஜின் கங்கையை அண்மித்த தவலம, பந்தேகம ஆகிய தாழ் நிலப் பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நில்வள கங்கையை அண்மித்த பனந்துகம தாழ்நிலப் பகுதிக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதிய அரசமைப்பு கட்டாயம்!

## அநுரகுமார திஸாநாயக்க உறுதி

கொழும்பு, செப். 03

**தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் புதியதொரு அரசமைப்பு நிச்சயம் இயற்றப்படும். அனைத்து இன மக்களும் ஐக்கியமாக வாழக்கூடிய யுகம் உருவாக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அநுரகுமார திஸாநாயக்க.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அஸ்திவாரமும் உடைந்து விழுந்த நாட்டில்தான் நாம் வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். எனவே, எமது ஆட்சியின்கீழ் இந்த அஸ்திவாரம் நிச்சயம் கட்டியெழுப்பப்படும். புதிய அரசமைப்பு, சட்டத்தின் ஆட்சி, ஊழல், மோசடியற்ற ஆட்சி, சிறந்த அரச சேவை, இன ஐக்கியம், ஏற்புடைய வெளிவிவகாரக் கொள்கை ஆகியவற்றின் ஊடாக இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

இன்றைய நவீன உலகில் தொழில்நுட்பம், வர்த்தகத்தால் உலகம் இணைந்துள்ளது. எனவே, தனித்து செயற்படும் வெளிவிவகாரக் கொள்கை இனியும் ஏற்புடையதாக அமையாது. எனவே,



பலமானதொரு வெளிவிவகாரக் கொள்கை உருவாக்கப்படும். வளங்களை விற்று தரப்புகளை திருப்திப்படுத்தும் கொள்கையாக அது அமையாது.

ஊழல், மோசடியற்ற அரச சேவையை மக்கள் எதிர்பார்க்கின்றனர், அனைத்து இன மக்களினதும் நீதியான உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய அரசமைப்பொன்று வேண்டும் எனவும் மக்கள் கோருகின்றனர். எனவே, மக்களின் எதிர்பார்ப்புகள் நிச்சயம் நிறைவேற்றப்படும். எமது எதிர்ப்பார்ப்பும் இதுவே.

மேற்கூறப்பட்ட நடவடிக்கைகள் ஊடாக அஸ்திவாரத்தை ஏற்படுத்திய பின்னர் பொருளாதாரக் கொள்கை, சுகாதாரக்கொள்கை பற்றி பேசலாம்.

அதேவேளை, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தோல்விகண்ட பொறிமுறையாக உள்ளது-என்றார். (அ)

# மீண்டும் போராட்டம் ஏற்படும் சாத்தியம்!

## நச்சரிக்கிறது மார்க்சிச லெனினிசக் கட்சி

யாழ்ப்பாணம், செப். 03

நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்படும் சாத்தியம் உள்ளதாக புதிய மார்க்சிச லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்தில்வேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிச்சயமாக நாட்டில் மீண்டும் நெருக்கடி ஏற்பட சாத்தியம் உள்ளதுடன் வரிசை ஏற்படும் அபாயம் தற்பொழுது தலை தூக்க வழி கோலுகின்றது.

வேறு நாடுகள் மற்றும் அமைப்புகளினூடாக கடன் வாங்குகின்றார்கள் தவிர கடன் கொடுப்பதாக இல்லை.

இந்த ஆட்சியாளர்கள் ஒரு கடனை அடைப்பதற்கு மேலும் பல கடன்களை பெறுகின்றார்கள்.

நாட்டினுடைய உற்பத்தி அதிகரிக்கப்பட்டால் மாத்திரமே கடன் தொகைகளை திரும்பச் செலுத்த முடியும்.

ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகள் நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஏற்றவாறு அமையவில்லை-என்றார். (அ)

# மனைவி, மகள்களால் தாக்கப்பட்டு கை, கால் கட்டப்பட்டிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் மீட்பு!

கொழும்பு, செப். 03

மனைவி மற்றும் மகள்களால் தாக்கப்பட்டு, கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில், இருந்த காவல்துறை கான்ஸ்டபிள் ஒருவரை ஆராச்சிக்கட்டுவ பொலிஸ் அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட குறித்த பொலிஸ் கான்ஸ்டபிள் சிலாபம் பொது வைத்தியசாலையில், சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கறுவாத் தோட்ட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய ராஜகந்தலுவ - மனவேரிய பகுதியைச் சேர்ந்த ஒருவர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மதுபோதையில் வீட்டுக்கு சென்று தமது மனைவி மற்றும் இரண்டு மகள்கள் மீது குறித்த கான்ஸ்டபிள் தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, மனைவி மற்றும் அவரது மகள்கள் அவர் மீது தாக்குதலை நடத்தி கை கால்களை கட்டியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மனைவி மற்றும் மகள்கள் மீது தாக்குதலை நடத்திய குற்றத்திற்காக, குறித்த கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சம்பவத்தில் காயமடைந்த மனைவியும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# வெளிநாட்டு அமைச்சின் புதிய இலத்திரனியல் தளம்!

கொழும்பு, செப். 03

நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் இருதரப்பு மற்றும் பலதரப்பு உடன்படிக்கைகள், ஒப்பந்தங்கள், மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவற்றை தொடர்ச்சியாகப் பின்பற்றுவதற்கான இலத்திரனியல் தளத்தை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய ஆகியோர் இந்த இலத்திரனியல் பின்தொடர்தல் பொறிமுறையை அங்குரார்ப்பணம் செய்து வைத்துள்ளனர்.

இலங்கைக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பான உறுதியான பின்தொடர்தல், நிகழ்நேரக் கண்காணிப்பு மற்றும் விரிவான செயற்திறன் மதிப்பீடு ஆகியவற்றை உறுதி செய்வதே இந்த இலத்திரனியல் தளத்தின் நோக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ரயில் போக்குவரத்துத்துறையை மறுசீரமைக்கும் குழு கூடுகிறது!

கொழும்பு, செப். 03

ரயில் போக்குவரத்து துறையை மறுசீரமைக்க நியமிக்கப்பட்ட குழு எதிர்வரும் 6ஆம் திகதி கூடவுள்ளது.

துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த குழுவில், இரண்டு முன்னாள் ரயில் பொது முகாமையாளர்கள் மற்றும் சமிக்ஞை திணைக்களத்தின் முன்னாள் பிரதானி உட்பட 14 பேர் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# விசேட வைத்தியர்களின் சேவையை 63 வயது வரை நீடிப்பது குறித்து மனு!

கொழும்பு, செப். 03

அரச சேவையில் உள்ள விசேட வைத்தியர்களின் சேவைக் காலத்தை 63 வயது வரை நீடிப்பது தொடர்பான சுற்றறிக்கையை நீதிமன்றில் மனுவொன்றின் ஊடாக முன்வைப்பதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளார்.

60 வயது நிரம்பிய வைத்திய நிபுணர்களுக்கு கட்டாய ஓய்வை வழங்குவதற்கு அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்குமாறு கோரி 176 வைத்திய நிபுணர்கள் தாக்கல் செய்த மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் எம்.சி.பி.எஸ்.மோரோயஸ் ஆகிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்தநிலையில் விசேட வைத்தியர்களின் சேவைக் காலத்தை 63 வயது வரை நீடிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும், இது தொடர்பில் சுகாதார அமைச்சரினால் வெளியிடப்படும் சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் மனுவொன்றின் மூலம் நீதிமன்றில் முன்வைக்கப்படும் எனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

# ஏற்றுமதி வருமானம் இவ்வாண்டில் வீழ்ச்சி

கொழும்பு, செப். 03

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டின் முதல் 7 மாதங்களுக்குள் ஏற்றுமதி வருமானமானது 10.3 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

6,891 மில்லியன் அமெரிக்க டொலராக ஏற்றுமதி வருமானம் பதிவாகியுள்ளது.

பெற்றோலிய உற்பத்திகள் சார்ந்து ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதற்கமைய, பெற்றோலிய உற்பத்திகள் சார்ந்த ஏற்றுமதி வருமானம் 24.5 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. (அ)

# வைத்தியர் பற்றாக்குறையால் அவசர சிகிச்சைகள் பாதிப்பு!

கொழும்பு, செப்

வைத்தியர் பற்றாக்குறை காரணமாக இரத்தினபுரி பொது வைத்தியசாலை சேவைக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் இரத்தினபுரி மாவட்ட குழு உறுப்பினர் வைத்தியர் மகேந்திர பண்டார இதனைத் தெரிவித்தார்.

இரத்தினபுரி பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் தற்போது விசேட வைத்தியர் எவரும் இல்லை என அவர் குறிப்பிட்டார்.

சுகாதார அமைச்சின் தரவுகளுக்கு அமைய கடந்த ஒன்றரை வருட காலப்பகுதியில் 272 விசேட வைத்தியர்கள் நாட்டைவிட்டு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

அதேநேரம் 514 ஏனைய வைத்தியர்களும் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலை தற்போது இரத்தினபுரி பொது வைத்தியசாலையிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக வைத்தியசாலை மற்றும் அவசர சிகிச்சை பிரிவு என்பவற்றில் சேவையாற்றிய பல விசேட வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர்.

விசேட வைத்தியர்கள் இன்மையால், அவசர சிகிச்சை பிரிவின் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பாரிய சிக்கல் நிலை காணப்படுவதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இரத்தினபுரி மாவட்டக் குழுவின் உறுப்பினர் வைத்தியர் மஹேந்திர பண்டார தெரிவித்தார். (அ)

# பெரமுனவுக்கு அடுத்த தேர்தலில் மக்களின் ஆணை கிடைக்காது!

## அடித்து கூறுகிறார் மைத்திரிபால

**கொழும்பு, செப். 03**

**“ஆட்சியையும், பதவிகளையும் கைவிட்டு ஓடி ஒளிந்த பொதுஜன பெரமுன கட்சி, அடுத்த தேர்தலில் மக்கள் ஆணை கிடைக்காது.” - என்று அடித்துக் கூறியுள்ளார் சிறீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.**

அத்துடன், அடுத்த தேர்தலில் ஆட்சியை கைப்பற்றுவதே தமது கட்சியின் எதிர்பார்ப்பு எனவும், இதற்காக முற்போக்கு சிந்தனையுடைய கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் எனவும் மைத்திரிபால சிறிசேன அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி எங்களுக்கு எந்த விதத்திலும் சவாலாக அமையாது, பதவிகளைவிட்டு ஓடி ஒளிந்தவர்களே அங்குள்ளனர். பிரதமர் பதவி விலகினர், அமைச்சரவை கலைந்தது. பலர் வெளிநாடு ஓடினர். இப்படியானவர்களுக்கு மக்கள் ஆணை இல்லை. ஆனாலும் தமக்கு மக்களை ஆணை இருப்பதுபோல் காண்பிப்பதற்கு முற்படுகின்றனர். மக்களை திரட்டிவந்து கூட்டங்களை நடத்துகின்றனர்.

அனைத்து முற்போக்கு சிந்தனை உடைய கட்சிகளுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம். புதியதொரு ஆட்சியை ஏற்படுத்த அணிதிரளுமாறு எமது கொள்கையுடன் ஒத்துபோகக் கூடிய, சமாந்தரக் கொள்கையுடைய இடதுசாரி சக்திகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். அதனை அடிப்படையாகக் கொண்டே எமது கட்சி மாநாடு அமையும்-என்றார். (அ)



# 2ஆவது தெங்கு முக்கோண வலயம் வடமாகாணத்தில் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, செப். 03

இலங்கையின் இரண்டாவது தெங்கு முக்கோண வலயம், வட மாகாணத்தில் ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு இன்று காலை கிளிநொச்சி மாவட்டத்தின் பளை மாதிரி தென்னை தோட்டம் பகுதியில் தெங்கு முக்கோண வலயம் அறிமுகம் செய்யப்பட்டது.

மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை இணைத்து இந்த புதிய தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னை வளர்ப்பாளர்கள் கௌரவிப்பு நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன தென்னங்கன்று நாட்டினார்.

இந்நிகழ்வில் தென்னை செய்கையாளர்களுக்கு ஒரு ஏக்கர் தென்னை செய்கைக்கான தென்னங்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இதன்போது உரையாற்றிய அமச்சர் ரமேஸ் பத்திரன, இரண்டு வருடங்களில் 3.5 மில்லியன் தென்னங்கன்றுகள் நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ராமேஸ் பத்திரன, பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அதிகாரிகள், தென்னை உற்பத்தியாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நன்கொடை அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரித்துள்ளது இந்தியா!

கொழும்பு, செப். 03

இலங்கை முழுவதும் அமுல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நன்கொடை அடிப்படையிலான அபிவிருத்தி திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை இந்திய அரசாங்கம் அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில், இந்திய - இலங்கை உயர் பெறுபேற்று சமூக அபிவிருத்தி திட்டம் என்ற கட்டமைப்பின் கீழ் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் 9 திட்டங்களுக்குமான இறுதி ஒதுக்கீடானது 50 வீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய தூதரகம்விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பைத் தொடர்ந்து குறித்த 9 திட்டங்களுக்குமான ஒட்டுமொத்த நிதி ஒதுக்கீடானது 3 பில்லியன் இலங்கை ரூபாவை எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் வரையிலான சகல துறைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாக இந்திய தூதரகம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சுதுமலையில் கிளைமோர் மீட்பு!



யாழ்ப்பாணம், செப். 03

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுதுமலையில் கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

வீட்டு வளவை சுத்தம் செய்யும் போது, நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் காணப்பட்ட கிளைமோர்கள் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

பொலிஸார் அங்கிருந்து 4 கிளைமோர்களை மீட்டனர்.

# நான்கு மாவட்டங்களுக்கு மண் சரிவு எச்சரிக்கை!

கொழும்பு, செப். 03

நாட்டின் நான்கு மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை இன்று வரை நீடிக்கப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களுக்கு இவ்வாறு மண்சரிவு அபாய முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு



கொழும்பு, செப். 03

நாட்டின் பல பகுதிகளில் இன்றும், மழை பெய்வதற்கான சாத்தியம் நிலவுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதற்கமைய மேல், மத்திய, சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக அளவில், மழை வீழ்ச்சி பதிவாகும் சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும்வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும்.

மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (அ)

# தமிழ் அரசு மன்னார் கிளைக்கு நேற்று புதிய நிர்வாகம் தெரிவு

மன்னார், செப். 03

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகம் தலைமையில், கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தின் ஐந்து பிரதேச கிளைகளினதும் நிர்வாகிகளின் பிரசன்னத்தோடு நடைபெற்ற பொதுக்கூட்டத்தின்போது, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, மன்னார் மாவட்ட கிளையின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், செயலாளராக சூசையப்பு துரம், பொருளாளராக முன்னாள் நானாட்டான் பிரதேச சபை தவிசாளர் பரஞ்சோதி , துணைத் தலைவராக ஜெயக்குமார், துணைச் செயலாளராக செல்வராணி சோசை தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை மாவட்ட கிளையின் செயற்குழு உறுப்பினர்களாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

# சாவகச்சேரியில் இரத்ததானம்



யாழ்ப்பாணம், செப். 03

மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஸின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை சாவகச்சேரியில் இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதில் பெருமளவானோர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

பிரகாஸின் நண்பர்களின் ஏற்பாட்டில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இரத்ததான நிகழ்வு இடம்பெற்றது. (அ)



வடக்கு பிராந்தியத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது தொடர்பாக இலங்கை உள்வரும் சுற்றுலா நடத்துவோர் சங்கம் நேற்றுமுன்தினம் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை சந்தித்து கலந்துரையாடியிருந் தது. கொழும்பில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் சங்கத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (அ-2)

ஈழநாடு
Eelanadu
03.09.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# சிங்கப்பூரின் தமிழ் ஜனாதிபதி

தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகரத்தினம், சிங்கப்பூரின் ஒன்பதாவது, ஜனாதிபதியாக தெரிவாகியிருக்கின்றார். சிங்கப்பூர் பல்வேறு இனக்குழுக்களைக் கொண்டிருக்கும் நாடு. பிரதான இனக்குழுவாக சீனர்களே இருக்கின்றனர். சிங்கப்பூரின் சிற்பியென்று வர்ணிக்கப்படும், காலம் சென்ற லீ குவான் யூவின் தூரநோக்கும், ஆளுமையான தலைமைத்துவத்தின் விளைவாகவே, ஒரு தமிழர் அந்த நாட்டில் ஜனாதிபதியாக வரமுடிந்திருக்கின்றது.

இதிலுள்ள ஆச்சரியமான விடயம் – ஒரு காலத்தில், இலங்கை போன்று சிங்கப்பூரை, கட்டியெழுப்ப வேண்டுமென்னும் கனவை, லீ குவான் யூ, வெளிப்படுத்தியிருந்தார். அந்தளவுக்கு இலங்கை அன்றைய சூழலில் ஆசியாவில் முன்னுதாரணம் மிக்க நாடாக இருந்தது. ஆனால் பிற்காலத்தில், நல்லவேளை – இலங்கை போன்றதொரு ஆபத்துக்குள் சிக்கிவிடவில்லையென்று – லீ குவான் யூ, எண்ணிக்கொள்ளுமளவிற்கே, இலங்கையின் நிலைமைகள் தரம் தாழ்ந்து போனது.

சிங்கப்பூரின் இன்றைய வளர்ச்சிக்கும் எழுச்சிக்குமான அடிப்படையான காரணம் என்ன? நாட்டைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட, லீ குவான் யூ, ஒரு விடயத்தில் உறுதியாக இருந்தார். அதாவது, இனவாத, மதவாத சிக்கலுக்குள் ஒருபோதும் சிங்கப்பூர் விழுந்து விடக் கூடாது. அவ்வாறு விழுந்தால், சிங்கப்பூர் ஒருபோதுமே முன்னேற முடியாது. இதற்கான தலைமைத்துவத்தை வழங்குவது பற்றி மட்டுமே அவர் சிந்தித்தார் – அந்த அடிப்படையில் மட்டுமே முன்னேறினார்.

இன்று சிங்கப்பூர் அனைத்து இன மக்களையும் ஒரு மக்களாகக் கொண்டு, முன்னேறிய நாடாக திகழ்கின்றது. அரசியல்வாதிகளை, அவர்களது – திறமையின் அடிப்படையில் மட்டுமே, மக்கள் தீர்மானிக்கின்றனர். அவர் சீனரா, தமிழரா என்றெல்லாம் அங்கு பாகுபாடுகள் இல்லை. இதன் காரணமாகவே சிங்கப்பூரால் பொருளாதார நிலையில் உயர்ந்து நிற்க முடிகின்றது.

ஒரு காலத்தில் சிங்கப்பூருக்கு முன்னுதாரணம் மிக்க நாடாக திகழ்ந்த, இலங்கைத் தீவோ, இனவாத, மதவாத சிக்கலுக்குள் சிக்கி, சின்னாபின்னமாகியதன் விளைவை அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. இனங்களுக்கிடையிலான பிரச்னைகளை ஆக்கபூர்வமாக தீர்த்துக் கொள்ளும் பொறிமுறையற்ற அரசியலால், உள்நாட்டு யுத்தமொன்றிற்கு முகம் கொடுத்து, அந்த யுத்தத்தில் வெற்றிபெறுவதற்காக உலகெங்கும் கடன்களை வாங்கி, மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கி, அதிலிருந்து மீள்வதற்காக நாடுகளின் காலடியில் வீழ்ந்து கிடக்கின்றது. ஆனால் இந்த நிலையில் கூட, கற்கால சிந்தனையுள்ள இனவாத மற்றும் மதவாத சக்திகளின் பிடியிலிருந்து வெளியில் வர முடியாமல் இருக்கின்றது. கற்கால சிந்தனையை பாதுகாப்பது பற்றித்தான் இப்போதும் சிங்கள அரசியல்வாதிகள் சிந்திக்கின்றனர்.

சிங்கள ஆட்சியாளர்களை பொறுத்தவரை நாட்டை முன்னேற்ற பாதையில் வளர்ப்பதை விடவும், தமிழ் மக்களை இரண்டாம் நிலையில் வைத்துக் கொள்வதை மட்டுமே தங்களின் ஒரேயொரு அரசியல் வேலைத்திட்டமாகக் கொண்டிருந்தனர். அது இன்றுவரையில் தொடர்கின்றது. இப்போதும் இந்த நாடு யாருக்கு சொந்தமானதென்னும், கற்கால விவாதத்திற்குள்தான், சிங்கள ஆட்சியாளர்கள் சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் சிங்கப்பூரில் இன்று நிகழ்ந்திருப்பது இலங்கையில் எப்போதோ நடந்திருக்கவேண்டும். ஒரு பல்லின நாடாக இலங்கையை பாதுகாத்திருந்தால், அனைத்தின மக்களினதும் சரிசம பங்களிப்புடன், இலங்கைத் தீவு உலகில் தலைசிறந்த நாடாக திகழ்ந்திருக்கும். ஆனால் இன்றோ, நிலைமை தலைகீழாகிவிட்டது. சிங்கப்பூரின் வளர்ச்சியை, அதன் முன்னேற்றத்தை, அந்த நாட்டு மக்களின் ஒற்றுமையை பெருமூச்சுடன் நோக்கும் நிலையிலேயே இலங்கையர்கள் இருக்கின்றனர்.

பல்லினங்களை கையாளும் அறிவுப் பெட்டகமாக சிங்கப்பூர் திகழ்கின்றது. அறிவை தொலைத்து, வெறும் இனவாதத்திற்குள் சிக்குப்பட்டுக் கிடக்கும் நாட்டுக்கு உதாரணமாக, இலங்கை திகழ்கின்றது.

# ஆசிரியர் கீதத்தை இயற்றிய வாமதேவனுக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கௌரவம்



*யாழ்ப்பாணம், 03*

பிரபல சங்கீத வித்துவானும் ஓய்வு பெற்ற இசை ஆசிரியருமாகிய பொன் சிறீ வாமதேவனுக்குக் கலாசாலையில் கௌரவம் வழங்கப்பட்டது

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டை ஒட்டி நடைபெற்று வரும் வாராந்த ஒன்றுகூடல் சிறப்புரை தொடரில் கடந்த வியாழக்கிழமை 3 ஆம் திகதி ஓய்வுபெற்ற இசை ஆசிரியரும் கலாசாலையின் பழைய மாணவருமாகிய பொன் சிறீ வாமதேவன் உரையாற்றினார்.

இதன் போது அவர் ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு மிக்கவர்களாக சேவையாற்றவேண்டும் என்றும் பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலை சமூகத்தினர் தாமாகவே உணர்ந்து ஆசிரியர்களுக்கான கௌரவிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆசிரியர்களாக கேட்டு கௌரவத்தை பெற்றுக் கொள்வது அழகல்ல என்றும் தெரிவித்தார். இன்று பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரிய தினம் ஆசிரியர்களாலேயே ஒழுங்கு செய்யப்படுகிறது. இது ஏற்புடையதல்ல என்று தெரிவித்தார்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கலாசாலையின் மூத்த விரிவுரையாளர் பொ. சற்குணநாதன் அதிதி அறிமுக உரையை ஆற்றினார்

நிகழ்வை ஆங்கில நெறி ஆசிரிய மாணவர்கள் ஏற்பாடு செய்து நடத்தினர். (அ)

# வடக்கு-கிழக்கு மக்களின் குடிதண்ணீர் தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை



*கொழும்பு, செப். 03*


வடக்கு- கிழக்கு மாகாணங்களில், மக்களின் குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக துரித, இடைக் கால மற்றும் நீண்ட கால அடிப்படையில், நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டின் குடிதண்ணீர்த் தேவையில் 62 சதவீதத்தை நிறைவு செய்துள்ளோம்.

கடந்த காலங்களில், தேசிய நீர்வழங்கல் அமைச்சு என்ற வகையில், கிராமங்களுக்கே சென்று மக்களின் குடிதண்ணீர்த்தேவை தொடர்பில் ஆராய்ந்து, பல்வேறு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலமே, இந்த 62 சதவீத அடைவை எட்டியுள்ளோம். அதற்காக சபையின் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட்டனர். தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் சேவைகளை வழங்கமுடியாத கஷ்டப் பிரதேசங்களிலும் மற்றும் மலையகத்தின் பல்வேறு இடங்களிலும், அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களம் மூலம் குடிதண்ணீரை வழங்க பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் பெரும்பாலானவை தற்போது நிறைவடையும் நிலையில் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள மக்களின் குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக, துரித, இடைக்கால மற்றும் நீண்டகால அடிப்படையில், நனோ தொழில்நுட்ப நீர்சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. சிறுநீரக நோயாளிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களுக்காக, இந்த நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன-என்றார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -93

# சமூக நலன்சார் நோக்கின்றி...!

**கணபதி சர்வானந்தா**

நல்லூரில் திருவிழாக்கள் நன்றாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. கோயில் சுற்றுவட்டாரத்தில் நெகிழி (பிளாஸ்ரிக்) பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது என்ற பொது அறிவித்தல் ஒன்றை மாநகரசபை முன்னெடுத்து வருகிறது. இருந்தும் கோயிலை அண்மித்த பகுதியில் நெகிழிப் பாவனை குறைந்தபாடில்லை. முழுக்க முழுக்க வியாபாரத்தை மட்டும் நோக்கமாகக் கொண்டவர்களே கடைகளை பணம் செலுத்தி எடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பணம் பண்ணுவதே முக்கிய குறியாக இருக்குமிடத்து அவர்கள் ஏன் சமூக நலன்பற்றிச் சிந்திக்கப் போகிறார்கள்?

சமூக நலன் நோக்கிக் கொண்டுவரப்படும் திட்டங்கள் பல எதிர்ப்புக்குள்ளாகி இருக்கின்றன. எதிர்ப்பின் பின்னணி பற்றி ஆராய்ந்தவிடத்துப் பல ஆச்சிரியமான தகவல்கள் கிடைக்கப் பெற்றோம்.

அண்மையில் வெள்ளி, ஞாயிறு கிழமைகளில் தனியார் வகுப்புகளுக்குத் தடை விதித்து ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அதனைச் சிலர் எதிர்த்து சமூக வலத் தளங்களில் தமது கருத்தைப் பதிவிட்டிருந்தனர். அதே சமயம் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சங்கமும் தமது எதிர்ப்பினைத் தெரிவித்து அதனை மறுபரிசீலனை செய்யுமாறு அரசாங்க அதிபருக்கு ஒரு கடிதத்தை எழுதினர். அந்த நிறுவனம் எந்தவிதத்திலும் நேரடியாகக் கல்வியோடு சம்பந்தப்பட்டதல்ல. இருந்தும் அதனைப் படித்தபோது அது ஏதோ ஒருவிதத்தில் சமூக அக்கறையோடு எழுதப்பட்டது என்றுதான் எண்ணினேன். பின்பு அது பற்றி ஆச்சரியப்படக் கூடிய செய்தி ஒன்று எனக்குக் கிட்டியது. அந்தச் சங்கத்திலுள்ளவரின் உறவினர் ஒருவர் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை நடத்துவருகிறார் என்பதே அச் செய்தியின் சராம்சம்.

எனவே சமூக அக்கறையோடு கொண்டுவரப்படுகின்ற சட்டங்களை எதிர்ப்பவர்கள் பற்றி மக்கள் வழிப்புணர்வோடு இருக்க வேண்டும். அது பற்றி கருத்துகளை தெரிவிப்பதற்கு அனைவருக்கும் உரிமையுண்டு. இருந்தும் எதிர்பதற்குரிய காரணத்தை வலுவாக முன்வைப்பது அவர்கள் கடமையாகும். சுய நல நோக்கோடு அறிக்கை விடுவதும், கருத்தை முன்வைப்பதுவும் சமூகத்தைச் சீரழிக்கின்ற வழிமுறைகளில் ஒன்று.

விசேட மாக யாழ். குடாநாட்டில் நடைபெறுகின்ற பொதுமக்கள் நலன் திட்டங்களைச் சீர் தூக்கிப் பார்ப்போமானால் அதற்குள் ஏதோ ஒரு சுய நோக்கு பின் நிற்பதை அவதானிக்க முடிகிறது.

பொது மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவுகிறோம் என்ற போர்வையில் நிதி நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களை ஆராய்ந்து அறிந்தால் அது ஒரு சமூகத்தைப் பலவீனப்படுத்தும் திட்டங்கள் என்ற உண்மையைச் சென்றடையலாம். அதிலும் நகை அடவுகளை ஊக்குவிக்கும் கடன் திட்டங்களை எவ்விதத்திலும் நாம் அனுமதிக்க முடியாது. அடவுக்காகக் கொடுக்கும் நகைகள் பல திருப்பப் படாமலே ஏலத்தில் போய் விடுவதாக ஒரு செய்தியுண்டு. ஏனெனில் பல குடும்பங்களின் முக்கிய சேமிப்பாகவும் பொருளாதாரமுமாகவும் இருக்கும் நகைகளை இழப்பதை அனுமதிப்பதென்பது சமூகத்தைப் பல வீனமாக்குவதற்குத் துணைபோவதை ஒத்தது என்பது எனது எண்ணம்.

ஒரு சமூகத்தைப் பலப்படுத்த என்னென்ன வழிகளைச் செய்யலாம்? ஒரு தனி நபராக எப்படிப் பணியாற்றலாம்? என்பதற்கு உதாரணமாக ஒரு முகநூல் பதிவொன்றைக் கண்டேன். அது தமிழ்நாட்டிலுள்ள ஒரு உணவுச் சாலை உரிமையாளர் பற்றியது. அவர் மொழியிலே அதனைப் படிக்கலாம்.

சமீபத்தில் சேலத்தில் சாலையோரக் கடையொன்றில் சாப்பிடச் சென்றிருந்தேன். சாப்பாடு தயாராக இருந்தது, மதியநேரம் என்பதால் சாம்பார் சாதம், தயிர்ச்சாதம், தக்காளிச் சாதம், பிரிஞ்சி, சாப்பாடு என எல்லாம் மணக்க மணக்க இருந்தது. கடைக்காரரிடம் சாம்பார்ச்சாதம் தரும்படி கேட்டேன், அவரோ சிறிதுநேரம் காத்திருக்கும்படி சொன்னார், என்ன விஷயம் எனக் கேட்டதற்கு, வாழையிலை காலியாகிவிட்டது கடையில் வேலைசெய்பவர் வாழையிலை வாங்கிவரச் சென்றுள்ளதாகவும், அவர் வந்தவுடன் தருகிறேன் என்றார். சாப்பிட வந்தவர்களில் ஒருவர் "இப்பொழுதுதான் பிளாஸ்டிக் கவர்கள் வந்துருக்கே, அதிலே பரிமாறலாமே!" என கேட்டார்.

கடைக்காரர் சிரித்துக்கொண்டே "இன்னைக்கு நல்ல சாப்பாடு சாப்பிட்டாலே பல வியாதிகள் வருகுது, இதுல பிளாஸ்டிக் கவர்ல சாப்பாட்டைச் சூடாக வச்சுச் சாப்பிட்டா என்ன வியாதி வரும் தெரியுங்களா? கேன்சர் கூட வரலாமுன்னு சொன்னார், நான் படிக்காதவன் சார் என்ன வியாதி வரும் வராதுன்னு தெரியாது, பிளாஸ்டிக்ல சாப்பாடை சூடா வச்சி சாப்புட்றது உடம்புக்கு கெடுதின்னு தெரியும் , வாழையிலையில் சாப்பிட்டா நல்லதுன்னு தெரியும், என் கடையில பெரிய பணக்காரன் சாப்பிடபோறதுமில்லை வியாதிவந்தா நல்ல ட்ரீட்மெண்ட் எடுத்த்துக்கறதுக்கு, சாதாரண ஆளுங்கதான் சாப்பிடவருவாங்க அவங்களுக்கு பெரியவியாதிவந்தா சமாளிக்க முடியாதுங்க, ஒரு ஆளுக்கு வாழையிலை 1 ரூபா செலவாகும், வாழையிலைக்கு பதிலா பிளாஸ்டிக் சீட் யூஸ் பண்ணினா மாசம் 200 லிருந்து 300 ரூபா மிச்சமாகும் அந்தப் பணத்தை வச்சுக் கோடிஸ்வரன் ஆகா முடியாது,

சமையல்கூட முடிஞ்சளவுக்கு நல்ல பொருளை வச்சுத்தான் செய்யுறேன், வாழையிலையைப் பாவிக்கிறதால நான் போடுற குப்பை கூட மத்த ஜீவராசிக்குச் சாப்பாடுதானுங்க, மாடு வந்து வாழையிலையைச் சாப்பிட்டிரும். இடமும் சுத்தமாயிடும், இதுக்கும் மேல என் கடைல பெரும்பாலும் இளவயதுப் பசங்க சாப்டுவாங்க, அவங்க பெரும்பாலும் சாப்பாடு வெளியிலதான் சாப்புடுவாங்க. நம்ம கடையில சாப்பிடும்போதாவது நல்ல சாப்பாடு சாப்பிடட்டுமென்றுதான் பிளாஸ்டிக் பயன்படுத்துவதில்லை. என்னால சாப்பாட்ல விஷத்தை (பிளாஸ்டிக்) கலக்க மனசுவரல்லை என்று சொல்லிட்டுக் கடைசியில் வாழையிலையில் வச்சுத்தான் சாப்பாடு கொடுத்தார். அவர் கடையில பார்சல் சாப்பாடு கூட வாழ இலைலதான் குடுக்குறாரு. இன்னைக்கு உணவு தயாரிக்கும் பெரிய நிறுவனங்கள் கூட சாப்பாடு கெடாம இருப்பதற்கு என்ன வழின்னு யோசிக்கிறாங்களே தவிர, சாப்புட்றவங்க நலனைக் கண்டுக்கிறதில்ல. ஆனா சாதாரணமா படிக்காத ஒருத்தர் இவ்வளவு யோசிப்பாருன்னு நெனச்சுக்கூட பாக்கல . காசு சம்பாதிக்க என்னவேணுன்னாலும் செய்யலான்னு மனசாட்சி இல்லாம சாப்பாட்டு பொருள்ல கலப்படம் செய்யுற இந்தக் காலத்துல, இப்படியும் ஒருத்தரா? என ஆச்சரியமாக இருந்தது.

உண்மையில் இது ஒரு ஆச்சரியமான விடயம் தான். அவர் சிந்தனையைப் பாராட்டலாம்.

●

# இந்தவார ராசிபலன் 03.09.2023 - 09.09.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 17

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : சதுர்த்தி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

பணப்பரிவர்த்தனை மற்றும் பயணங்களை தவிர்ப்பது நல்லது. பணப் பற்றாக்குறை இருந்தாலும், அதை சாமர்த்தியமாக சமாளித்து விடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள், உயரதிகாரி உத்தரவின்பேரில் வெளியூர் சென்று பணியாற்ற வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு, வேலைப்பளு அதிகரிக்கும். அதே நேரம் வருமானம் போதுமானதாக இருக்காது. கூட்டுத் தொழில் நன்றாக நடைபெறும். தெய்வீக சிந்தனை மேலோங்கும்

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எவ்வளவு வரவு இருந்தாலும் செலவழிந்தபடியே இருக்கும். சொல்லில் இனிமை சேர்த்துக் கொண்டால் நடப்பவை நல்லவையாக அமையும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பொறுப்புகள் அதிகமாகும். அவசியமான பணிகள் அவசரத்தை ஏற்படுத்தும். சொந்தத்தொழில் செய்பவர்கள் சோர்வின்றி பணியாற்றி ஆதாயத்தை அதிகரித்துக் கொள்வர். புதிய வாடிக்கையாளர் வருகை தொழிலை மேம்படுத்தும். கூட்டுத் தொழிலில் லாபம் பெருகும். பிள்ளைகளின் வேலை பற்றி நற்செய்தி வரும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதிர்பார்த்த பண உதவிகள் சற்று தள்ளிப் போகலாம். இருந்தாலும் எதிர்காலத்தில் ஏற்றமிகு வாழ்க்கை அமையும்படி பார்த்துக் கொள்வீர்கள். சகோதர வழியில் கருத்துவேறுபாடு ஏற்பட்டு மறையும். உத்தியோகத்தில் இருந்த இறுக்கமான சூழ்நிலை மாறும். எதிர்பார்த்த கடன் தொகை கைக்கு வந்துசேரும். தள்ளிவைத்த வேலையை உடனடியாக செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் நன்றாக நடைபெறும். புதிய வாடிக்கையாளர்கள் மூலம் தொழில் ரீதியான முன்னேற்றம் ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

அவ்வப்போது சிறுசிறு தடங்கல்களை சந்திக்க நேரிடும். பண வரவு சிறு தாமதத்திற்குப் பின் வந்துசேரும். உத்தியோகஸ்தர்களில் சிலருக்கு பொறுப்புகள் அதிகரிக்கலாம். அவசரப் பணிக்காக வெளியூர் செல்லும் நிலை ஏற்படும். பதிவேடுகளில் கவனம் தேவை. சொந்தத் தொழில் செய்பவர்கள், வேலைப்பளுவால் ஓய்வின்றி உழைக்க வேண்டியதிருக்கும். புதிய வாடிக்கையாளர்களால் தொழில் முன்னேற்றம் உண்டு. கூட்டுத்தொழிலில் பணவரவு அதிகரிக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

உத்தியோகஸ்தர்கள், உயரதிகாரிகளிடம் வைத்த கோரிக்கை நிறைவேறும். நீண்டகால நண்பர் ஒருவர் அலுவலகம் வந்து உங்களை சந்திக்கலாம். அவசியமில்லாத பேச்சுகளால் அவதூறை சந்திக்க நேரிடும். சொந்தத் தொழில் செய்பவர்கள் சுறுசுறுப்பாகப் பணிகளில் ஈடுபடுவர். விரைவான செயல்பாட்டால், வாடிக்கையாளரின் பாராட்டைப் பெறுவீர்கள். கூட்டுத்தொழில் வியாபாரம் நன்றாக நடைபெறும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

நண்பர்களும், உறவினர்களும் ஆதரவாக இருப்பார்கள். பண வரவுகள் எதிர்பார்த்தபடி வந்தாலும், செலவுகள் அதிகமாகும். சில விஷயங்களில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. உத்தியோகஸ்தர்கள், தங்கள் பொறுப்புகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். நீங்கள் செய்யும் சிறிய தவறும், உயரதிகாரியால் கண்டனத்துக்குரியதாக மாறலாம். நண்பர்களுக்குள் சிறு மன வருத்தம் ஏற்படும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வேலைகளில் அதிக ஆர்வம் காட்டினாலும், குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பண வரவுகளில் தாமதங்கள் ஏற்படும். சகோதர வழியில் சிறு மனவேறுபாடு ஏற்படக்கூடும். தாயாரின் உடல் நிலையால் மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள், ஊழியர்களை அனுசரித்துச் செல்வது அவசியம். முக்கிய வேலை ஒன்றை உடனடியாக செய்ய வேண்டிய நிர்பந்தம் உண்டாகும். சகப் பணியாளர்களுடன் சுமுகமாக நடந்துகொள்ளுங்கள். சொந்தத் தொழில் செய்பவர்கள், தங்கள் பணிகளில் கவனமாக செயல்படுங்கள். உதவியாளரின் பணிகள் மகிழ்ச்சி தருவதாக இருக்காது.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

தள்ளிப் போட்டிருந்த காரியங்களை, நேரடியாகச் சென்று நிறைவாகச் செய்து முடிப்பீர்கள். பண வரவுகள் இருந்தாலும், செலவுகளும் அதிகமாகும். பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான பிரச்சினைகள், பெரியவர்களின் அறிவுரையால் முடிவுக்கு வரும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், அவசர பணியொன்றை அதிகாரிகள் உத்தரவின் பேரில் உடனடியாக செய்வீர்கள். ஒருசிலருக்கு சக ஊழியரின் பணியையும் சேர்த்து செய்ய வேண்டியதிருக்கும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் பேச்சாற்றலால் நிறைவடையாத காரியங்களை, தீவிர முயற்சியால் முடிப்பீர்கள். பண வரவுகள் இருந்தாலும், எதிர்பாராத செலவுகளை சந்திக்கும் நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். தள்ளி வைத்த வேலை ஒன்றை, அதிகாரியின் உத்தரவால் உடனடியாகச் செய்வீர்கள். பொருளாதார முன்னேற்றம் ஏற்படும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சாமர்த்தியம் மிக்க நீங்கள், நண்பர்களின் துணையோடு செயல்பட்டு காரியங்களில் வெற்றி பெறுவீர்கள். தாய்வழி உறவு மூலம் சிறு பிரச்சினை உருவாகலாம். உத்தியோகஸ்தர்கள், உயர் அதிகாரிகளுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. அலுவலகத்தில் முக்கிய பொறுப்புக்கு உங்கள் பெயர் பரிந்துரைக்கப்படலாம். சொந்தத்தொழில் சிறப்பாக நடைபெறும். பணிகளைக் கவனமாகச் செய்யாவிட்டால் மீண்டும் செய்ய வேண்டியதிருக்கும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


சில பணிகளில் முயற்சியின் பலன் தள்ளிப் போகலாம். அதிக செலவினால் கையில் உள்ள பொருள் கரைந்து, கடன் வாங்கி அவசரத் தேவைகளை சமாளிப்பீர்கள். உத்தியோகஸ்தர்களின் பணிகளில் சிறு மாறுதல் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் புதிய பொறுப்புகள் கிடைக்கும். வெளியூர் பயணத்தின்போது பதிவேடுகளில் கவனம் தேவை. அனைவரிடமும் கனிவாக நடந்து கொள்ளுங்கள். சொந்தத் தொழிலில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்களை கண்காணிப்பது விரயத்தை தடுக்கும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

எதிர்பார்க்கும் பண வரவு வந்து, கொடுக்கல் – வாங்கலில் ஏற்பட்ட குழப்பத்தை சரிசெய்வீர்கள். நெருங்கிய உறவினருக்கு பண உதவி செய்ய நேரிடும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் திறமையோடு செயல்பட்டு, உயரதிகாரிகளின் பாராட்டைப் பெறுவர். முக்கிய பணிக்கு உங்கள் பெயர் சிபாரிசு செய்யப்படலாம். பதிவேடுகளை கவனமாக பாதுகாக்காவிட்டால் பிரச்சினைகளை சந்திப்பீர்கள். சொந்தத் தொழில் நன்கு நடைபெற்றாலும், போதிய ஆதாயம் கிடைக்குமா என்பது சந்தேகம்தான். கூட்டுத் தொழிலில் லாபம் அதிகரிக்கும். பணியாளர்களின் தேவை அறிந்து உதவிகளைச் செய்வீர்கள்.

# கொழும்பு விஜயத்தை கடைசி நிமிடத்தில் கைவிட்ட இந்திய பாதுகாப்பு அமைச்சர்!

## வலுவான காரணங்கள் ஏதும் இருக்கலாம்



சென்னை மடல்
-பகவான் சிங்-



பாரதத்தின் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த இரண்டு நாள் பயணம் குறித்து ஊடகங்களில் பெருமளவு செய்தி வெளியாகியிருந்த நிலையில், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தென்னெல்லையில் உள்ள அண்டை நாட்டிற்கான பயணம் இப்போது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. வெள்ளிக்கிழமை காலைச் செய்திகளில் கூட, மிக உற்சாகத்துடன் பாதுகாப்புத் துறை அமைச்சகம், செப் ரெம்பர் 2ஆம்,3 ஆம் திகதிகளில் அமைச்சரின் இலங்கைப் பயணம் மிகவும் மகத்துவம் வாய்ந்தது என்றும் இலங்கையுடனான இணக்கமான நல்லுறவின் தொடர்ச்சியை வலியுறுத்துவதாக இருக்கும் என்றும் செய்திக் குறிப்பு வெளியிட்டிருந்தது. இலங்கையின் ஜனாதிபதியும் பாதுகாப்புத் துறை அமைச்சருமான ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரை இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சந்திப்பார் என்று அந்தச் செய்தி குறிப்பு கூறியது. மேலும், “இலங்கை - இந்தியா இடையிலான பாதுகாப்புத் துறை உறவுகளின் அனைத்து அம்சங்களும் இந்தச் சந்திப்புகளின் போது மறு ஆய்வு செய்யப்படும். மத்திய இலங்கையில் உள்ள நுவரெலியாவுக்கும் கிழக்குப் பகுதியில் இருக்கும் திருகோணமலைக்கும் அமைச்சர் செல்வார்” என்றும் அமைச்சகம் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், அன்று மாலையே அமைச்சர் தனது முன்னுரிமைகளை மாற்றிக்கொண்டார். மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டிருந்த, பெரிதும் விளம்பரப்படுத்தப் பட்டிருந்த இலங்கைப் பயணத்தைவிட அதி முக்கியமான விடயங்கள் வந்துவிட்டதால், இந்தப் பயணத்தை ஒத்தி வைத்திருக்கலாம் என்று நாம் நம்பலாம். “தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கைப் பயணம் ஒத்தி வைக்கப்படுகிறது. இந்திய - இலங்கை இருதரப்பு உறவை வலுப்படுத்துவதில் அமைச்சர் உறுதிபூண்டிருக்கிறார். மிக விரைவில் இலங்கைப் பயணம் மேற்கொள்ள அவர் ஆவல்கொண்டிருக்கிறார்.” என்று வெள்ளி மாலை வெளியான அமைச்சக அறிக்கை கூறுகிறது.

அமைச்சரின் பயணத்தையொட்டி, இந்தியக் கடற்படையின் முதன்முதலில் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்ட வழிநடத்தப்படும் ஏவுகணை அழிக்கும் (GUIDED MISSILE DESTROYER) கப்பலான ஐ என் எஸ் தில்லியை கொழும்புவிற்கு இந்தியா அனுப்பியிருந்தது. செப்ரெம்பர் 1 வெள்ளியன்று அக் கப்பல் கொழும்பு வந்தடைந்தது. இலங்கைக் கடற்படையுடன் கூட்டுப் பயிற்சிக்கும் இந்தியப் படையினர் தயாராக இருந்தனர், அமைச்சரால் நடத்தப்படும் பல்வேறு பிரம்மாண்ட நிகழ்வுகளுக்கும் அக்கப்பலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இது நடக் காதது வேதனை.

வார இறுதியில் அமைச்சர் மேற்கொள்ளவிருந்த இலங்கைப் பயணம் குறித்த செய்தி இந்திய ஊடகங்களில் வெளியானதையடுத்து, தீவு தேசத்தின் மீதான சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுக்குள் வைக்கவே இந்தப் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது என்ற நியாயமான காரணம் தான் ஊகிக்கப்பட்டது. சீன ஆய்வுக் கப்பல் ஷி யான் 6, அக்டோபர் மாதத்தில் 17 நாட்கள் கொழும்பு மற்றும் ஹம்பந்தோட்டா துறைமுகங்களில் நின்று ஆழ்கடல் ஆய்வை மேற்கொள்ள இலங்கை அனுமதித்திருப்பது பற்றிய செய்திகள் சில நாட்களுக்கு முன் வெளியானதிலிருந்து இந்திய ஊடகங்கள், பாதுகாப்பு மற்றும் உத்தி பற்றிய ஆய்வாளர்கள் இடையே மிகுந்த கவனம் பெற்றிருந்தது.

சீனாவின் ஆய்வு, கண்காணிப்பு மற்றும் பலிஸ்டிக் ஏவுகணைக் கண்காணிப்புக் கப்பல்களுக்கு இலங்கை தனது ஆழ்கடல் துறைமுகங்களில் தடையற்ற அனுமதியளிப்பது குறித்த இந்தியாவின் தீவிரக் கவலை இலங்கைக்கு அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜூலை மாதம் அதிபர் ரணில் விக்கிரமசிங்க டில்லி வந்த போதும், சீனாவின் கட்டுக்கடங்காத விரிவாக்கவாதத்தால் இந்துமாக்கடல் பகுதியில் அதிகரித்து வரும் பதற்றம் மற்றும் இந்தியாவின் கேந்திர மற்றும் பாதுகாப்புக் கவலைகளை இலங்கை குறைவாக மதிப்பிடக்கூடாது என்று பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவரிடம் வலியுறுத்தியிருந்தார்.

இந்தியாவின் எதிர்ப்புக் குரலையடுத்து, ஷி யான் 6 கப்பல் நிறுத்தத்தை நவம்பர் வரை ஒத்திப்போட இலங்கை, சீனாவிடம் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.



அக்டோபர் இறுதியில் பீஜிங்கில் நடைபெறவிருக்கும் பெல்ட்-ரோடு இனிஷியியேடிவ்(BRI) உச்சி மாநாட்டில் ரணில் பங்கேற்ற பிறகு இந்த முடிவு தெரியும். அதிக வட்டி விகிதத்தில் சிக்கலான கடன் வலையில் சிக்கியுள்ள இலங்கை, பிரம்மாண்ட செலவில் மேற்கொள்ளப்படும் உட்கட்டமைப்புத் திட்டங்களை சீனாவிடம் ஒப்படைத்திருக்கும் நிலையில், ஷி யான் 6 கப்பல் இலங்கையில் வந்து அந்நாட்டுக் கடற்படைக் கப்பல்களுடன் இணைந்து கடற்படுகையில் கூட்டு ஆய்வு செய்யும் திட்டத்திற்கு ஊறு விளைவித்து அதிபர் ஷீ ஜின்பிங்கின் கோபத்துக்கு ஆளாக, ரணில் துணியமாட்டார். ஆப்பிரிக்காவிலும் ஆசியாவிலும் உள்ள ஏழை மற்றும் வளர்ச்சியடையாத நாடுகளின் சொத்துகளைக் கபளீகரம் செய்து வரும் சீனாவின் பி.ஆர்.ஐ திட்டத்தால் கடனில் மூழ்கிப்போன அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்குச் சீனாவுக்குத் தாரை வார்த்தது ரணில் தான் என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

இந்தியாவின் கடும் எதிர்ப்பையும் மீறி, அப்பிராந்தியத்தில் இந்தியாவின் பாதுகாப்புத் தேவைகளில் எந்த சமரசமும் இல்லை என்று தான் உறுதியளித்திருந்தும் கூட, சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதம் சீன அதிபர் ஷீயின் அழுத்தத்துக்குக் கட்டுப்பட்டு ஹம்பந்தோட்டா துறைமுகத்தில், சீனாவின் ஏவுகணை மற்றும் செயற்கைக் கோள் கண்காணிப்புக் கப்பலான யுவான் வாங்கை நிறுத்த அனுமதியளித்தார் ரணில். இதனால், இந்தியாவின் தென் கடலோரப் பகுதியை இலக்காக்கி, எதிர்காலத்தில் நீர் மூழ்கிக் கப்பல் மூலம் தாக்குதல் நடத்த ஏதுவாகக் கடற்படுகையை ஆய்வு செய்து சென்றது யுவான் வாங். கடந்த மாதம் மற்றொரு சீனப் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்ததையும் நாமறி வோம்.



சீனாவின் இந்தக் கடந்த கால நகர்வுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் அறிந்திருந்ததன் பின்னணியில் தான், இந்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கின் இலங்கைப் பயணம் குறித்த அறிவிப்பால் நாங்கள் சற்று குதூகலமடைந்தோம். அதிபர் ரணில் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகிய இரு உயர்மட்டத் தலைவர்களுடனான இந்திய அமைச்சரின் சந்திப்புக்கு ஏற்பாடுகள் நடந்தன. இந்தச் சந்திப்புகளின்போது இந்தியா - இலங்கை இருதரப்புப் பாதுகாப்பு உறவுகளின் அனைத்து அம்சங்களும் மறுஆய்வு செய்யப்பட இருந்தன. மேலும், சீனாவுடனான இலங்கையின் நெருக்கம் குறித்த இந்தியாவின் கவலை வலியுறுத்தப்படுவது அறிவிக்கப்படாத நோக்கமாக இருந்தது. ஜூலை மாதம் தில்லியில் மோடியுடன் கைகுலுக்கி, இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும் உத்தி ரீதியான உறவுகளை வலுப்படுத்த உறுதி பூண்டதும் ஒக்ரோபரில் பீஜிங்கில், ஷீயை ஆரத் தழுவி, பி.ஆர்.ஐ வலையில் இன்னமும் இலங்கையை அமிழ்த்தி விட உறுதிபூணுவதும் தவறில்லை என்பதையும் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், நான் கடந்த காலங்களில் ஈழநாடு கட்டுரைகளில்

குறிப்பிட்டிருந்தது போல, அடுத்தடுத்த சிங்களத் தலைவர்கள், சுயநல நோக்கங்களுக்காகக் குறுகிய கால லாபங்களுக்காக தேசத்தின் நீண்ட கால நலன்களையும் பிராந்தியப் பாதுகாப்பையும் சமரசம் செய்து கொண்டுள்ளனர் என்பது தான் பெருங்கவலை. வெகு விரைவில், இந்த இனிய தீவு தேசம், இரு பெரும் வல்லரசுகள் மோதிக்கொள்ளும் களமாக மாறக்கூடும் என்றும் எச்சரித்துள்ளேன். கொழும்பு செல்லும் தனது திட்டத்தைக் கடைசி நிமிடத்தில் இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மாற்றிக்கொண்டதற்கு வலுவான காரணங்கள் இருக்கலாம்.

தற்சமயத்துக்கு மட்டும் தான் இப்பயணம் ஒத்தி வைக்கப்படுவதாகவும் விரைவில் இலங்கைப் பயணம் மேற்கொள்வது உறுதி என்றும் அவரின் அமைச்சகம் கூறியது உண்மையாக இருக்கலாம். அமைச்சரின் இந்த முடிவுக்கு டில்லியில் உருவான சில தவிர்க்க முடியாத நிகழ்வுகள் காரணங்களாக இருக்கலாம், அவை சீனாவுடன் தொடர்புடையதாக இல்லாமலும் இருக்கலாம். அதாவது, அக்டோபரில் பீஜிங்கில் ஷீயின் அழுத்தத்துக்கு அடிபணியமாட்டேன் என்ற உறுதியை ரணிலிடமிருந்து இந்தியாவால் பெற முடியாததால் இந்தப் பயண ஒத்தி வைப்பு செய்யப்படவில்லை என்றும் நாம் நம்பலாம். ஏனெனில், சீன உளவுக் கப்பல்கள் மேலும் மேலும் இலங்கைத் துறைமுகங்களில் வந்து குவியும் நிலையில், மிகவும் பேசப்பட்ட பாதுகாப்பு அமைச்சரின் இலங்கைப்பயணத்திற்கு ஒரு மாதம் பிறகு அக்டோபரில் ரனில் சீனாவுக்கு அடி பணிந்தால் அது இந்தியாவிற்கு தர்மசங்கடமாகப் போய்விடக்கூடும்.

அண்மைக்காலங்களில் இல்லாத அளவு பெரிய அரசியல் தேர்வை ராஜ்நாத் சிங்கும் அவரது தலைவர் நரேந்திர மோடியும் எதிர்கொள்ளவிருக்கிறார்கள் என்பதை நாம் மறுப்பதற்கில்லை. மே 2024 இல் வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமான I.N.D.I.A எதிர்க்கட்சிக் கூட்டணியை பாஜக சந்திக்கவிருக்கிறது. போர்கள், பஞ்சம், பேரிடர்கள், வெள்ளங்கள் மற்றும் நிறைவேற்றப் படாத வாக்குறுதிகள் என்று தேசிய, சர்வதேச அளவில் பல எதிர்வினைச் சூழல்களையும் அரசியலையுமே அதிகம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் பத்திரிகையாளர்கள் பெரும்பாலும் எதிர்மறையாகவே, சில நேரங்களில் விபரீத அழிவைக் கூட சிந்திக்கும் நிலை தான் உள்ளது. நானும் அப்படித்தான் போலும். ராஜ்நாத் சிங், ரனில் விக்ரமசிங்கே மற்றும் ஷீ ஜின்பிங் ஆகியோர் குறித்த என் எதிர்மறைச் சிந்தனை தவறாகவும் இருக்கலாம். அவர்கள் அனைவரும் மிகச் சிறந்த நல்ல மனிதர்கள், தலைவர்களாக இருந்து வரும் ஆண்டுகளில் நம் அனைவரையும் அமைதி மற்றும் வளமையை நோக்கி இட்டுச் செல்லலாம். இந்த நேர்மறை எண்ணத்துடன் உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# ஜனாதிபதி தேர்தலின் மீது திரும்பியிருக்கும் எதிரணிக்கட்சிகளின் கவனம்



வீரகத்தி தனபாலசிங்கம்

உள்ளூராட்சி தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்குதல்களைக் கொடுக்கக்கூடிய போராட்டங்களை முன்னெடுக்க மக்களை அணிதிரட்ட முடியாமற்போன எதிரணிக் கட்சிகள் அதைப் பற்றி பெரும்பாலும் பேசாமலே விட்டுவிட்டன.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்தும் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசத்தொடங்கியதை அடுத்து மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு அவரிடம் அந்த கட்சிகள் கேட்டன. அந்த கோரிக்கையையும் ஜனாதிபதி கவனத்தில் எடுக்காத நிலையில் அவை பிறகு எதையும் செய்யமுடியாமல் பேசாமல் இருந்தன.

ஆனால், முதலில் ஜனாதிபதி தேர்தலை அடுத்த வருட முற்பகுதியில் அல்லது நடுப்பகுதியில் நடத்துவதற்கான சாத்தியம் குறித்து அரசாங்கம் இப்போது பேசத் தொடங்கியதும் அந்த தேர்தலில் எதிரணியின் கவனம் திரும்பியிருக்கிறது. உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல்களை நடத்துமாறு வலியுறுத்துவதை அவை கைவிட்டுவிடுமோ என்று யோசிக்கவேண்டியிருக்கிறது.

எதிரணியின் கவனத்தை திசைதிருப்புவதில் அரசாங்கம் வெற்றிகண்டிருக்கிறது எனலாம்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவை தங்களது ஜனாதிபதி வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்கெனவே அறிவித்துவிட்ட நிலையில் ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அதன் வேட்பாளராக கடந்த வாரம் அநுரா குமார திசாநாயக்கவை அங்கீகரித்திருக்கிறது. தொலைக்காட்சி சேவையொன்றின் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அவரே இதை அறிவித்தார்.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஒரு சிக்கலான நிலையில் இருக்கிறது. அமைச்சர்கள் சிலர் உட்பட அதன் பாராளுமன்றக் குழுவின் ஒரு பிரிவினர் ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதற்கான தமது விருப்பத்தை வெளிக்காட்டியிருக்கும் நிலையில் இன்னொரு பிரிவினர் ராஜபக்ச குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒருவரை வேட்பாளராகக் களமிறக்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள். முன்னர் ஒரு கட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று தேர்தலில் பொதுஜன பெரமுன விக்கிரமசிங்கவை ஆதரிக்கப்போவதில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

சிறீலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மீண்டும் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது குறித்து இடைக்கிடை பேசுகிறார். பொதுஜன பெரமுன தங்களுக்கு ஒரு அச்சுறுத்தலே இல்லை என்று கடந்த வாரம் கூறிய அவர் கூட்டணியொன்றை அமைக்க முன்வருமாறு ஏனைய அரசியல் கட்சிகளுக்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்திருக்கிறார். சுதந்திர கட்சியின் மக்கள் ஆதரவின் தற்போதைய இலட்சணத்தில் அவருடன் கூட்டுச் சேர எவர் முன்வரவார் என்பது ஒரு பிரச்சினை.

மறுபுறத்தில், கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியை அடுத்து பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் தனியான அணிகளாக செயற்படுபவர்கள் கூட்டணிகளை அமைக்கும் முயற்சிகளில் இறங்கியிருக்கிறார்கள். அந்த முயற்சிகளில் கூட ஒரு தடுமாற்றத்தை அவதானிக்க முடிகிறது.

பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் முதலில் பேச்சுவார்த்தை நடத்திய பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் - டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் காங்கிரஸ் பிறகு விமல் வீரவன்ச தலைமையிலான உத்தர லங்கா சபாகயவுடனும் ஜே.வி.பி. யுடனும் பொதுநிலைப்பாடுகளுக்கு வருவதற்கான சாத்தியம் குறித்து ஆராய தனித்தனியாக பேச்சுவார்த்தைகளை தொடங்கியிருக்கிறது.







ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தையை சுதந்திர மக்கள் காங்கிரஸ் நம்பிக்கையுடன் முன்னெடுக்கக் கூடிய சாத்தியம் குறித்து இது சந்தேகத்தைக் கிளப்புகிறது.

**ஜே.வி.பி.யின் மக்கள் செல்வாக்கு குறித்து அதன் தலைவர்கள் மிகைமதிப்பைக் கொண்டிருக்கிறார்களா?**

தேசிய மக்கள் சக்தி முக்கியமான பிரச்னைகளில் அரசாங்கத்துக்கு எதிராக மற்றைய எதிரணிக் கட்சிகளுடன் ஒத்துழைத்துச் செயற்படுவதில் கூட இதுவரையில் விருப்பத்தை வெளிக்காட்டாமல் இருந்துவரும் நிலையில் கூட்டணியொன்றை அமைக்க முன்வருவதற்கு சாத்தியமில்லை.

ஜே.வி.பி. அதன் வரலாற்றில் மக்கள் செல்வாக்கின் உச்சநிலையில் தற்போது இருப்பதாக நம்பும் அதன் தலைவர்கள் தேசிய மக்கள் சக்தி தனியாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்துவிடக்கூடிய எந்தவொரு கூட்டணி ஏற்பாட்டையும் வேறு கட்சிகளுடன் செய்துகொள்ள விரும்பப்போவதில்லை.

ஜனாதிபதி வேட்பாளராக தன்னை ஆதரிக்கும் ஒரு முகாம், ஆதரிக்காத இன்னொரு முகாம் என்று இன்று நாட்டில் இரு அரசியல் முகாம்கள் மாத்திரமே இருக்கின்றன என்று ஜே.வி.பி. தலைவர் திசாநாயக்க கூறியதாகக்கூட செய்திகள் வெளியாகின.

இலங்கை இதுவரையில் எட்டு ஜனாதிபதி தேர்தல்களைக் கண்டிருக்கிறது. தேர்தல்கள் பற்றிய அறிவிப்பு வந்த பிறகே தனியாகவா அல்லது கூட்டணி ஒன்றின் சார்பிலா வேட்பாளரை நிறுத்துவது என்பதை பெரும்பாலும் அரசியல் கட்சிகள் தீர்மானித்ததை கண்டோம். ஆனால் ஒன்பதாவது ஜனாதிபதி தேர்தலைப் பொறுத்தவரை, அதற்கு இன்னமும் ஒரு வருடம் இருக்கும் நிலையிலேயே கட்சிகள் வேட்பாளர்களை அறிவித்து அவற்றின் வியூகங்களை வகுக்கத் தொடங்கிவிட்டன.

அண்மைக்காலத்தில் பல்வேறு சுயாதீன அமைப்புக்கள் மேற்கொண்ட கருத்துக் கணிப்புகள் ஏனைய சகல கட்சிகளையும் விட தேசிய மக்கள் சக்தியே மக்கள் ஆதரவில் முன்னணியில் இருப்பதாக காண்பித்தாலும் கூட எந்தவொரு கட்சியுமே இன்று மக்களின் அமோக ஆதரவுடன் இல்லை. கூட்டணிகளை அமைப்பதைத் தவிர அவற்றுக்கு வேறு வழியில்லை. ஜே.வி.பி. தலைவர்கள் தங்களுக்கு இருக்கும் ஆதரவு குறித்து மிகை மதிப்பைக் கொண்டிரு க்கிறார்களா இல்லையா என்பதை ஒரு தேர்தல் மாத்திரமே நிருபிக்கும்.

அதேவேளை எதிரணிக்கடசிகள் நம்பிக்கையணர்வுடன் பேசுவதாகவும் இல்லை. உள்ளூராட்சி தேர்தல்களை ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதி தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் அரசாங்கம் தாமதிக்கக்கூடும் என்ற சந்தேகத்தையும் அவை கிளப்புகின்றன.

இதுவரையில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் 2010, 2015 தேர்தல்களில் மாத்திரமே பதவியில் இருந்த ஜனாதிபதிக்கு எதிராக எதிரணிக் கட்சிகள் பொது வேட்பாளர்களை நிறுத்தின. அவை முதல் தடவை தோல்வியையும் அடுத்த தடவை வெற்றியையும் கண்டன. ஆனால் அடுத்த தேர்தலில் எதிரணி பொதுவேட்பாளரை நிறுத்துவதற்கு பெரும்பாலும் வாய்ப்பு இல்லை. வேட்பாளர்களை ஏற்கெனவே அறிவித்துவிட்ட கட்சிகள் அதை வாபஸ் பெறும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

**கூட்டணிகளை அமைப்பதற்கு முயற்சிகளை முன்னெடுத்தாலும், எதிரணிக்கட்சிகள் தடுமாற்றமின்றி நம்பிக்கையுணர்வுடன் பேசுவதாக இல்லை**

கூட்டணி அமைக்கும் முயற்சிகளின் போது பொதுவேட்பாளரை நிறுத்தும் யோசனை முன்வைக்கப்படுவதை முன்கூட்டியே தவிர்க்கும் நோக்கத்துடன் தான் வேட்பாளர்களின் பெயர்களை ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் முன்கூட்டியே அறிவித்திருக்கவும் கூடும்.

எதிரணியின் பொதுவேட்பாளர்கள் களமிறக்கப்பட்ட இரு ஜனாதிபதி தேர்தல்களிலும் அவர்களுக்கு சவாலாக விளங்கிய மகிந்த ராஜபக்ச போன்று தற்போதைய ஜனாதிபதி அரசியல் ரீதியில் பலம்வாய்ந்த ஒரு வேட்பாளராக விளங்குவார் என்று கூறமுடியாது. ஐக்கிய தேசிய கட்சி மக்கள் செல்வாக்கைப் பொறுத்தவரை தொடர்ந்தும் மிகவும் பலவீனமான நிலையில்தான் இருக்கிறது.

ஜனாதிபதியாக வந்த பிறகு பொருளாதாரத்தை மீட்டெடுக்க விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் நடவடிக்கைகள் அவரது கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கை எந்தளவுக்கு மீட்டெடுக்க உதவியிருக்கின்றன என்பதும் தெரியவில்லை.

வங்குரோத்து நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பாரிய சவாலுக்கு முகங்கொடுக்க இலங்கை வரலாறு காணாத மாபெரும் மக்கள் கொந்தளிப்புக்கு மத்தியில் ஆட்சிப் பொறுப்பை துணிச்சலுடன் ஏற்றுக்கொண்டு குறுகிய காலத்திற்குள் கணிசமானளவுக்கு பொருளாதார உறுதிப்பாட்டை நோக்கிய திசையில் நாட்டை வழிநடத்திச் செல்லும் தலைவர் என்று விக்கிரமசிங்கவை மக்கள் முன்னிறுத்த முடியும் என்ற ஒரே நம்பிக்கையில்தான் ஐக்கிய தேசிய கட்சியின் அரசியல்வாதிகள் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி வாய்ப்பு குறித்து எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. என்றாலும் கூட பரந்த கூட்டணி ஒன்று அவர்களுக்கு நிச்சயம் தேவை.

அத்தகைய கூட்டணியொன்றை அமைப்பது குறித்து ஐக்கிய தேசிய கட்சி பேசுகின்றபோதிலும், பொதுஜன பெரமுனவில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் பாராளுமன்ற உறுப்பினர்களை இழுத்தெடுப்பதே தற்போது ஜனாதிபதியின் பிரதான தந்திரோபாயமாக இருக்கிறது. இது எந்தளவுக்கு உருப்படியான கூட்டணியொன்றை உருவாக்க உதவும்?

பதவிகளை எதிர்பார்த்துப் போகக் கூடியவர்களை தவிர, வேறு கட்சிகள் கூட்டணி சேருவதற்கு விரும்பி முன்வரக் கூடிய நிலையில் ஜனாதிபதியின் கட்சியின் மக்கள் செல்வாக்கு இல்லை.

இரு ஜனாதிபதி தேர்தல்களில் தோல்வி கண்ட பிறகு விக்கிரமசிங்க தொடர்ச்சியாக மூன்று ஜனாதிபதி தேர்தல்களில் போட்டியிடுதைத் தவிர்த்தார். அடுத்த தேர்தலில் அவர் போட்டியிடுவார் என்பது நிச்சயம். மக்களின் ஆணையுடன் ஒரு தடவையேனும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வந்த பிறகு அரசியலில் இருந்து ஓய்வுபெறுவது அவரது விருப்பமாக இருக்கக்கூடும்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஒரு ஆசனத்தையேனும் வென்றெடுக்க முடியாத அளவுக்கு தேர்தல் வரைபடத்தில் இருந்து துடைத்தெறியப்பட்ட ஒரு கட்சியின் தலைவர், இன்று அவரை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு பெரிய கூட்டணிகளை அமைக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை எதிரணிக் கட்சிகளுக்கு ஏற்படுத்துகின்ற அளவுக்கு - அவரைத் தவிர பொருத்தமான அல்லது திறமையான வேட்பாளர் வேறு கட்சிகளில் இல்லை என்று ஒரு மருட்சி உருவாக்கப்படுகின்ற அளவுக்கு இலங்கையின் அரசியல் நிலைவரம் விசித்திரமானதாக மாறியிருக்கிறது.

# சீனக்கப்பல் கொழும்புக்கு வரும்! திருமலை இந்தியாவுக்குப் போகும்! இனவாதம் மதவாதமாக மாறும்!

பனங்காட்டான்

கடந்த வாரம் எழுதிய பத்தியில், 1977ம் ஆண்டு புதிய அரசியலமைப்பின் கீழான முதலாவது ஜனாதிபதித் தேர்தல் 1982ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதி இடம்பெற்றது என்று எழுதியிருந்தேன். இது தொடர்பாக வட அமெரிக்க நகரம் ஒன்றில் வாழும் நீண்ட கால வாசக நண்பர் ஒருவர் எழுப்பிய சந்தேகத்துக்கு விளக்கம் அளிக்க வேண்டிய கடப்பாடு எனக்குண்டு. அதனை முதல் தெரிவித்துவிட்டு அடுத்த சமாசாரத்துக்கு வருவோம்.

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதலில் பிரதமராகப் பதவியேற்றார். இது அரசியல் சட்ட முறைமைக்கு உட்பட்டது.

1972ல் சிறீமாவோ பண்டாரநாயக்க அரசு உருவாக்கிய அரசியலமைப்பில் தமக்குத் தேவையான திருத்தம் ஒன்றை, தமக்கிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் பலத்தைப் பயன்படுத்தி ஜே.ஆர். நிறைவேற்றினார். இத்திருத்தம், அது நிறைவேற்றப்பட்ட வேளையில் பிரதமராக இருப்பவரை நேரடியாக ஜனாதிபதிப் பதவிக்கு மாற்றுவதென்பது. இதன் பிரகாரம் தம்மைத்தாமே ஜனாதிபதியாக மாற்றிக்கொண்ட ஜே.ஆர்., 1978 பெப்ரவரி 4ம் திகதி காலிமுகத்திடலில் ஜனாதிபதியாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.



ஆக, முதலாவது தடவை இவர் ஜனாதிபதியானது தேர்தல் மூலமாகவல்ல. அரசியல் சட்டத்தை மாற்றி தம்மைத் தாமே இவர் ஜனாதிபதியாக்கிக் கொண்டார் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இத்துடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. 1978 செப்டம்பர் மாதம் 7ம் திகதி - சிறீமாவோவின் 1972ம் ஆண்டு அரசியலமைப்புக்கு மாற்றீடாக புதிய அரசியலமைப்பை உருவாக்கி, சகல நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக தம்மை உயர்த்திக் கொண்டார். இவ்வாறு முழு அதிகாரத்தையும் தன்னகத்தே கொண்டுள்ள ஆட்சியாளரை ஏகாதிபதி (Autocrat) என்பர்.

ஜனாதிபதிப் பதவியை ஏகாதிபதிப் பதவியாக்கிய ஜே.ஆர். அரசமைப்பு ரீதியாக அடுத்தடுத்து பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். கொழும்பு காலிமுகத் திடலுக்கு முன்னால் அமைந்திருந்த நாடாளுமன்ற வளாகத்தில் கோட்டே ஜெயவர்த்தனபுரவுக்கு மாற்றினார். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு போட்டியாளராக இருக்கக் கூடியவரென எண்ணிய சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் குடியுரிமையை ஆறு ஆண்டுகளுக்கு ரத்துச் செய்தார். இதன் மூலம் 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமக்கான வெற்றிப் பாதையை அமைத்துக் கொண்டார்.

ஜனாதிபதிப் பதவி வகிக்கும் அவரது



முதலாவது பதவிக் காலத்தின் நான்கு ஆண்டுகள் முடிவின் பின்னர், அவர் விரும்பும் எந்த வேளையிலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் வகையில் தாம் உருவாக்கிய அரசியலமைப்புச் சட்டத்திலேயே திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

1977 பொதுத்தேர்தலின் பின்னரான அடுத்த தேர்தல் 1983ல் இடம்பெற வேண்டியது. சர்வஜன வாக்கெடுப்பின் வழியாக அத்தேர்தலை 1989 வரை நீடிக்கச் செய்து அதிகாரத்தைப் பெற்றார். இத்துடன் நிறுத்தாது, தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி எம்.பி.க்கள் எவரும் தேர்தல்களில் பங்குபற்றுவதைத் தடுப்பதற்கான ஆறாம் திருத்தத்தை நிறைவேற்றினார். இதன் பிரகாரம் பிரிவினை கோரும் எவரும் தேர்தல்களில் பங்குபற்ற முடியாது போனது. (கிழட்டு நரி என வர்ணிக்கப்படும் ஜே.ஆரின் பெறாமகனான குள்ளநரி என அழைக்கப்படும் ரணில் மேற்சொன்னவைகளில் எவைகளை கடைப்பிடிக்கும் எண்ணவோட்டத்தில் இருக்கிறாரோ தெரியாது).

ஜே.ஆரினால் உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பின் கீழான ஜனாதிபதித் தேர்தல் 1982ம் ஆண்டு அக்டோபர் 20ம் திகதியே இடம்பெற்றது. 1978ல் அவர் ஜனாதிபதியானது தேர்தல் வழியாக அல்ல. அரசியல் சட்டத் திருத்தம் வழியாக குயுக்தி முறையில் தம்மைத் தாமே ஜனாதிபதியாக்கிக் கொண்டார்.

இவ்வாறு அவர் விரும்பிய அனைத்தையும் சட்டமாக்கவும், சட்டத்திருத்தங்களை அமோக வாக்குகளால் நிறைவேற்றவும் அவருக்கு அனுகூலமாக அமைந்தது, அவருக்குக் கிடைத்த ஆறில் ஐந்து பெரும்பான்மை நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையே.

இனி, சமகால சமாசாரங்களில் முக்கியமானவற்றை நோக்கலாம். இலங்கையில் பல தசாப்தங்களாக தலைவிரித்தாடி வரும் இனவாதத்துக்கு ஜோடியாக மதவாதம் எவ்வளவு கச்சிதமாக மேலெழுப்பப்படுகிறது என்பதை கண்கூடாகப் பார்க்கும் நிலைக்கு ஈழத்தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

தமிழர்களின் வழிபாட்டுத் தலங்கள், அவை அமைந்திருக்கும் நிலங்கள், அதனைச் சுற்றியிருக்கும் காணிகள், அப்பிரதேசங்களை அண்மித்திருக்கும் தனியார் காணிகள் என்பவற்றை தொல்பொருள் திணைக்களம் எந்த ஆதாரமும் இன்றி, ஆவண நிரூபணமும் இன்றி கையகப்படுத்தி வருகின்றது. நீதித்துறையும், சட்டம் - ஒழுங்குத்துறையும் தொல்பொருள் திணைக்களத்தால் ஓரங்கட்டப்படுகின்றன.

அரசாங்கத்தின் செல்லப்பிள்ளையாக மாறியுள்ள தொல்பொருள் திணைக்களம் தனி அரசாங்கமாக செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. சட்டமீறல்களுக்கான நீதிக்குட்பட்ட உத்தரவை வழங்கிய முல்லைத்தீவு நீதிபதி தமிழர் என்பதால் அவரை நோக்கி அம்புகள் வீசப்படுகின்றன. நாடாளுமன்ற பேச்சுரிமையை பயன்படுத்தும் சரத் வீரசேகர, உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் சிங்கள பௌத்தர்களை உசுப்பேற்றும் முனைப்பில் செயற்படுகின்றனர். சபாநாயகரோ, நீதியமைச்சரோ எதனையும் தடுக்காது வாய் பொத்திச் சேவகம் செய்கின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்கு விரைந்து தீர்வு காணப்போவதாக தினம் தினம் மந்திர உச்சாடனம் செய்யும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மகாநாயக்கர்களைச் சந்தித்து ஆசி பெறும்

**இந்தியா திருமலையை பெற்றுக் கொள்கிறது. சீனக்கப்பல் தடைகளைத் தாண்டி கொழும்புக்குச் செல்கிறது. தமிழர் மீதான இனவாதம் மதவாதமாக மாற்றப்படுகிறது. பார்க்கப் போனால் அவரவருக்கு அவரவர் பிரச்சனை. தமிழர் பிரச்சனை புதுப்புது வடிவமெடுத்து நீள்கிறது. பேச்சு எப்போதும் பல்லக்குத்தான்.**

போது பௌத்தத்துக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது என்று கூறி தமது சுயரூபத்தைக் காட்டுகிறார்.

பிரச்சனைக்குரிய குருந்தூர்மலைப் பகுதிக்கு வேற்றிடத்தவர்கள் செல்வது தடுக்கப்பட்டுள்ளதாகவும் மகாநாயக்கர்களுக்கு அவர் தெரிவித்துள்ளார். ஆனால், திருமலையில் ஆளுநருக்கு எதிராக பௌத்த பிக்குகள் நடத்தும் ஆர்ப்பாட்டத்துக்கு நாட்டின் எப்பகுதியிலிருந்தும் எவரும் செல்வதற்கு அனுமதியுண்டு. வருங்காலத்தில் தொல்பொருள் திணைக்களம் கையகப்படுத்த விரும்பும் தமிழர்களின் வழிபாட்டுத் தலங்களை காப்பாற்ற தமிழர்கள் அங்கு செல்வதை தடுப்பதற்கான முன்னேற்பாடாகவே ரணிலின் வேற்றிடத்தவர் செல்வது தடுக்கப்படுமென்பது தெரிவிக்கும் உண்மை.

வழிபாட்டுத் தலங்கள் எங்கிருந்தாலும் அவ்விடத்துக்குச் செல்லவும், அந்த இடத்தைப் பாதுகாக்கவும் அது சார்பு மக்களுக்கு உரிமையுண்டு. பேச்சுரிமை, கருத்துரைக்கும் உரிமை, வசிப்பிட உரிமை, வழிபாட்டுரிமை, ஒன்றுகூடும் உரிமை என்பவை ஒவ்வொரு மனிதருக்குமான பிறப்புரிமைகளில் அடங்கும். சிங்கள பௌத்தர்கள் தமிழர் தாயக பூமியில் எங்கும் சென்று வழிபாடு என்ற பெயரில் அரசங்கன்றுகளையும், புத்தர் சிலைகளையும் நாட்டும் உரிமையைப் பெற்றுள்ளனர். ஆனால், தமிழர் தங்கள் சொந்த மண்ணில் தங்களுக்கேயுரித்தான வழிபாட்டுத் தலங்களுக்கு செல்லவோ பாதுகாக்கவோ முடியாத நிலை உள்ளதென்றால்.... இப்படித்தான் தமிழர் பிரச்சனைக்கு ரணில் தீர்வு காணப் போகின்றாரோ என்ற கேள்வி எழுகின்றது.

தமிழரின் வழிபாட்டு உரிமை மறுப்புக்கு எதிரான, தமிழரின் சொந்தக் காணிகளில், விகாரைகள் கட்டுவதற்கு எதிரான போராட்டங்கள் சாத்வீகமாகவே இடம்பெறுகின்றன. எங்கும் வன்முறை எதுவும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், இதனை முன்னிறுத்தி தமிழருக்கெதிரான வன்செயல்களை அல்லது இனரீதியான தாக்குதல்களை ஆரம்பிப்பதற்கான சில முன்னெடுப்புகளை மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களே மேற்கொள்கின்றனர்.

இதற்கு உதாரணமாக விமல் வீரவன்சவின் பகிரங்க உரையினை பார்க்க முடிகிறது. “சிங்களவர்கள் தங்களின் தலைநகரான கொழும்பை இழந்துள்ள போதும் இங்கு இந்து ஆலயங்கள் மீதோ, அங்குள்ள தேர்கள் மீதோ தாக்குதல் நடத்த நினைக்கவில்லை” என்று விசவாயு போன்ற கருத்தை கக்கியுள்ளார்.

‘சிங்களவர்களே! இந்து ஆலயங்கள் மீதும், தேர்கள் மீதும் தாக்குதல் நடத்தாது எதற்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்’ என்ற மறைபொருளில் இவரது உரை அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

1958ல் பாணந்துறையில் இந்துமத குரு ஒருவர் எரித்துப் படுகொலை செய்யப்பட்டதையும், 1977ல் இரத்தினபுரியில் இந்து ஆலயங்கள் சேதமாக்கப்பட்டதையும், 1983ல் கொழும்பு ஆலயங்களின் அர்ச்சகர்கள் குடும்பம் குடும்பமாக அகதி முகாம்களில் தஞ்சம் அடைந்ததையும் விமல் வீரவன்சவின் உரை நினைவுபடுத்துகிறது. 1987 இலங்கை - இந்திய ஒப்பந்த காலத்தில் இவர் அங்கம் வகித்த ஜே.வி.பி. மேற்கொண்ட வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்களே என்பதை நினைக்க வைக்கிறது இவரது உரை.

இவரதும் இவர் போன்றவர்களதும் இன மத எதிர்ப்புச் செயற்பாடுகளை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க வேறு கண்கொண்டு பார்ப்பது தெரிகிறது. ‘இந்துக்கள் பௌத்தர்கள் மோதலை உருவாக்கி இந்தியா இலங்கை அரசுக்கு வழங்கும் ஆதரவை தடுக்கும் நோக்கம் கொண்டது’ என்று கூறுகிறார் பிரசன்ன ரணதுங்க.

இந்தியப் பிரதமர் மோடி இந்துவாக இருப்பதால் மதரீதியான மோதலை உருவாக்கலாமென்பது பிரசன்ன ரணதுங்கவின் பார்வை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கருவான 13வது திருத்தத்தையே 35 வருடங்கள் தாண்டியும் முழுமையாக செயற்படுத்த முடியாத நிலையிலுள்ள இந்தியா அந்த ஒப்பந்தத்தை மையப்படுத்தி தனது காரியங்களை இலகுவாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இந்தியா திருமலையை பெற்றுக் கொள்கிறது. சீனக்கப்பல் தடைகளைத் தாண்டி கொழும்புக்குச் செல்கிறது. தமிழர்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வு மதப்பிரச்சனையாக மாற்றப்படுகிறது. பார்க்கப் போனால் அவரவருக்கு அவரவர் பிரச்சனை. தமிழர் பிரச்னை புதுப்புது வடிவமெடுத்து நீள்கிறது. பேச்சு எப்போதும் பல்லக்குத்தான். ●

# பாடசாலை மாணவர்களை மேம்படுத்துவதற்கு உடல்சார் தண்டனைகள் அவசியமா?

கந்தையா அருந்தவபாலன்

பிள்ளைகளை நல்வழிப்படுத்துவதற்கு உடல்சார் தண்டனைகள் வழங்கப்படுவது அவசியமானது என்ற சிந்தனை இன்று கணிசமான ஆசிரியர்கள் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் காணப்படுவதுடன் அவை சட்டரீதியாகத் தடுக்கப்பட்டிருந்தாலும்கூட பாடசாலைகளில் மாணவர்களை வழிப்படுத்துவதற்கான ஒரு முறையாக ஆசிரியர்களால் பரவலாகக் கையாளப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. இதனால் மாணவர்களுக்கு உடல், உளப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவாறான தண்டனைகளைஆசிரியர்கள் வழங்கக் கூடாது என்ற ஒழுங்குவிதிகள் ஆசிரியர்களிடம் அதிக வரவேற்பைப் பெறாதிருப்பதுடன் அவை தொடர்பான எதிர்மறையான விமர்சனங்களும் அவர்களால் முன்வைக்கப்படுவதையும் காண முடிகிறது. அத்துடன் இன்றைய இளைஞர்களின் சமூகப்பிறழ்வான நடத்தைகளுக்குப் பிரதான காரணம் அவ்வாறான தண்டனைகள் தடுக்கப்பட்டிருப்பதே என்ற கருத்தும் பரவலாக எல்லோரிடமும் காணப்படுகிறது. இதனால் சிறுவர் உரிமைகள் தொடர்பான பணியாளர்களின் பாடசாலைகளுக்கான வருகையும் வெறுப்புடனே பார்க்கப்படுகிறது. இவ்வாறு ஆசிரியர்கள் எண்ணுவதுபோல் மாணவர்களை வழிப்படுத்துவதற்கு உண்மையில் உடல்சார் தண்டனைகள் அவசியமானவைதானா அல்லது அவற்றைவிட வேறு சிறப்பான வழிமுறைகள் காணப்படுகின்றனவா? சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் ஒவ்வொரு குடிமகனதும் அதிலும் சிறப்பாகச் சிறுவர்களது அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட்டு அவை நாளுக்கு நாள் மேம்படுத்தப்பட்டுவரும் ஓர் உலக ஒழுங்கில் வாழும் நாம் உடல்சார் தண்டனைகள் மூலமாகத்தான் மாணவர்களை வழிப்படுத்துவதற்கு முயலவேண்டுமா? போன்ற நியாயமான கேள்விகளையும் மறுதலிக்க முடியாது.

பாடசாலைகள் மாணவர்களின் அறிவு, திறன், நல்மனப்பாங்குகளை விருத்தி செய்வதன் மூலம் சிறந்த குடிமக்களை உருவாக்கும் பணியில் இரு விடயங்களுக்கு முக்கிய இடத்தை வழங்குகின்றன. ஒன்று பொருத்தப்பாடான ஒழுக்க விழுமிய பண்புகளை விருத்தி செய்வது. மற்றது கற்றலின் அடைவு மட்டத்தை உயர்த்துவது. இவை இலகுவான பணிகளன்று. பலதரப்பட்ட குடும்பப் பின்னணிகளிலிருந்தும், பலதரப்பட்ட உளவிருத்தி நிலைகளுடனும் ஒரு வகுப்பறையில் ஒன்றாக அமரும் மாணவர்களை ஒத்த அணுகுமுறையொன்றினூடாக மேற்குறித்த நோக்கங்களை அடையச்செய்வது ஆசிரியருக்கு கடினமானதொரு பணியாகும். இக்கடினமான பணியை நிறைவேற்றுவதற்கான அணுகுமுறைகளில் ஒன்றாக தண்டனை வழங்குதலை பல சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் நாடுகின்றனர். அதில் ஓரளவு குறுங்கால வெற்றியையும் பெறுகின்றனர். எனினும் அவ்வணுகுமுறை சமகாலத்தில் எதிர்மறையான விளைவுகள் தோன்றுவதற்கும் காரணமாகிவிடுகிறது. அவ்விளைவுகள் பலசந்தர்ப்பங்களில் மாணவரிடையே பாரதூரமான தாக்கத்தையும் ஏற்படுத்தி விடுவதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இலங்கையில் **2016** ஆம் ஆண்டு வரை நல்லெண்ண நோக்கில் குறிப்பிட்ட வரையறைகளுக்குள் உடல் ரீதியான தண்டனை வழங்குவது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இலங்கையில் முதலில் **1883**ஆம் ஆண்டு இரண்டாம் இலக்கச் சட்டத்தின் பிரிவு **82** நல்லெண்ணத்துடனான உடல் ரீதியானதண்டனையை அங்கீகரித்தது.



> ஓர்ஆசிரியர் தன்மீது எழுந்தமானமாக அதிபரோ அன்றி கல்வித் திணைக்களத்தினரோ நடவடிக்கை எடுக்கக் கூடாது என எதிர்பார்ப்பது எவ்வளவு சரியோ அதேயளவு சரி மாணவர்மீது உடல்ரீதியான தண்டனைகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டுமெனச் சமூகம் எதிர்பார்ப்பது.

ஆனால் அதேவேளை இலங்கை குற்றவியல் சட்டத்தின் **341**ஆம் பிரிவு காயம், பயம், உளப்பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய தண்டனைகள் குற்றவியல் தண்டனைக்குரிய குற்றமாகும் என வெளிப்படுத்தியது. இருந்த போதும் இப்பிரிவின் முதலாவது விவரணத்தில் பாடசாலைகளில் நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்படும் இவ்வாறான தண்டனைகளுக்கு குற்ற விலக்களித்தது. இது பாடசாலைகளில் உடல்ரீதியான தண்டனைகளுக்கு வாய்ப்பளித்தது. எனினும் **2016** ஆம் ஆண்டு **16** ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட **308** அ(**2**) திருத்தத்தின் மூலம் அவ்வாய்ப்பு இல்லாமல் செய்யப்பட்டது. இதனை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சு **2016**ஆம் ஆண்டு **12** இலக்கச் சுற்றிக்கை மூலம் பாடசாலைகளில் மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவதை முற்றாகத் தடை செய்தது. மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் தொடர்பான பல சர்வதேச பொருத்த னைகளை இலங்கை ஏற்றுக் கொண்ட தற்கமைவாக தனது உள்நாட்டுச் சட்டங்களிலும் அவற்றைப் புகுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது என் பது குறிப்பிடத்தக்கது. எனினும் உல கில் இன்றும் **63** நாடுகளில் உள்ள பாட சாலைகளில் உடல்ரீதியான தண்டனை வழங்குதல் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பதுவும் கவனிக்கத்தக்கது. சுமார் **800** மில்லியன் மாணவர்கள் அதாவது உலக மொத்த மாணவர் எண்ணிக்கை யில் அரைவாசிப் பேருக்கு உடல் ரீதியான தண்டனை வழங்குவதற்கு இன்னும் அந்நாடுகள் வாய்ப்பளித்துள்ளன.

சிறார்களின் உடல், உள ஆரோக்கியம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டுவரும் American Academy of Pediatrics என்ற நிறுவனம் வெவ்வேறு நாடுகளிலுள்ள தன்னைப் போன்ற ஆய்வுநிறுவனங்களுடன் இணைந்து உடல்ரீதியான தண்டனைகள் தொடர்பாக நடத்திய பல்வேறு ஆய்வுகளிலிருந்து பல உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளது. அவற்றுள் முக்கியமானவை ஒன்று, மாணவர்களுக்கு உடல்ரீதியான தண்டனைகள் வழங்குவதன் மூலம் எதிர்பார்த்த நேர்மறையான விளைவுகளை விட எதிர்மறையான விளைவுகளே அதிகம் ஏற்பட்டுள்ளன என்பது. இரண்டாவது, உடல்ரீதியான தண்டனைகளுக்குப் பதிலாக ஆசிரியர்களால் கையாளப்பட்ட வேறு அணுகுமுறைகள் கூடிய வெற்றியைத் தந்துள்ளன. மூன்றாவது, உடல்சார் தண்டனைகளைச் சட்டரீதியாக தடை செய்த நாடுகளில் மாணவர்களின் அடைவு மட்டங்களிலும் ஒழுங்கத்திலும் எவ்வகையான வீழ்ச்சிப் போக்கும் காணப்படவில்லை என்பதுடன் அவை முன்னரை விட மேம்பட்டுக் காணப்பட்டன. தண்டனைக்குள்ளாகும் மாணவர்க ளின் பாடசாலை வரவு குறைதல், இடை விலகல் அதிகரிப்பு, பாடசாலை தொடர்பாக ஒருவித பயம் ஏற்படுதல், குறைந்தளவான துலங்கல் போன்ற பொதுவான பாதிப்புகளுடன் மாணவர் களின் தனிப்பட்ட குணநலன்களிலும் எதிர்மறையான மாற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. தன்மதிப்புக்குறைதல், உயர் எண்ணங்கள் அழிதல், தாழ்வு மனப் பாங்கு கூடுதல், முரட்டுத்தனம் அதி கரித்தல், எதிர்ப்புக் குணம் அதிகரித்தல், குறிக்கீடுகள் மற்றும் குழப்பும் இயல்பு, காழ்ப்புணர்ச்சி உருவாகுதல் போன்றன முக்கிய பாதிப்புக்களை அந்நிறுவனத் தின் ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. பாடசாலை மீதான வெறுப்பு,பயம் போன்றவற்றால் ஏற்படும் இடைவிலகல் மற்றும் வரவு குறைதல் மாணவர்களை வேறு வழிகளில் செல்வதற்குத் தூண்டுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களில் பலர் சமூகச் சீரழிவுக்கும் காரணமாகின்றனர்.

இப்பத்தி எழுத்தாளரும் ஆசிரியப் பணியில் இருந்தவர் என்ற வகையில் உடல்ரீதியான தண்டனையை அவர் வழங்கியதால் மாணவனில் ஏற்பட்ட எதிர்மறை விளைவு ஒன்றைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். தண்டனை பெற்ற குறித்த மாணவன் தனது உடல், உள தாக்கத்தினால் ஆசிரியரின் உந்துருளியின் புகைபோக்கிக் குழாயினுள் ஏகே **47** ரகத் துப்பாக்கி ரவைகள் (அக்காலத்தில் அவைதாராளமாக கிடைக்கும்) இரண்டைச் செருகி விட்டிருந்தான். இப்பத்தி எழுத்தாளரைப் போலவே ஆசிரியப் பணியில் சேரும் இளம் ஆசிரியர்கள் மாணவரை நல்வழிப்படுத்துவதற்கான சிறந்த அணுகுமுறை உடல்ரீதியான தண்டனைகள் வழங்குவதே என கருதுகின்றனர். அதிலும் கூடுதலானவர்கள் ஆண் ஆசிரியர்களாகவே உள்ளனர். அதற்குப் பிரதான காரணங்களாக இருப்பவை கற்றல்- கற்பித்தல் தொடர்பாகப் போதிய அனுபவமின்மை, பொறுமையின்மை, ஏனைய அணுகு முறைகளில் நாட்டமின்மை, தமது பாடசாலைக்கால அனுபவங்கள், இலகுவானஅணுகு முறையாக இருத்தல் போன்றவையாகும். கற்பித்தல் அனுபவம், வாண்மை விருத்தி வாய்ப்புகள், வயது முதிர்ச்சி போன்றவற்றால் காலப்போக்கில் உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவதைக் அவர்கள் குறைத்துக் கொள்வதை அல்லது முற்றாகவே கைவிடுவதை அவதானிக்க முடியும்.

உடல்ரீதியான தண்டனைகளுக்குப் பதிலாக ஒவ்வொரு மாணவனையும் முழுமையாகப் புரிந்து கொள்ளுதல், பிரச்சினைகளைத் தனிப்பட்ட ரீதியில் தீர்த்து வைக்க முயலுதல், உகந்த கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாளுதல், அன்பையும் அக்கறையையும் வெளிப்படுத்தல், தட்டிக்கொடுத்தல், பாராட்டுதல், பரிசளித்தல், ஒழுக்க விழுமியங்கள் தொடர்பாக மாணவர்களுடன் ஆரோக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்ளுதல், பெற்றோர்களுடனான கலந்துரையாடல்களைக் கிரமமாக மேற்கொள்ளுதல், ஆசிரியர் முன்மாதிரியாகச் செயற்படுதல், இணைக்கலைத்திட்ட ஈடுபாட்டை அதிகரித்தல், பயனுள்ள பொழுது போக்குகளில் ஈடுபடுத்தல், சமூகப்பார்வையை ஏற்றபடுத்துதலும் பங்குபற்றச் செய்தலும் போன்ற பல மாற்று அணுகுமுறைகளை அந்நிறுவனத்தின் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளதுடன் அவை கூடியளவு வெற்றியளித்துள்ளதையும் அந்நிறுவனம் கண்டறிந்துள்ளது.

மாணவரின் மேம்பாட்டில் பாடசாலை மற்றும் ஆசிரியரின் பங்கு உயர்வானது என்பதை மறுக்க முடியாது. ஆனால் தனித்து அவர்களால் மட்டும் அதனை முழுமை பெறச் செய்ய முடியாது என்பதைப் பெற்றோரும் ஏனைய சமூக நிறுவனங்களும் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு கையால் தனித்து ஓசை எழுப்ப முடியாது. குறிப்பாகப் பெற்றோர் அல்லது குடும்பம் இதில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது அவசியம். பாடசாலையில் தனது பிள்ளையைச் சேர்த்து விட்டால் தமது கடமை முடிந்து விட்டதாக எண்ணும் பெற்றோர்கள் அந்த மனநிலையிலிருந்து விடுபட்டு பிள்ளைகளின் செயற்பாடுகள் மீது கூடியகவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் முதலில் தங்கள் குடும்ப உறுப்பினர்களிலிருந்தே பேச்சையும் நடத்தைகளையும் கற்றுக் கொள்கிறார்கள் என்பதை உணர்ந்து பெற்றோர்கள் முன்மாதிரியாக நடந்து கொள்வதன் மூலம் ஆசிரியர்களின் சுமையை அரைவாசியாகக் குறைக்க முடியும். மறுபுறத்தில் ஆசிரியர்களும் மாற்றங்களை உள்வாங்கி தமது பணிகளை முன்னெடுக்க வேண்டியது அவசியமென்பதை உணரவேண்டும். பழையன கழிதலும் புதியவை புகுதலும் ஆசிரியப் பணிக்கும் அவசியம். உண்மையில் பாடசாலைகளில் பல மாணவர்களுக்கு உடல் ரீதியான தண்டனைகள் வழங்கப்பட்டு வருகின்றன எனினும் ஒருசில சம்பவங்களே பிரச்சினைக்குரியவையாக மாறுகின்றன அல்லது மாற்றப் படுகின்றன. இவைபற்றி ஆசிரியர்கள் மட்டுமன்றி நிர்வாகமும் ஆழமாக ஆராய வேண்டியது அவசியமாகும். ஆசிரியர்கள் தமது உரிமைகள் மற்றும் பணிப்பாதுகாப்பு என்பவற்றை எவ்வாறு சட்டரீதியாக பாதூகாக்கப்பட வேண்டும் என விரும்புகிறார்களோ அதேபோல மாணவர்களின் உரிமைகளையும் மகிமைப் படுத்தவேண்டும் என்று இன்றைய சமூகம் எதிர்பார்க்கிறது. அதாவது ஓர்ஆசிரியர் தன்மீது எழுந்தமானமாக அதிபரோ அன்றி கல்வித் திணைக்களத்தினரோ நடவடிக்கை எடுக்கக் கூடாது என எதிர்பார்ப்பது எவ்வளவு சரியோ அதேயளவு சரி மாணவர்மீது உடல்ரீதியான தண்டனைகள் வழங்குவதைத் தவிர்க்க வேண்டுமெனச் சமூகம் எதிர்பார்ப்பது.

# யாழ்ப்பாணக் கைத்தொழில் கண்காட்சி வடக்கு உற்பத்தியாளர்களுக்கு நல்ல களம்

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறுகி; றது.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ், அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் உள்ள 20 தொழிற்சாலைகளில் 300க்கும் மேற்பட்ட அரங்குகளில், புத்தாக்கங்கள், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பல புதிய தொழில்கள் மற்றும் வடமாகாணத்திற்கே உரித்தான பல கைத்தொழில்களை தொழில் கண்காட்சியில் காணக்கூடியதாகவுள்ளது.

இந்தக் கண்காட்சி நடத்தப்படுகின்றமைக்கான காரணங்கள் குறித்து யாழ். அரச அதிபர் உட்பட அதில் பங்கேற்றுள்ள நிறுவனங்களின் தலைவர்கள் என்ன சொல்கிறார்கள்?

அவர்களின் கருத்துக்கள் இங்கே.....!

## நவீனத்துவங்களை அறிய இது மிகப்பெரும் வாய்ப்பு

**ஆ.சிவபாலசுந்தரன்,**
*யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்*



கைத்தொழில் கண்காட்சி இலங்கை வரலாற்றிலேயே வடக்கு மாகாணத்துக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக காணப்படுகின்றது.

தற்பொழுது வடக்கு மாகாணத்தில் கைத்தொழில் துறை மிகவும் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றது. இதில் உள்ள நவீனத்துவங்கள், புதிய புதிய விடயங்கள் போன்றவை எங்களுடைய கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு அவசியமாக இருக்கின்றது.

இந்த கைத்தொழில் கண்காட்சி மூலமாக அவர்கள் சிறந்த அனுபவத்தைப் பெற முடியும். இங்கே முதலிட விரும்புவர்களுக்கு இது ஒரு வாய்ப்பான விடயமாக இருக்கும். குறிப்பாக விவசாயத்துறை சார்ந்த கைத்தொழில் உற்பத்திகள், பெறுமதி சேர் விடயங்களுக்காக இந்த கண்காட்சியின் அம்சங்கள் மிகவும் பயனுடையதாகவும் புதிய புதிய விடயங்களை கற்றுக் கொள்வதற்கு வசதியாகவும் இருக்கும் என நம்புகின்றேன்.

கடந்த காலங்களில் ஏனைய துறைகளில் வளர்ச்சி ஏற்பட்டாலும் இந்த கைத்தொழில்துறையை பொறுத்தவரை இன்று வரை நாங்கள் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளோம்.

எனவே மேலும் நாங்கள் வளரவேண்டிய தேவை உள்ளது. அந்த வளர்ச்சியை பெறுவதற்கு நாங்கள் கட்டாய மாக இவ்வாறான கண்காட்சிகள் மற்றும் ஏனைய விடயங்களை செயற்படுத்துவதன் மூலமே இந்த துறைக்குள் பலரை ஈர்க்க முடியும்.

## எமது உற்பத்திகளுக்கு நல்ல ஒரு சந்தைக்களம்

**ச.பதிராஜா,**
*பனை அபிவிருத்தி சபையின் தலைவர்*



வடக்கில் உள்ள முயற்சியாலர்களுக்கு கைத்தொழில் கண்காட்சியானது மிகுந்த வரப்பிரசாதமாக காணப்படுகின்றது. ஏனென்றால் வடக்கு மக்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தவும் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் ஏனைய மாவட்டங்களில் உள்ள உற்பத்தியாளர்களுக்கு தங்களுடைய உற்பத்திகளைக் காண்பிக்கவும் ஒரு வாய்ப்பாக இந்த கண்காட்சி செயற்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக பனை அபிவிருத்திச் சபையினை பொறுத்தவரை இந்த கண்காட்சியானது எமக்கு ஒரு நல்ல சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. எமது உற்பத்தி பொருட்களை ஏனைய மாவட்டங்களில் உள்ளவர்களுக்கும் காண்பிக்க முடியும். அத்தோடு வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான ஒரு உறவுப் பாலமாகக்கூட இது இருக்கலாம்.

ஏனென்றால் இந்த கண்காட்சியில் 300 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் வருகை தந்துள்ளார்கள். வடக்கில் உள்ளதொழில் முயற்சியாளர்களுக்கும் ஏனைய மாவட்ட முயற்சியாளர்களுக்கும் இடையில் ஒரு உறவு பாலமாக இந்த கண்காட்சி அமையவுள்ளது.

வடக்கில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் தமது உற்பத்தி பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு ஒரு சாதகமான சந்தை வாய்ப்பை ஏற்படுத்தும் ஒரு நிலையைக்கூட நாங்கள் இங்கே பார்க்க முடிகின்றது.

அத்தோடு ஏனைய மாவட்டங்களில் உள்ள உற்பத்தியாளர்களும் தமது உற்பத்திப் பொருட்களினை இங்கே காண்பிப்பதற்கு மிகவும் வாய்ப்பான ஒரு சந்தையாக இந்த கண்காட்சி அமைந்துள்ளது.

வடக்கில் உள்ள தொழில் முயற்சியாளர்கள் கைத்தொழில் கண்காட்சியினை தமக்கு சாதகமாக பயன்படுத்தி தமது உற்பத்திகளை வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்யக்கூடியவாறான சந்தை வாய்ப்புக்குரிய வழிவகைகளை மேற்கொள்ளவேண்டும்.

## வடக்கு உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் ஒரு முயற்சி

**ச.சிவகங்காதரன்,**
*கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாகாண பணிப்பாளர்*



கைத்தொழில் அபிவிருத்தி கண்காட்சி தேசிய ரீதியிலான கண்காட்சி யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாவது தடவையாக இடம்பெறுகின்றது.

வடக்கு மாகாண தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கின்ற ஒன்றாகவும், இந்த கண்காட்சி மூலம் எங்களுடைய உற்பத்தியாளர்கள் அவர்களுடைய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கும், பிற மாவட்டங்களில் உள்ள உற்பத்திகளைப் பார்வையிடுவதன் மூலம் தங்கள் பொருட்களை ஏற்றுமதி சார்ந்த துறைக்கு விருத்தி செய்வதற்கும் தேவையான ஒன்றாக இருக்கின்றது.

அந்த வகையில் இந்த கண்காட்சி சிறப்பாக இங்கே இடம்பெறவுள்ளது. குறிப்பாக வடக்கில் உள்ள மக்கள் இந்த தொழில் கைத்தொழிற்சந்தையை சிறப்பாக பயன்படுத்த வேண்டும்.

கிட்டத்தட்ட வடக்கு மாகாணத்தில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட கைத்தொழில் முயற்சியாளர்களும் இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்தும் மொத்தமாக 300 இற்கும் மேற்பட்ட தொழில் முயற்சியாளர்கள் இங்கே வருகை தந்துள்ளமை ஒரு சிறப்பான விடயமாகும்.

எனவே வடக்கு மக்கள் இந்த மூன்று நாள் இடம் பெறும் கண்காட்சியைப் பார்வையிடுவதன் மூலம் தங்கள் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தாமாக தேடிக் கொள்ளமுடியும்.

அத்தோடு கண்காட்சி மூலம் கைத்தொழில் துறையோடு தொடர்புடையவர்கள் பல்வேறுபட்ட அனுபவங்களினை பெற்றுக்கொள்ள முடியும் தமது உற்பத்தி தொடர்பான சுய தேர்ச்சியினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்







# வாசகர் மடல்

## முறுக்கேற்றும் வசனங்களை சொல்லி அப்பாவி இளைஞர், யுவதிகளை பலிக்கடா ஆக்காதீர்கள்!

புலம்பெயர் மண்ணான கனடா தேசத்திலிருந்து தினமும் வாட்ஸ்சப் ஊடாக ஈழநாடு பத்திரிகை வாசிக்கும் பல்லாயிரக்கணக்கான வாசகர்களில் அடியேனும் ஒருவன்.

28-08-2023 அன்று வெளியான பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் “மீண்டுமொரு போர்” பற்றிய பதிவு கண்டு, என் மனத்தாங்கலை பதிவு செய்ய முயன்றுள்ளேன்.

ஐயா சம்மந்தன் பயன்படுத்திய “மீண்டுமொருபோரை நாங்கள் விரும்பவில்லை” எனும் பதங்கண்டு தக்கென பிழைத்த தமிழர்கள் சிரிப்பதா? அழுவதா? எனும் நிலைக்குள்ளாகியிருப்பார்கள், ஏன் பத்திரிகை ஆசிரியர் கூட இவர் நிதானத்துடன் பேசுகின்றாரா, ஜனநாயகத்தலைமை எனும் வகையில் ஆற்ற வேண்டிய பணிகளை முன்னெடுத்தாரா என்னும் கேள்விகளைத்தொடுத்து அந்த தலையங்கத்தை நகர்த்தியிருக்கிறார்.

ஐயா, முதல் நடந்த யுத்தம் தங்கள் போன்றோரின் ஆசிர்வாதத்துடன் நடந்ததா? நடந்து முடிந்த யுத்தம் சொலொணாத்துயர்களையும், ஈடு இணையற்ற இழப்புக்களையும் கறை படிந்த வரலாறுகளாக பாடங்கள் கற்றுத்தந்திருக்கிறது.

அந்தநாட்களில் இளைஞர்களே கிளர்ந்தெழுங்கள்! என்று மேடைக்கு மேடை யேறி வீரவசனம் பேசி, அப்பாவி இளைஞர்களை ஆயுதம் ஏந்த வைத்தவர்கள் யார்? அந்த இளைஞர்கள் உங்களுக்கு வேண்டாதவர்களை போட்டுத்தள்ளிய போதெல்லம், மனதுக்குள் புழங்காகிதம் அடைந்தவர்களெல்லவா, நீங்கள். அதே இளைஞர்கள் உங்களுக்கெதிராக ஆயுதங்களை திருப்பியபோது அதே இளைஞர்களை, பயங்கரவாதிகள் எனும் பட்டியலுக்குள் அடக்கியவர்கள் யார்?

இனிமேலாவது, இருக்கின்ற மக்களுக்கு நிம்மதியான தீர்வை உலக ஒழுங்கோடு பெற்றுத்தர முயற்சியுங்கள், அதற்குமுன், நீங்கள் அனைவரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட முயற்சியுங்கள், ஆகக்குறைந்தது இந்திய பிரதமருக்கு ஒருமித்த குரலில் கடிதம் எழுதுவதில் கூட, ஒற்றுமை கேள்விக்குறியாக இருக்கின்றது.

தமிழ் தலைவர்கள் ஒருபோதும் ஒன்றுபடமாட்டார்கள் என்று தமிழர்களால் புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், சிங்களத்தலைமைகள் நன்கு புரிந்து வைத்திருக்கிறார்கள், நீங்கள் ஒற்றுமைப்பட மாட்டீர்கள் என்று, அதனால்தான் அவர்கள் உங்களைப்பார்த்து “ ஒன்றாக வாருங்கள்” என்கிறார்கள்.

உங்களிடம் ஒரே ஒரு வேண்டுகோள் உங்கள் அரசியல் தலைமைகளை தக்க வைப்பதற்காக, இனிமேலாவது முறுக்கேற்றும் வசனங்களை சொல்லி அப்பாவி இழைஞர், யுவதிகளை பலிக்கடா ஆக்காதீர்கள்.

**- கே. அருண், மொன்றியால், கனடா.**

## ஈழநாடு பத்திரிகையின் நடுநிலை தன்மையையே கேள்விக்குறிக்கு ஆளாக்கி உள்ளது

ஊர்க்குருவி வழக்கம் போல் மறவன்புலவு சச்சிதானந்தவின் ஊதுகுழலாக மாறியுள்ளது. இந்துக்களின் பாரம்பரிய இடத்தில் கோவில் அமைக்க எதற்கு தேரர்கள் இடம் அனுமதி பெற வேண்டும்?. இவருக்கு யார் இந்த அதிகாரம் கொடுத்தது? தமிழ் பௌத்தர்களின் வரலாற்றை மேலும் ஆராய்ந்து வெளிப்படுத்தாமல், காலத்திற்கு காலம் திரிவுபடுத்தி, திருத்திய புதிய பதிப்புகளாக வெளியிடப்படும் மகாவம்சத்திற்கும் புத்த பெருமானின் போதனைகளை அறவே ஒதுங்கிக் தள்ளும் சில அடாவடி பிக்குகள் கூட்டத்திற்கும் வக்காலத்து வாங்க கிளம்பி உள்ளார் இந்த குழப்பவாதி சச்சிதானந்தம்.

பறாளை அரச மரம் சங்கமித்தை நட்டது என்று விளக்கம் வேறு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த விடயத்தை சில தசாப்தங்களுக்கு முன் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை மேற்கோள் காட்டி தமிழரை விற்கும் செயலுக்கு ஊர்க்குருவி துணை போவது கேவலமான செயல். ஈழநாடு பத்திரிகையின் நடுநிலை தன்மையையே கேள்விக்குறிக்கு ஆளாக்கி உள்ளது. விஞ்ஞான பூர்வமாக நிரூபணம் செய்யாது தொல்பொருள் நிறுவனம் போல் கோமாளிக் கூத்து ஆடுகிறார்கள் சச்சிதானந்தம் அன்ட் கோ, மற்றும் ஊர்க்குருவி போன்றோர். அரசமரம் ஆனது எங்கும் எளிதில் வளரக்கூடியது. ஏன் கட்டடங்கள் மேல் கூட வளர்வது கண்கூடு. இது தெரிந்தும் இந்த பௌத்தமயமாக்கலுக்கு துணை போகிறது சச்சிதானந்தம் கூட்டம். துபாய் நாட்டில் கூட பல அரசமரங்கள் நடப்பட்டு உள்ளன. நல்ல வேளை தொல்பொருள் திணைக்களமும், துவேஷம் கொண்ட ஒருசில பிக்குகளும், சச்சிதானந்தமும் டுபாய் வந்து இருந்தால் வரலாற்றையே திரித்து எழுதி இருப்பார்கள்.

**- நொயல் விஜேந்திரன்.**



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எம். அகிலேஸ்வரன் சித்தன்கேணி.**

**கேள்வி:** இலங்கையில் பொலிஸ்துறை முழுமையாக அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் அதிகாரத்தை பகிர்வது தொடர்பில் தமது கட்சி உடன்படாது எனவும், காணி அதிகாரம் பற்றி பேச்சு நடத்துவதற்கு தயாராகவே உள்ளது எனவும் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளாரே.

**வியுக்தியார்:** அவர் இப்போதாவது அறிவித்திருக்கிறார் என்று சந்தோசப்படுங்கள். பொலிஸ்துறை முழுமையாக அரசில் மயப்படுத்தப்பட்டுள்ளது என்கிறரே, அவர் ஆட்சிக்கு வந்தால் பொலிஸ் துறையை சீர்படுத்தலாம்தானே. அதைவிடுத்து பொலிஸ்துறை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் பொலிஸ் அதிகாரத்தை மாகாணங்களுக்கு வழங்க முடியாது என்பது அவருக்கு கிடைத்திருக்கின்ற ஒரு ஆயுதம் அவ்வளவுதான். அதிகம் ஏன் நாட்டின் ஆட்சியைத்தான் பிடிக்கமுடியவில்லை என்றாலும் ஒரு மாகாணத்தின் ஆட்சியையாவது பிடித்து அந்த மாகாணத்தின் பொலிஸ்துறையையாவது அரசியல் இல்லாமல் செய்படுத்திக் காட்டவேண்டியதுதானே?

---

**சபா. சிவநாதன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதற்காக இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலேயே இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக ரைம்ஸ் ஒவ் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளதே. அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?

**வியுக்தியார்:** இருதரப்பு இராணுவ உறவுகளை அதாவது இலங்கை - இந்திய இராணுவ உறவுகளை வலுப்படுத்தத்தான் அவர் வருகிறார் என்று அவர்களே சொல்லும்போது நாம் நம்பித்தானே ஆகவேண்டும். விரைவில் நமது ஜனாதிபதி சீனாவுக்கும் சொல்லவிருக் கிறார் அல்லவா. அவரும் சீன- இலங்கை இராணுவ உறவுகளை வலப்படுத்தத்தான் சீனா வருகிறார் என்று சீன பாதுகாப்பு அமைச்சர் விரைவில் அறிக்கை விடுகிறாரா என்று பொறுத்திருந்து பார்ப்போம். அதன் பின்னர் கருத்தைச் சொல்கிறேன்.

---

**எம். கௌதம், அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கான தீர்வை பெற்றுக்கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீடும் வகிபாகமும் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக் கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அன்ட்ரூ பிரெஞ்சிடம் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தன் வலியுறுத்தியுள்ளாரே. இனியாவது ஐநாவின் தலையீடு அதிகரிக்குமா?

**வியுக்தியார்:** அவர் என்ன இப்போதுதான் முதல்தடவையாக வலியுறுத்துகிறாரா என்ன? உங்கள் கேள்வியைப் பாரத்தால் ஐயா இப்போதுதான் வலியுறுத்தவது போல அல்லவா இருக்கின்றது. அவர் வலியுறுத்தியது அல்ல எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது, இப்போதும் அவரையே தமிழர் தலைவராக ஐநா நம்பிக்கொண்டிருக்கின்றது என்றால், ஐநா நமது அரசியலை எவ்வளவு தூரம் அறிந்து வைத்திருக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம் அல்லவா.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** தான் மோல்டாவில் நிதி முதலீடு செய்துள்ளதாக முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் போலியானவை என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளதுடன், தனக்கு அயர்லாந்தில் வீடு இருப்பதாக கூறப்படும் தகவலும் போலியானது எனவும் கூறியிருக்கிறாரே. இனியாவது அவர் மீது இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தாமல் இருப்பார்கள் என்று நினைக்கின்றேன்.

**வியுக்தியார்:** அவர் மீது இதுபோன்ற குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர்கள் வேறுயாருமல்ல. அவர்களோடு ஒரு காலத்தில் இயங்கிய அவரது தோழர்கள்தான். அது சரி அவர் அது போலயானது என்று அறிவித்திட்டால் போதுமானதா? அப்படி யெனில் இவரும்தான் பலர் பற்றிய பைல்களுடன் வந்து குற்றச்சாட்டக்களை முன் வைத்தார். அவற்றையும் அவர்கள் அனைவரும் இவரைப்போலவே மறுத்து விட்டனரே. அவரைப்போன்ற அரசியல்வாதிகள் எவருமே எங்கே சொத்தை வைத்திருந்தாலும் தங்கள் பெயர்களில் வைத்திருக்கப்போவதில்லையே. அதனால்தான் துணிந்து மறுக்கின்றார்கள். நான் சொல்வது அவர் குற்றம்சாட்டியவர்களைப் பற்றி. அனுரகுமார மிகவும் எளிமையான மனிதர் என்றுதான் அறிந்துவைத்திருந் தேன். ஆனால் விமானப் பணயங்களின்போது அவர் உயர்வகுப்பில் அதாவது சாதாரண வகுப்பில் பயணிப் பதைவிட மூன்று மடங்கு அதிகமாக செலவிட்டுத்தான் பயணிக்கிறார் என்ற குற்றச்சாட்டை மட்டும் அவர் இன்னமும் மறுக்கவில்லை.

---

**இரா. ஜெயருபன், பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** இலங்கையின் ஜனாதிபதியாக மீண்டுமொரு தடவை பதவியில் இருப்பேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்துள்ளாரே. என்ன நம்பிக்கையில் அப்படிச் சொல்கிறார் என்பது உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:** அது வேறு ஒன்றுமல்ல, தேசியப் பட்டியில் மூலம் ஒரேயொரு எம.பி.யாக பாராளுமன்றம் போன ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதியாக வருகின்றபோது தான் வரமுடியாதா என்று நினைக்கின்றார்போலும். அது சரி, யாரும் கற்பனையில் தமது விருப்பத்தை வெளியிடுகின்றபோது அதுபற்றி விமர்சிப்பது அழகல்லவே.

---

**எஸ். செந்துஜன், ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** தமிழ் மக்கள் செறிந்து வாழும் நிலாவெளி - பெரியகுளத்தில் இடைநிறுத்தப்பட்ட விகாரையின் கட்டுமானப் பணிகளை ஆரம்பிக்க அனுமதி வழங்கக் கோரி திருகோணமலை மாவட்ட செயலகத்தை பிக்குகள் முற்றுகையிட்டு போராடியதுடன், ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்த மண்டபத்துக்குள்ளும் புகுந்து களேபரத்தில் ஈடுபட்டனரே. அப்போது அங்கிருந்த அதிகாரிகள் ஆளனர் எல்லோரும் எழுந்துநிற்க அவர் அமர்ந்திருந்ததைப் பார்க்க, அவர்கள் அவருக்கு மரியாதையாக எழுந்து நிற்பதுபோல இருந்ததே.

**வியுக்தியார்:** போராட்டம் சரியானதா இல்லையா என்பதற்கு அப்பால், அந்த பிக்கு போராட்டம் நடாத்தி தனது கோரிக்கையை வென்றெடுத்தவிட்டார் அல்லவா?. விகாரை கட்டுவதற்கு வித்தித்திருந்த தடையை ஆளுனர் இப்போது நீக்கியிருக்கிறார். போராட்டம் நடாத்தவது என்றால் எப்படி நடாத்தவது என்பதை நம்மவர்கள் அந்த பிக்குவிடம் இருந்து படிக்கவேண்டும்.

# எதற்காக இடதுசாரிகளை ஆதரிக்கிறார்கள் இலத்தீன் அமெரிக்க வாழ் மக்கள்?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

இலத்தீன் அமெரிக்கா நாடான குவாத்தமாலாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தி சென்டர்-லெஃப்ட் மூவிமியன்டோ செமில் என்ற இடதுசாரிக் கட்சியின் தலைவர் பெர்னார்டோ அரேவலோ டி லியோன் வெற்றி பெற்றுள்ளார்.

இதே போல் ஈகுவடார் நாட்டில் ஆகஸ்ட் 20 அன்று நடைபெற்ற முதல் கட்ட தேர்தலில் இடதுசாரி குடிமக்கள் புரட்சி இயக்கத்தின் கோன்சாலஸ் 33.31 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி கண்டு இரண்டாம் கட்ட தேர்தலிலும் வெற்றிவாகை சூட தயாராகி வருகிறார்.

**இலத்தீனில் இடதுசாரி அரசுகள்**

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரி அரசுகளின் எழுச்சியாக 2018 இல் மெக்சிகோவும், பின்னர் 2019 இல் ஆர்ஜென்டினாவும் எழுந்தன. மேலும் 2020 இல் பொலிவியாவில் இடதுசாரி அரசு நிறுவப்பட்டது.

அதன்பின் 2021 இல் பெரு, ஹோண்டுராஸ் மற்றும் சிலி, பின்னர் கொலம்பியாவை தொடர்ந்து தற்போது பிரேசில் 2022 இல் இடதுசாரி அரசை அந்நாட்டு மக்கள் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த மாதம் ஆரம்பத்தில் குவாத்தமாலா நாட்டில் பெர்னார்டோ அரேவலோ ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.

இலத்தின் அமெரிக்காவில் அமெரிக்க ஆதரவு வலதுசாரி தலைவர்களால் ஆளப்படும் நாடுகளில் பொருளாதார நெருக்கடி, வேலையின்மை, வன்முறைகள், இயற்கை வளங்களைச் சூறையாட அனுமதிப்பது என மக்கள் விரோத ஆட்சியாக நடத்தப்படுகிறது.

இந்த வலதுசாரிகளின் ஆட்சிக்கு எதிராக அந்நாடுகளில் உள்ள இடதுசாரி, சோஷலிஸ்டு மற்றும் மைய - இடது (சென்டர்-லெப்ட்) உள்ளிட்ட இடதுசாரிக் கட்சிகள் தொடர் போராட்டத்தையும் மக்கள் மத்தியில் தொடர் பிரச்சாரங்களையும் முன்னெடுத்து வருகின்றன.

**இடதுசாரி பாதையில் பயணம்**

இலத்தீன் அமெரிக்காவில் உள்ள 12இற்கும் அதிகமான நாடுகளில் ஜனநாயக தேர்தல் முறை மூலமாக



தேர்ந்தெடுக்கப்பட்ட இடதுசாரி அரசாங்கங்கள் தற்போது ஆட்சிப் பொறுப்பில் உள்ளன. எதற்காக இலத்தீன் அமெரிக்க நாடுகள் இடதுசாரி பாதையில் தொடர்ந்து முன்னேறுகின்றன என்பது அமெரிக்காவிற்கு வியப்பாக இருப்பினும், மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்ட அரசுகள் இவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

வரலாற்றை திரும்பிப் பார்த்தால், பனிப்போரின் உச்சக்கட்ட காலத்தின்போதும், லத்தீன் அமெரிக்காவில் தொடர்ச்சியான இடதுசாரி அரசாங்கங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த அரசாங்கங்கள் பிராந்தியத்தில் அதன் புவிசார் மூலோபாய ஆர்வத்தின் ஒரு பகுதியாக அமெரிக்க அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்ட எதிர்ப்புரட்சி சதிகளை எதிர்கொண்டன.

வரலாற்று ரீதியாக இவற்றில் 1954 குவாத்தமாலா







ஆட்சிக்கவிழ்ப்பு, 1964 பிரேசிலிய ஆட்சிக்கவிழ்ப்பு, 1973 சிலி ஆட்சிக்கவிழ்ப்பு மற்றும் 1976 அர்ஜென்டினா ஆட்சிக்கவிழ்ப்பு ஆகியவை அமெரிக்க சதித் திட்டங்களால் நிகழ்த்தப்பட்டன என்பதும் உலகறிந்ததே.

1960 - 1970களின் காலகட்டங்களின் போது, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஜனநாயக நடைமுறைகள் மிகவும் பலவீனமாக இருந்தது. மக்களின் தேர்தல் வழிப்பட்ட தீர்ப்புகளுக்கு இலத்தீன் அமெரிக்க நாடுகளின் இராணுவங்கள் மதிப்பு அளித்தது இல்லை என்பதும் வரலாறே.

**ஆபரேஷன் கோண்டர்**

இந்த ஆட்சிக்கவிழ்ப்புக்கள் அனைத்தும், அமெரிக்க அரசின் ஆபரேஷன் காண்டரின் (Operation Condor) ஒரு பகுதியாக, அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவுடன் கடும்போக்கு வலதுசாரி இராணுவ சர்வாதி காரங்களால் இறையான்மை உள்ள மக்களின் ஆட்சிகள் கைப்பற்றப்பட்டன.

அமெரிக்காவின் உளவு நிறுவனமான சிஐஏ ஆதரவு டைய கடும்போக்கு வலதுசாரி சர்வாதிகார ஆட்சிக ளில், சட்டவிரோத அரசியல் கைதுகள், சித்திரவதைகள், அரசியல் காணாமல் போதல் மற்றும் குழந்தை கடத்தல் உட்பட பல மனித உரிமை மீறல்களை செய்தன.

சர்வதேச அழுத்தத்தின் காரணமாக இந்த ஆட்சிகள் பலவும் வீழ்ச்சியடையத் தொடங்கின. இவ் வலதுசாரி அரசுகள் கொடூரமான அட்டூழியங்களில் ஈடுபட்டதன் காரணமாக இலத்தீன் பொது மக்கள் அமெரிக்காவிற்கு எதிராக போராடினர். பல இலத்தீன் நாடுகள் மறைமுக போரை எதிர்கொண்டன என்பது வரலாற்று உண்மை யாகும்.

**கொலம்பியாவில் இடதுசாரி தலைமை**

இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பிய நாட்டின் மக்கள் தொகை 50 மில்லியன் ஆகும். மக்கள் தொகையின் படி இலத்தீன் அமெரிக்க கண்டத்தில் மூன்றாவது பெரிய நாடான கொலம்பியா உள்நாட்டுப் போர்களின் நீண்ட வரலாற்றைக் கொண்ட கொலம்பிய நாட்டில் பெட்ரோவின் வெற்றி அதி முக்கியத்துவம் வாய்ந்தது.

கொலம்பியாவில், எம்-19 எனும் ஆயுதக் குழுவில் கிளர்ச்சியாளராக செயல்பட்ட பெட்ரோ சிறையில் அடைக்கப்பட்டு சித்ரவதைக்கு உள்ளானவர். பின்னர், மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

ஆயுதப் போராட்ட பாதையை கைவிட்ட அந்தக் குழு 1990ஆம் ஆண்டில் கலைக்கப்பட்டது. அதன் நீட்சியாக எம்.19 ஜனநாயக முன்னணி என்ற அரசியல் கட்சி ஸ்தாபிக்கப்பட்டு, அரசியல் அமைப்பு மற்றும் நாடாளு மன்ற நடைமுறைகளில் அக்கட்சி பங் கேற்க தொடங்கியது. அந்நாட்டின் அரசியல் அமைப்பையே மாற்றி எழுதியது.

கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படைப்பிரிவு 1964ஆம் ஆண்டில் கொலம்பிய கம்யூனிஸ்ட் கட்சியின் படைப்பிரிவாக ஸ்தாபிக்கப்பட்டது. நீண்ட ஆயுதப் போராட்டங்கள் மற்றும் மோதல்களுக்குப் பிறகு 2016ஆம் ஆண்டில் ஆயுதப் பாதையை நிராகரித்து விட்டு அமைதிப் பாதைக்கு திரும்பிட குயுசுஊ முடிவு செய்து, அரசாங்கத்துடன் அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

**குவாத்தமாலா வெற்றி**

இம்மாத ஆரம்பத்தில் ஊழல் எதிர்ப்புப் அரசியல்வாதியான பெர்னார்டோ அரேவலோ குவாத்தமாலாவின் ஜனாதிபதித் தேர்தலில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளார்.

98 சதவீத வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில், அரேவலோ 58 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார். அவரது போட்டியாளரான சாண்ட்ரா டோரஸ் 36 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்தார்.

குவாத்தமாலாவில் அவசரமான மாற்றத்திற்கான நம்பிக்கைகளுக்கு மத்தியில் அரேவலோ வென்றார். ஊழலுக்கு எதிரான பிரச்சாரகர், வன்முறையைச் சமாளிப்பதாக உறுதியளிக்கிறார். பரவலான ஊழலைச் சமாளிக்கத் தவறிய தலைவர்களின் கோபத்தால் வாக்காளர்கள் மாற்றத்திற்கான ஒரு தீர்க்கமான தேர்வை மேற்கொண்டனர். 64 வயதான முன்னாள் இராஜதந்திரி மற்றும் முன்னாள் ஜனாதிபதியின் மகன், வன்முறை மற்றும் பாரிய உணவுப் பற்றாக்குறைக்கு மத்தியில் ஆட்சியைப் பிடித்துள்ளார்.

**பிரேசில் இடதுசாரிகள்:**

பிரேசில் இடதுசாரித் தலைவர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா இவ்வருட ஜனவரியில் அதிபராகப் பதவியேற்றார். பிரேசிலின் புதிய அதிபராக லூயிஸ் பொறுப்பேற்கையில் வாக்கு வித்தியாசம் குறைவாக இருந்ததால் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ளாத



போல்சனேரோ தனது ஆதரவாளர்களுடன் அவ்வப்போது போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

ஜனவரி 2003 முதல் டிசம்பர் 2010 வரை அதிபராக இருந்த லூலா, 31 அக்டோபர் 2022 அன்று நடந்த தேர்தலில் முன்னைய போல்சனாரோவை தோற்கடித்தார். அவர் பதவியேற்ற ஒரு வாரத்திற்குப் பிறகு, பிரேசில் நாட்டில் கலவரங்கள் தீவிரமாக வெடித்தன.

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபர் லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வாவை எதிர்க்கும் வகையில், போல்சனாரோவின் ஆதரவாளர்கள் நாட்டின் தலை




நகரான பிரேசிலியாவில் உள்ள அரசு கட்டிடங்களை சேதப்படுத்தியுள்ளனர். பிரேசிலின் முன்னாள் ஜனாதிபதி ஜெய்ர் போல்சனாரோவின் நூற்றுக்கணக்கான ஆதரவாளர்கள் நாடாளுமன்றம், அதிபர் மாளிகை மற்றும் உச்ச நீதிமன்ற கட்டிடங்களை சேதப்படுத்தின. தங்கள் தேர்தல் தோல்வியை ஏற்க மறுத்து வருகின்றனர்.

**இலத்தீன் சமூக மாற்றம்:**

தொழில் நுட்ப வளர்ச்சி காரணமாக 20ஆம் நூற்றாண்டு வர்த்தகப் பரிமாணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் 21ஆம் நூற்றாண்டில் பல புதிய தொழில்நுட்ப பரிமாணங்களின் வளர்ச்சிக்கு வித்திட்டுள்ளன.

தற்போது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏற்பட்டு வரும் சமூக கட்டமைப்பு மாற்றங்கள் அரசியல் - சித்தாந்த மாற்றங்களுக்கும் வித்திடுகிறது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் நகரப் பகுதிகளில் வாழ்ந்து வருவதும், நகரக் கட்டமைப்புகள் அதிவேகமாக வளர்ந்து வருகின்றன.

# இலங்கைக்கு எந்நிலையிலும் ஒத்துழைப்பு வழங்குவோம்!

## ஜப்பான் பிரதிநிதிகள் குழு உறுதி!

கொழும்பு, செப். 03

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டும் இலங்கை வலுவானதொரு முன் னேற்றப் பாதையில் செல்வதற்கு எந்நிலையிலும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என ஜப்பான் தெரிவித்துள்ளது.

இலங்கை விரைவான பொருளாதார ஸ்திரப்படுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. சர்வதேச ஒத்துழைப்புக்கு மத்தியில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளாது என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க ஜப்பான் நாட்டின் பிரதிநிதிகள் குழுவினரிடம் குறிப்பிட்டார்.



இலங்கைக்கு வருகை தந்துள்ள தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிதேகி ஆகியோருக்கும் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு நிதியமைச்சில் இடம்பெற்றது.

இலங்கை விரைவான பொருளாதார ஸ்திரப்படுத்தலை இலக்காகக் கொண்டு செயற்படுகிறது. சர்வதேச ஒத்துழைப்புக்கு மத்தியில் இலங்கை மீண்டும் பொருளாதார நெருக்கடியை எதிர்க் கொள்ளாது.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து இலங்கை மீட்சி பெறுவதற்கு ஜப்பான் தொடர்ந்து ஒத்து ழைப்பு வழங்கியுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் ஜப்பான் ஆரம்பத் தில் இருந்து இலங்கைக்கு சாதகமாக செயற்படுவது வரவேற்கத்தக்கது என நிதி இராஜாங்க அமைச்சர் இதன் போது குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டும் இலங்கை வலுவானதொரு முன்னேற்றப் பாதை யில் செல்வதற்கு எந்நிலையிலும் முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம் என தகஷிதி யுசுகே தலைமையிலான மேலவை அமைச்சர் சபையின் பிரதிநிதிகள் மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் உறுதியளித்துள்ளனர். (அ)

# கோட்டா நாட்டை விட்டு வெளியேறியபோது பியானோ வாசித்த பொலிஸார் பதவி நீக்கம்

கொழும்பு, செப். 03

நாட்டில் கடந்த ஆண்டு ஏற்பட்ட மக்கள் புரட்சியை தொடர்ந்து, ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றிய பின்னர், எதிர்ப்பாளர்களை பியானோ இசைத்து மகிழ்வித்த அதிகாரி ஒருவரை பணிநீக்கம் செய்துள்ளதாக இலங்கை பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்தித்த எதிர்ப்பாளர்களால், ஜனாதிபதி மாளிகை கைப்பற்றப்பட்ட நாளில் பாதுகாப்பிற்காக கான்ஸ்டபிள் தயாரத்ன நியமிக்கப்பட்டார்.

இதன்போது ஜனாதிபதி மாளிகை வளாகத்தில் இருந்த பியானோவில் அமர்ந்து, அதன் அறைகள் வழியாக சென்று கொண்டிருந்த மக்களுக்கு பாடலை இசைத்திருந்தார்.

“கட்டடத்தை சேதப்படுத்தும் போது தயாரத்ன பியானோ வாசித்துக் கொண்டிருந்தார்” என்று பெயர் வெளியிடாத ஒரு மூத்த அதிகாரி கூறினார்.

நீண்ட விசாரணைக்குப் பிறகு கான்ஸ்டபிள் ஒழுக்கத்தை மீறியதாக பொலிஸ் அதிகாரிகள் முடிவு செய்திருந்தனர்.

ஜூலை 2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி மாளிகை தாக்கப்படுவதற்கு முன்பு, கோட்டாபய பதவி விலகக் கோரி பல மாதங்களாக எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வெளியே முகாமிட்டிருந்தனர்.

எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதி மாளிகையை கைப்பற்றினர், பின்னர் அங்கிருந்த நீர் தடாகத்தில் உல்லாசமாக இருப்பதையும், ராஜபக்சவின் படுக்கையில் அறையில் மகிழ்ச்சியாக இருந்தமையையும் காண முடிந்தது. (அ)

# கருத்தடை மாத்திரைகளை விற்பனை செய்தவர் கைது!

கொழும்பு, செப். 23

சட்டவிரோதமாக கருத்தடை மாத்திரைகளை விற்பனை செய்துவந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் மாவட்ட உணவு மற்றும் மருந்து பரிசோதனை பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பெண் அனுராதபுரம் - யாழ்ப்பாண சந்திப் பகுதியில் வைத்து அனுராதபுரம் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள பெண் அனுராதபுரத்தில் சேவையாற்றும் பிரபலமான மருத்துவர் ஒருவரிடம் பணிபுரிந்து வருபவர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைதான பெண்ணிடம் 7 கருத்தடை மாத்திரைகளை 35 ஆயிரம் ரூபாவுக்கு கொள்வனவு செய்பவரை போன்று ஒருவரை அதிரடிப்படையினர் அனுப்பியுள்ளனர். இதன் போதே குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்றம் பெண்ணை எச்சரித்ததுடன் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து விடுதலை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நீர்க்கசிவினால் ரூபா 2.7 பில்லியன் இழப்பை எதிர்கொண்டுள்ளது இலங்கை மின்சார சபை

கொழும்பு, செப். 03

சமனல வாவியில் இருந்து ஆண்டுதோறும் 78 மில்லியன் காண மீற்றர் நீர் கசிந்து வருவதாக தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக இலங்கை மின்சார சபைக்கு 2.7 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சமனல வாவி நீர் மின் உற்பத்திக்கான வாவி என்பதுடன், அதன் நீரின் அளவுக்கேற்ப நீர் கசிவு மாறுபடுமென பொறியியலாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது காணப்படும் விரிசல்களை மண் மற்றும் மணல் கொண்டு நிரப்புவதற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, மின் உற்பத்திக்கான முதன்மை நீர்த்தேக்கத்தின் பல இடங்களில் இருந்து நீர் கசிந்து வருவதாகவும், நீரை பாதுகாப்பதற்கு விரிசல்களை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர முன்னதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன், கசிந்து வரும் நீரை விவசாயம் மற்றும் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக அமைச்சர் மேலும் சுட்டியுள்ளார். (அ)

# கடும் நிதி நெருக்கடியில் இலங்கை சட்டக்கல்லூரி

கொழும்பு, செப். 03

திறைசேரியிலிருந்து பணம் ஒதுக்கப்படாததால் சட்டக் கல்லூரி நடத்திச் செல்வதில் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளதாக சட்டக்கல்லூரியின் அதிபர் கலாநிதி அதுல பத்திநாயக்க தெரிவித்துள்ளார்.

நீதித்துறை, சிறை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்திலேயே அவர் இதனைக் கூறினார்.

பொருளாதார நெருக்கடியுடன் செலவுகள் அதிகரித்துள்ளதால் மாணவர்களிடம் இருந்து கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

சட்டக்கல்லூரியின் கட்டணத்தை மாணவர்களுக்கு சுமையை ஏற்படுத்தும் வகையில் உயர்த்தப்பட்டமைக்கான காரணம் என்னவென எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சட்டக்கல்லூரி மாணவர்களுக்கு சுமையை ஏற்படுத்தாமல் பயிற்சி வழக்கறிஞர்களிடம் இருந்து உறுப்பினர் கட்டணத்தை வசூலிக்கும் முன்மொழிவும் இங்கு பரிசீலிக்கப்பட்டது.

இது தொடர்பில் மேலும் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும் என குழுவின் தலைவர் கலாநிதி விஜயதாச வலியுறுத்தினார். (அ)

# வவுனியா பொது வைத்தியசாலையிலிருந்து 11 வைத்திய நிபுணர்கள் வெளிநாடு பயணம்!

வவுனியா, செப். 03

வவுனியா மாவட்ட வைத்தியசாலைகளில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 08 வைத்தியர்களும் வெளிநாடு சென்றுள்ளதாக வவுனியா மாவட்ட அரச வைத்திய சங்க கிளை செயலாளர் வைத்தியர் அரங்கன் தெரிவித்தார்.

வவுனியா பொது வைத்தியசாலையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் கடந்த வருடம் 6 ஆம் மாதத்தில் இருந்து இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளார்கள்.

இதன்படி வைத்தியர்கள் ஆயிரத்திற்கு மேற்பட்டோர் சென்றுள்ளார்கள். விசேட வைத்திய நிபுணர்கள் 272 பேர் சென்றுள்ளனர். பொருளாதார நெருக்கடி, வேலை செய்வதற்கான பொருத்தமான வளங்கள் இன்மை, இடவசதிகள் போதாமை போன்றனவே இதற்கு காரணம்.

தற்போது பிரதான வைத்தியசாலைகள் தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளுக்கு ஆட்பற்றாக்குறை ஏற்படுகிறது.

வைத்தியர்களுக்கான மருந்துகள், விடுதிகள், பாதுகாப்பு பிரச்சனை என்பன இதற்கு காரணங்களாகும். வவுனியா மாவட்டத்தில் செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் ஒரு வைத்திய நிபுணர் கூட இல்லை.

வவுனியாவிற்கு அண்மையில் உள்ளவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கே வருகிறார்கள். ஆட்பற்றாக்குறை வவுனியா வைத்தியசாலையிலும் ஏற்படுமாக இருந்தால் நிலமை மோசமாக அமையும்.

வவுனியா வைத்தியசாலைக்கு அண்மையில் ஒரு வைத்திய நிபுணர் நியமிக்கப்பட்டிருந்தார். அவருடைய நியமனக் கடிதத்தில் முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களையும் பார்க்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒரு வைத்திய நிபுணர் எவ்வாறு 4 மாவட்டங்களை பார்க்க முடியும். அவ்வளவு தூரம் எங்களிடம் வைத்திய நிபுணர்கள் இல்லை.

வைத்தியர்களுக்கான வேலை செய்யக் கூடிய சூழலை ஏற்படுத்திக் கொடுக்காவிட்டால் இன்னும் பல வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்லக் கூடிய நிலை ஏற்படும்.

இன்னும் 5,000 இற்கு மேற்பட்டோர் செல்வதற்கு தயாரான நிலையில் உள்ளனர். இதனை தடுக்கவேண்டுமானால் அவர்களது பிரச்சனைகள் தீர்க்கப்படவேண்டும். அவர்கள் விருப்பத்துடன் வேலை செய்யக் கூடிய நிலை உருவாக்கப்பட வேண்டும்

வவுனியா மாவட்டத்தில் 2022ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரையான காலப்பகுதி வரை வவுனியா பொது வைத்தியசாலையில் இருந்து 11 வைத்திய நிபுணர்களும், 05 சாதாரண வைத்தியர்களும், வவுனியா மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்து 03 சாதாரண வைத்தியர்களும் வெளிநாட்டிற்கு சென்றுள்ளனர்.

இந்த நிலை தொடருமாக இருந்தால் மக்களுக்கு பாதிப்பே. இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு எமது சங்கத்தின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற முன் வரவேண்டும்-என்றார். (அ)

## ஏழு மீனவர்கள்...

குறிப்பிடப்பட்டுள்ளது.

கைதானவர்கள், மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

## நாணய...

எல்லைக்குகள் சர்வதேச நாணய நிதியத்தின் குறித்த நிபந்தனையை நிறைவேற்ற முடியாமல் போனது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் கால தாமதங்கள் ஏற்பட்டாலும், அவை நிறைவேற்றப்பட்டுள்ளன.

ஜூன் 30ஆம் திகதிக்குள் எட்டப்படவேண்டிய வருமான இலக்குகளை உயர்த்தும் இலக்கு மட்டுமே இன்னமும் எட்டப்படவேண்டியுள்ளது. சில பொருளாதார ஆய்வு நிறுவனங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 35 வீதம் மாத்திரமே நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூறுவது தவறான தரவுகளாகும்.

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புடன் தொடர்புப்படுத்தி ஊழியர் சேமலாப நிதி 50 வீதத்தால் குறைக்கப்படும் என சிலர் கூறுவது பொய்யானது. ஒவ்வொரு வருடமும் 9 வீதத்தினால் ஊழியர் சேமலாப நிதி அதிகரிக்கிறது- என்றார். (அ)

## மிகச்சிறந்த...

ஏ முதல் எவ் வரையிலான மட்டங் களில் இந்த தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க ஏ மட்டத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

இந்த தரப்படுத்தலின்போது, இலங்கையுடன் கொலம்பியா, டொமினிக்கன் குடியரசு, ஐஸ்லாந்து, இந்தோனேஷியா, மொராக்கோ மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் முன்னணியில் காணப்படுகின்றன.

குறித்த தரப்படுத்தலில் இந்திய மத்திய வங்கியின் ஆளுநர் ஷக்திகாந்தா தாஸ் முதலிடத்தில் உள்ளார். (அ)

## வடக்கு...

செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் புத்த சாசன, சமய மற்றும் கலா சார அலுவல்கள் அமைச் சர் விதுர விக்கிரமநாயக் கவிடம் நேற்று வினவிய போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார் .

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகள் இருக்கக்கூடாது - புதிதாக நிர்மாணிக்கப்படக் கூடாது என்று யார் சொன்னது? அப்படியாயின் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றார்களா? வடக்கு - கிழக்கில் மாத்திரம் தமிழர்களுக்கு இந்து ஆலயங்கள் அமைக்கப்படவில்லை. நாட்டின் 25 மாவட்டங்களிலும் தமிழர்களுக்காக இந்து ஆலயங்கள் உள்ளன. சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் இந்து ஆலயங்கள் பெருமளவில் உள்ளன. உதாரணத்துக்குக் கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் எத்தனை இந்து ஆலயங்கள் உள்ளன? அங்கு மூலைமுடுக்கெல்லாம் பெரிய, சிறிய இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிராகச் சிங்கள பௌத்தர்கள் போர்க்கொடி தூக்கினார்களா? பல இடங்களில் இந்து ஆலயங்களுக்குச் சென்று சிங்கள பௌத்தர்கள் கூட வழிபடுகின்றார்கள்.

எனவே, தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும் இனவாதத்தை - மதவாதத்தைத் தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்தவேண்டும்.

இன்று நாட்டு மக்களுக்கிடையில் இனவாத, மதவாதப் பிரச்சினைகள் இல்லை. தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் ஊடகங்களும்தான் இப்படியான பிரச்சினைகளைத் தூண்டி விடுகின்றன."
- என்றார். (அ)

## பிரதமர்...

படுத்தும் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், விமுக்தி குமார துங்கவை வெளிநாடு ஒன்றில் சந்தித்து இது தொடர்பாக அறிவித்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இதற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவின் ஆசிர்வாதமும் கிடைத்துள்ளதாக தெரியவருகிறது.

எது எப்படி இருந்தபோதிலும் விமுக்தி குமாரதுங்க இந்த விடயம் தொடர்பில் தனது இறுதி முடிவை அறிவிக்கவில்லை எனவும் பேசப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் புதல்வர் அரசியலுக்கு வர உள்ளதாக கடந்த காலங்களில் பல செய்திகள் வெளியாகி இருந்தன.

எனினும் பிரிட்டனில் கால்நடை மருத்துவராக சேவையாற்றி வரும் விமுக்தி குமாரதுங்கவுக்கும் அரசியலில் ஈடுபடும் எண்ணம் கிடையாது எனக் கூறப்பட்டது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவும் விமுக்தியை அரசியலில் களம் இறக்கும் நோக்கமில்லை என்றும் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ஐ.நா...

இரு தரப்பினரும் கலந்துரையாடிய தாகவும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை சரியான திசையில் பயணிப்பதாகத் தெரிவித்த அவர், உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக அடுத்த இரண்டு வருடங்கள் இலங்கைக்கு மாத்திரமன்றி பெரும்பாலான நாடுகளுக்கு மிகவும் கடினமானதாக இருக்கும் என மார்க் அன்ரே பிரெஞ்ச் எச்சரித்தார்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கவும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்யவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் குறிப்பிட்டார்.

"நாங்கள் நீண்ட கால அடிப்படையில் ஏற்றுமதியை பல்வகைப்படுத்த திட்டமிட்டுள்ளோம், உணவில் தன்னிறைவு பெறுவது மட்டுமல்லாமல், ஏற்றுமதி மூலம் அந்நிய செலாவணி வருவாயை அதிகரிக்கவும்" நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பிரதமர் கூறினார்.

3 தசாப்த கால மோதல்களால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஐ.நா பிரதிநிதியிடம் பிரதமர் விளக்கினார்.

மோதலின் போது கையகப்படுத்தப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள 95 வீதத்துக்கும் அதிகமான காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன, விவசாயிகள் தங்கள் நிலங்களில் விவசாயம் செய்யும் வகையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன, எல்.டி.டி.ஈ கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் மற்றும் கடற்றொழில் வாழ்வாதாரம் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

பல தசாப்தங்களாக ஐ.நா அமைப்பில் சேவையாற்றிய இலங்கையர்களின் பெறுமதியான சேவைகளுக்கு ஐ.நா பிரதிநிதி பிரான்ஞ் இலங்கைக்கு நன்றி தெரிவித்தார். காணாமற்போனோர் அலுவலகம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது பணிகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாகவும், எஞ்சியுள்ள பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இலங்கைக்கு வழங்கிய ஆதரவிற்கு ஐக்கிய நாடுகளுக்கு நன்றி தெரிவித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, வதிவிடப் பிரதிநிதி அதனை மேல் மட்டத்திற்கு கொண்டு செல்வார் என நம்பிக்கை தெரிவித்தார். (அ)

# போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையில் நாற்பது ஆண்டுகளாக பொலிஸார் தோல்வி



கொழும்பு, செப். 03

சுமார் 40 ஆண்டுகளாக நாட்டில் போதைப்பொருளை ஒழிக்க பொலிஸார் தோல்வியடைந்துள்ளதாக மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருளை ஒழிக்க முடியாமைக்கான காரணம் அதன் மூலம் கிடைக்கும் இலாபமே.

இது ஒரு வணிகமாகும். இதன் மூலம் பணம் சம்பாதிக்கலாம்

கஞ்சா மாத்திரைகள் இப்போது பாடசாலை மாணவர்களின் கைகளில். இதனை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகளின் கடமையாகும்.

கடந்த 1982ஆம் ஆண்டில் ஹெரோயினுடன் முதல் நபர் கைது செய்யப்பட்டார். அவர் ஒரு சுற்றுலா வழிகாட்டி.

இன்று, 1,40,22 நகரங்கள், புறநகர்ப் பகுதிகள், கிராமங்கள், கிராமப்புற சேவைப் பகுதிகளில் உள்ள பாடசாலை குழந்தைகளுக்கு போதைப்பொருள் பரவியுள்ளது.

இதை நிறுத்த இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று விநியோகத்தை நிறுத்த வேண்டும், மற்றொன்று தேவையை நிறுத்த வேண்டும்.

அந்த விநியோக வலையமைப்பு முற்றிலும் அழிக்கப்பட வேண்டும். இதை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து தடுத்து நிறுத்தவேண்டும் - என்றார். (அ)

# இராணுவ பேருந்துக்கு தீ வைத்த நபர் கைது!

கொழும்பு, செப். 03

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்திற்கு முன்பாக இராணுவ பேருந்துக்கு தீ வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் மஹியங்கனை - பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 33 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மார்ச் மாதம் 31ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் மிரிஹான இல்லத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின்போதே குறித்த பேருந்துக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார்

இந்தநிலையில், அவர் நுகேகொடை நீதிவானிடம் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

## கோப்பாயில்...

செய்த முறைப்பாட்டில் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து வாகனம் ஒன்றில் வருகை தந்த 12 பேர் கொண்ட கும்பல், பழ வியாபாரியை தாக்கிவிட்டு அவரை கடத் திச் சென்றதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கோப்பாய் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் கடத்தப்பட்ட வியாபாரி மீட்கப்பட்டதுடன், கடத்தல் கும்பலைச் சேர்ந்தவர்களும் கைது செய்யபட்டனர் எனத் தெரியவருகிறது.

மேலதிக விசாரணைகளை கேப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

## காற்றாலை...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பூநகரி, மன்னார் ஆகிய பகுதிகளில் விலை மனு கோரப்படாமல் காற்றாலை மின் பிறப்பாக்கிகள் உருவாக்கப்பட இருக்கின்றன. இந்திய முதலீட்டாளர்கள் இதற்கான முதலீட்டை மேற்கொள்ள உள்ளதாக கூறப்படுகின்றது.

இதற்கு விலை மனு கோரப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் சிலர் முன்வைக்கின்றனர்.

குறித்த காற்றாலை மூலமாக எம் சமூகத்திற்கு பிரச்னைகள் அல்லது பாதிப்புகள் ஏற்படும் என கூறியுள்ளனர். இது விஞ்ஞான ரீதியாக எந்தளவுக்கு சரி என தெரியவில்லை. ஆனாலும் இந்த விடயங்கள் எல்லாவற்றையும் கவனத்திற்கொண்டு முதலீடு செய்வதே சரி என நான் நினைக்கிறேன்.

அது இந்திய கம்பனிகளாக இருக்கலாம் அல்லது வேறு கம்பனிகளாக இருக்கலாம். எதுவாக இருந்தாலும் எமது மக்களுக்கு பாதிப்பு இல்லாதவாறு இருக்கவேண்டும்-என்றார். (அ)

## புதிய...

சுகிஷ்வர பண்டார உள்ளிட்டோரும் கலந்துக்கொண்டுள்ளனர்.

லான்சாவின் சவாலை சாகர ஏற்றுக்கொண்டாரா என இதன்போது கொழும்பு மாவட்ட பிரதேச சபை ஒன்றின் தலைவர் வினவியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள நிமல் லான்சா, " சாகரவுடன் விவாதத்தை நடத்தினால், வருவீர்களா என தொலைக்காட்சி ஒன்று என்னிடம் கேட்டது. ஆம் கட்டாயம் வருவேன் என நான் கூறினேன்" என தெரிவித்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்டுள்ள சுகிஷ்வர பண்டார, சாகர காரியவசம் வருவார் என நான் நினைக்கவில்லை" என சிரித்தவாறு கூறியுள்ளார்.

" பாராளுமன்ற உறுப்பினர் லான்சா கூறும் விடயங்கள் உண்மை, மொட்டுக் கட்சியை ஆரம்பிக்கும் போது லான்சா போன்றோர்களே பசில் ராஜபக்ஷவுடன் முன்னிலையில் இருந்தனர் என சாகர காரியவசம் பத்திரிகைக்கு கூறியதை பார்த்தேன்" என சுகிஷ்வர பண்டார குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் தனது ஆரம்ப பொதுக்கூட்டத்தை நடத்த உள்ள புதிய அரசியல் கூட்டணியின் கீழ் மட்ட பிரதிநிதிகளை தெளிவுப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது நடைபெற்று வருவதாக அந்த கட்சியின் ராஜகிரிய அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே பிரதான அரசியல் கட்சிகளின் தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் புதிய அரசியல் கூட்டணியின் பிக்கு அமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக கடந்த வாரம் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu

# கூட்டணி அமைத்தாலும் சஜித்தான் வேட்பாளர்!

**ஐக்கிய மக்கள் சக்தி திட்டவட்டம்**

கொழும்பு, செப். 03

“ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித்தான், கூட்டணி அமைத்தால்கூட இந்நிலைப்பாடு மாறாது.” என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான சமிந்த விஜேசிறி.

ஐ.ம.சவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கவே ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது. இந்த நிலைப்பாட்டிலேயே நாமும் உள்ளோம். கூட்டணி அமைப்பதில் நிதானம் தேவை. அரசமைப்பு ரீதியில் உள்ள சூழ்ச்சிகள் பற்றியும் அவதானம் செலுத்தப்படவேண்டும்.

மொட்டு கட்சியினரை தாக்கியே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியானார். இது மொட்டு கட்சிகாரர்களுக்கு புரியவில்லை. ஒரு கட்சியாலேயே மக்கள் போராட்டம் சீரழிக்கப்பட்டது. அந்த கட்சிக்கும் கடந்த காலத்தில் கரைபடிந்த வரலோறே உள்ளது. அந்த கட்சியின் செயலால்தான் ரணில் ஜனாதிபதியானார்.

அதேபோல பதவிகளை இலக்காகக்கொண்டு கூட்டணி அமைப்பதற்கு நாம் எதிர்ப்பு-என்றார். (அ)

# விமல், தமிழ்க் கட்சிகளுடன் பேச்சு நடத்தும் டலஸ் அணி!

கொழும்பு, செப். 03



பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பவற்றுடன் எதிர்வரும் நாட்களில் கலந்துரையாடலை நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தலைமைத்துவம் வகிக்கும் சுதந்திர மக்கள் சபை தெரிவித்துள்ளது.

அதன் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அண்மைய நாட்களில் சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி என்பவற்றுடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது நிலவும் நெருக்கடியான நிலையை அடுத்து எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தேர்தல் நடத்தப்படுமா? இல்லையா? என்ற நிச்சயமற்ற நிலை உள்ளது.

மாகாண சபை தேர்தலுக்கு என்ன நடந்தது என அனைவரும் அறிவார்கள்.

இந்தநிலையில், எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள தேர்தல்களிலும் அவ்வாறான நிலை ஏற்பட்டால் எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன- என்றார்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்ஸாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள, புதிய கூட்டணிக்கு தலைமை தாங்கும் பொறுப்பு அனுர பிரியதர்ஷன யாப்பாவுக்கு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன

பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் அதிகாரம் உட்பட சகல பொறுப்புக்களையும் பாராளுமன்ற உறுப்பினர் யாப்பாவிடம் ஒப்படைக்கும் யோசனை, பாராளுமன்ற உறுப்பினர் லன்ஸா மற்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் முன்வைக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில் கொழும்பு, புத்தளம் மற்றும் ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் இந்தக் கூட்டணியில் இணையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

# வடக்கு-கிழக்கை முழுமையாக அபகரிக்க முயல்கிறது இந்தியா!

**விமல், கம்மன்பில கூட்டாக குற்றச்சாட்டு**



**கொழும்பு, செப். 03**

**“இலங்கை விவகாரத்தில் சீனாவுக்குப் போட்டியாக இந்தியா செயற்படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.”**

**- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ எம்.பி., பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எம்.பி. ஆகியோர் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.**

வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்கவே இந்தியா விரும்புகின்றது என்றும் அவர்கள் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கைக்கு எந்த நாட்டவர்களும் வந்து போகலாம். இலங்கை அரசின் அனுமதியுடன் எந்த நாட்டுக் கப்பலும் இங்கு வந்து தரித்து நிற்கலாம். இலங்கைக்கு எந்த நாடும் உதவிகளை வழங்கலாம். இந்தியா மாத்திரம்தான் இலங்கையின் தோழன் அல்ல.

இலங்கை மீது இந்தியாவுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அதேயளவு அக்கறை சீனாவுக்கும் உண்டு. ஏனெனில் சீனாவும் இலங்கைக்கு அவசர நிலைமைகளின் போது உதவி வழங்கும் பிரதான நாடாகும்.

இலங்கையைத் தனது நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு வந்து வடக்கு, கிழக்கை முழுமையாக அபகரிக்கவே இந்தியா விரும்புகின்றது. இதற்கு நாம் ஒருபோதும் அனுமதி வழங்கமாட்டோம்-என்றனர். (அ)

# 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை இலங்கையில் திறக்கிறது சீன நிறுவனம்

கொழும்பு, செப். 03

சீன எரிபொருள் நிறுவனமான ‘சினோபெக்’ எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் நாடு பூராகவும் தமது கிளைகளை நிறுவவுள்ளது என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சினோபெக் நிறுவனம் தமது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை ஆரம்பித்துள்ளது. நாடு பூராக வும் 150 நிலையங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்குள் ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றன. 12 இடங்களைத்தவிர ஏனைய நிலையங்களின் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், அவுஸ்திரேலிய யுனைடட் பெற்றிலோலிய நிறுவனமும் இவ்வருடத்துக்குள் தமது சேவையை நாட்டில் ஆரம்பிக்கும்-என்றார். (அ)

# கோழி இறைச்சியை நேற்று முதல் 1,250 ரூபாவுக்கு விற்க தீர்மானம்!

கொழும்பு, செப். 03

நேற்று முதல் பல்பொருள் அங்காடிகளில் தோல் நீக்கப்பட்ட கோழி இறைச்சி ஒரு கிலோவை 1250 ரூபாவுக்கு விற்பனை செய்ய கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலையை குறைப்பது தொடர்பான கலந்துரையாடல் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் அந்த அமைச்சில் நடைபெற்றது.

அந்த விவாதத்தில் நமது நாட்டில் கோழிக்கறி உற்பத்தி செய்யும் அனைத்து தொழில் அதிபர்களும், பெரிய அளவில் முட்டை உற்பத்தி செய்யும் தொழிலதிபர்களும் கலந்து கொண்டனர்.

முட்டையின் விலையை கட்டுப்படுத்துவதற்காக மேலும் 91 மில்லியன் முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

கோழி இறைச்சியின் விலையை குறைக்காவிடின் இந்தியாவிலிருந்தே கோழி இறைச்சியை இறக்குமதி செய்து, நுகர்வோரை பாதுகாக்க வேண்டியிருக்கும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

கோழி இறைச்சி மற்றும் முட்டையில் நாடு தன்னிறைவு பெற்றுள்ள போதிலும், முட்டை மற்றும் கோழிக் கறியின் விலை உயர்வினால் நாட்டின் புரதத் தேவைக்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும், எனவே இத்தொழிலை பாதுகாக்கும் வகையில், முட்டை மற்றும் கோழி இறைச்சி விலையை குறைக்கவேண்டும்.

இதன்படி தோலுடன் கூடிய ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலையை இன்று முதல் 1250 ரூபாவாக குறைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

எந்தவொரு பல்பொருள் அங்காடியும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுமாயின் 0712732679 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக கோழிப்பண்ணை தொழில் சங்கத்தின் அஜித் வீரசிங்கவிற்கு அறிவிக்குமாறும் கைத்தொழில்துறையினர் நுகர்வோரை கேட்டுள்ளனர். (அ)

# 400 வகை மருந்துகள் அவசர கொள்வனவு

**வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பு**

கொழும்பு, செப். 03

400 வகையான மருந்துகள் அவசர கொள்வனவு நடைமுறையின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டு, வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 378 வகையான மருந்துகளும் வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், வைத்தியசாலைகளில் 77 வகையான மருந்துகள் பற்றாக்குறையாகக் காணப்படுவதாக அவர் கூறினார். (அ)

# மாதம்பே வாகன விபத்தில் தந்தை, மகள் பரிதாப பலி!

கொழும்பு, செப். 03

வாகன விபத்தில் தந்தையும், மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து வாரியபொல - மாதம்பே பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளும் லொறியும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த 48 வயதுடைய தந்தையும், 16 வயதுடைய மகளுமே விபத்தில் சிக்குண்டு உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தின் பின்னர் லொறியின் சாரதி தப்பிச் சென்றுள்ளார் எனவும், அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் வாரியபொல பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஆட்கொல்லி ரோபாட்கள்: ஆபத்தை உணராத உலகம்

வினோத் ஆறுமுகம்



செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் இன்றைக்குப் பல துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி வருகிறது. தொழில்நுட்பம் மனிதர்களுக்கு நண்பனாகவும் பாதுகாவலனாகவும் இருக்க வேண்டும். ஆனால், அதன் கையில் துப்பாக்கியைக் கொடுக்க ஆரம்பித்திருக்கின்றன உலக நாடுகள். எந்தவொரு தொழில்நுட்பத்தையும் ஆயுதமாக மாற்றுவது ராணுவத்தின் முக்கிய இலக்கு. செயற்கை நுண்ணறிவு மட்டும் இதில் விதிவிலக்காக இருக்குமா என்ன?

செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு ராணுவத்தைப் பலப்படுத்த அமெரிக்க அரசாங்கம் சமீபத்தில் ஒரு துறையை உருவாக்கியது. அதன் முக்கிய ஆலோசகராகப் பணிபுரிபவர், கூகுள் நிறுவனத்தின் முன்னாள் முதன்மைச் செயலாளரான எரிக் ஸ்மித் என்பதிலிருந்து இவ்விஷயத்தின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளலாம்.

அமெரிக்கா என்றல்ல, பல நாடுகள் செயற்கை நுண்ணறிவை ராணுவப் பயன்பாட்டில் ஈடுபடுத்தும் ஆய்வுகளில் இறங்கியிருக்கின்றன. ஆயுதங்களைச் செயற்கை நுண்ணறிவுகொண்ட 'ஸ்மார்ட்' ஆயுதங்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. தொழில்நுட்பத்தை ராணுவம் பயன்படுத்துவது காலம்காலமாக நடப்பதுதான். இப்போது என்ன புதுச் சிக்கல்?

## கடவுளின் கட்டளை

நேற்றுவரை தொழில்நுட்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் மனிதர்களால்தான் இயக்கப்பட்டன. அதிநவீன ஏவுகணை உருவாக்கப்பட்டிருந்தாலும், அது எந்த இடத்தில் தாக்க வேண்டும் என்கிற முடிவை எடுத்தது என்னவோ மனிதர்கள்தான். ஆனால், செயற்கை நுண்ணறிவுடன் கூடிய போர்க் கருவிகள் அப்படிச் செயல்படாது.

"முந்தைய தொழில்நுட்பங்கள்-கருவிகள் எவையும் முடிவுகள் எடுக்காது. ஆனால், செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம் முதல் முறையாகத் தானாகவே முடிவுகளை எடுக்கிறது. இதுதான் அச்சப்பட வேண்டிய விஷயம்" என்கிறார் சிந்தனையாளர் யுவால் நோவா ஹராரி.

இன்று செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் நம் அன்றாட வாழ்க்கையில் நுழைந்து ஏற்கெனவே முடிவுகளை எடுத்து நம் வாழ்க்கையின் மீது தாக்கத்தைச் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது. உங்களுக்கு வங்கிக் கடன் கொடுக்க வேண்டுமா என்பதில் தொடங்கி, வேலைக்கான உங்கள் விண்ணப்பத்தைத் தேர்வுசெய்வது வரை செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்கள்தான் முடிவெடுக்கின்றன.

ஆனால், அந்த அல்காரிதங்கள் எப்படிச் செயல்படுகின்றன என்று கேட்டால், அதை உருவாக்கிய நிபுணர்களே 'தெரியாது' என்கிறார்கள். செயற்கை நுண்ணறிவின் அடிப்படை அல்காரிதங்கள் செயல்படும் விதத்தை 'பிளாக் பாக்ஸ்' என்கிறார்கள். அதாவது, அது எப்படி இயங்குகிறது என்று தெரியாது. ஆனால், அதன் முடிவுகளை மட்டும் கடவுளின் கட்டளையாக அப்படியே அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள்.

## சுயமாகத் தாக்கும் ட்ரோன்கள்

இங்குதான் சிக்கல் தொடங்குகிறது. தாக்குதலுக்கு ராணுவங்கள் பயன்படுத்தும் டிரோன்கள் முழுக்க முழுக்கச் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களால் இயக்கப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்புவரை டிரோன்கள் யாரைச் சுட வேண்டும், எங்கு வெடிகுண்டு வீச வேண்டும்என்பதை அந்தக் குழுவின் ராணுவ கமாண்டோ முடிவு செய்வார். வல்லுநர் சரியான இடத்தில் வெடிகுண்டை வீசுவார்.



ஆனால், இப்போது உருவாக்கப்படும் செயற்கை நுண்ணறிவு ராணுவ மென்பொருள்களும், செயற்கை நுண்ணறிவு ரோபாட்களும் முழுக்க முழுக்கத் தாமாகவே இயங்குபவை. மனிதர்கள் இயக்க வேண்டிய அவசியம் இல்லை. அதேபோல் கொடுக்கப்படும் தகவல்களை வைத்து தாமாகவே முடிவெடுக்கும் திறனும் இவற்றுக்கு உண்டு.

அமெரிக்கா தொடங்கிப் பல நாடுகள் ராணுவத்துக்கு அதிகமான நிதியை ஒதுக்குவதால், நீங்கள் ராணுவக் கருவி உற்பத்திசெய்யும் ஒப்பந்தத்தைப் பெற்றுவிட்டால் லாபத்தைக் குவித்துவிடலாம். சிலிக்கான் பள்ளத்தாக்குப் பகுதியில் உருவாகும் செயற்கை நுண்ணறிவு 'ஸ்டார்ட் அப்'-களின் இலக்கே ராணுவம்தான்.

ஏற்கெனவே, தொழில்நுட்பங்கள்மீது மிகுந்த ஆர்வம் காட்டும் ராணுவத் துறையும் புதிதாக வந்திருக்கும் செயற்கை நுண்ணறிவுத் துறை சார்ந்து பணத்தைச் செலவழிக்கத் தயங்குவதில்லை. ஏற்கெனவே, தங்கள் நிறுவனங்களில் வலைதளம், செயலிகளில் பயன்படுத்தப்படும் செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களை ராணுவத்துக்காகச் சிறிதளவு மேம்படுத்திவிட்டால் போதும்.

ஏற்கெனவே கூகுள் நிறுவனம் தானியங்கிச் செயற்கை நுண்ணறிவு கார்களுக்காக உருவாக்கிவரும் 'கணினி கண்கள்' (Computer vision) அல்காரிதங்களைச் சிறிதளவு மேம்படுத்தினால், தானியங்கி டிரோன்களுக்கு அவற்றைப் பொருத்திவிடலாம். குற்றவாளிகளைக் கண்டறியும் செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களை அமேசான் நிறுவனம் முன்பே உருவாக்கியுள்ளது. அதைக் காவல் துறைக்கு விற்றுக்கொண்டிருக்கிறது.

கொடுக்கப்படும் தகவல்களிலிருந்தும், ஒரு நபரின் நடவடிக்கைகளைப் பகுப்பாய்வுசெய்வதன் மூலமும் இவர் குற்றவாளியாகவோ தீவிரவாதியாகவோ இருக்கலாம் என்று முடிவெடுக்கும் செயற்கை நுண்ணறிவு மென்பொருள்கள் சந்தைக்கு வந்துவிட்டன. 'பிரெடிக்டிவ் போலீஸிங்' (Predictive policing) எனும் இந்த மென் பொருள்களை ராணுவத்துக்கு விற்பது பெரிய காரியமில்லை!

## நிறுவனங்களின் லாபவெறி:

'தீவிரவாதிகளையும் குற்றவாளிகளையும் முன்பே கணித்து அவர்களை ஒழித்துக்கட்டுவதன் மூலம், மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தலாம்' - இதுதான் ராணுவத்தினர் முன்வைக்கும் முதல் வாதம். அடுத்தது, செயற்கை நுண்ணறிவு இயந்திரங்கள் வரும்போது ராணுவத்தில் இருக்கும் மனிதர்களின் எண்ணிக்கையைக் குறைத்து அவர்களின் உயிரைக் காப்பாற்றலாம் - இது இரண்டாவது வாதம்.

ஆனால், செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்களில் பல சிக்கல்கள் இருப்பதாக விமர்சனங்கள் உண்டு. செயற்கை நுண்ணறிவு அல்காரிதங்கள் கறுப்பின மக்களைத் தவறுதலாகக் குற்றவாளிகள் ஆக்குவதை வழக்கமாகக் கொண்டுள்ளன. செயற்கைநுண்ணறிவு அடிப்படையில் கறுப்பின மக்களைத் தவறாகக் கைது செய்யும் வழக்குகள் அமெரிக்காவில் அதிகமாகிவிட்டன. இதைத் தொடர்ந்து அமேசான் போன்ற நிறுவனங்களே தங்களின் மென்பொருள்களைத் திரும்பப் பெற்ற வரலாறும் உண்டு.

ஆனால், செல்வாக்குமிக்க இந்த நிறுவனங்கள், இத்தகைய சிக்கல்களைத் தீர்க்காமல் லாபத்துக்காகத் தவறான செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களை அரசுக்கு விற்பதிலேயே குறியாக இருக்கின்றன. இவற்றை எப்படிச் சரிசெய்வது என்கிற வாதம் நடந்துகொண்டிருக்கும்போது, இதே மென்பொருள்கள் அடிப்படையில் ராணுவத்தில் செயற்கை நுண்ணறிவு நுழைவது மேலும் பல கேள்விகளை எழுப்புகிறது.

நாட்டின் பாதுகாப்பு என்கிற அம்சத்தில் மட்டும்கண்ணை மூடிக்கொண்டு செயற்கை நுண்ணறிவுசார்ந்த போர்க் கருவிகளையும், போர் இயந்திரங்களையும் அனுமதிக்கலாமா? இதைப் பற்றிய விவாதங்கள் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.

இப்போதைய செயற்கை நுண்ணறிவு மனிதனைப் போல முழுமையாகச் சிந்திக்கக்கூடியதோ பொது அறிவு கொண்டதோ அல்ல. அது வெறும் கணிதம் அடிப்படையிலானது மட்டும்தான். கணிதத்தின் அடிப்படையில், கட்டுப்பாடில்லாமல் முரட்டுத்தனமாக இயங்கும் ஒரு தொழில்நுட்பத்திடம் துப்பாக்கியையும் வெடிகுண்டையும் கொடுக்கலாமா?

## மீறப்படும் விதிகள்

அமெரிக்க எழுத்தாளர் ஐசக் அசிமோவ் ரோபாட்களைப் பற்றி எழுதிய சிறுகதை ஒன்றில், சில விதிகளை உருவாக்கினார். இன்றளவும் ரோபாட்களுக்கு அடிப்படையான விதியாக அசிமோவின் விதிதான் கூறப்படுகிறது. அதன் முதல் விதி: மனிதனின் கட்டளைகளை எந்தவிதக் கேள்வியும் கேட்காமல் ஒரு ரோபாட் செய்ய வேண்டும். மனிதர்களுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது.

இன்றைய ஆட்கொல்லி ரோபாட்களின் அடிப் படையே, அசிமோவின் இந்த விதியை மீறுவதாகத்தான் உள்ளது. 'எந்திரன்' திரைப்படத்தில்கூட, கதாநாயகன் உருவாக்கும் ரோபாட்டை அவர் ராணுவத்துக்குத்தான் பயன்படுத்த விரும்புவார். சொல்லப்போனால், பனிப்போர் காலத்தில் ராணுவத்துக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்ற அடிப்படையிலே நிதி கொடுத்து உருவாக்கப்பட்டதுதான் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம். அதை நிச்சயம் ராணுவத்தினர் பயன்படுத்தவே முனைவார்கள்.

நம் கேள்வி எல்லாம் அணுகுண்டுக்கு நிகரான அழிவை ஏற்படுத்தும் இந்தத் தொழில்நுட்பத்தைத் தவறான நபர்களும் தீவிரவாதிகளும் கையில் எடுத்தால் என்ன ஆகும்? அழிவுக்கு யார் பொறுப்பு ஏற்பது? மனிதத்தன்மை இல்லாத இந்த ரோபாட்களின் கையில் ஏன் கொலை ஆயுதங்களைக் கொடுக்க வேண்டும்?

# சூர்யாவின் அடுத்த படம்



‘கங்குவா’ படத்தை முடித்துவிட்டு, வெற்றிமாறனுடன் கைகோப்பார் சூர்யா என பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், வெற்றிமாறன் இன்னமும் ‘விடுதலை பாகம்-2’ படத்தின் பணிகளையே முடிக்காததால் கலைப்புலி தாணு - சூர்யா - வெற்றிமாறன் கூட்டணியின் ‘வாடிவாசல்’ படப்பிடிப்பு அடுத்த வருடத்துக்குத் தள்ளிப்போயிருக்கிறது. இந்த இடைவெளியில் , ‘சூரரைப் போற்று’ சுதா கொங்கராவின் அடுத்த படத்தில் நடிக்கவுள்ளார்.



# அஜித்துக்கு வில்லன்

அஜித்தின் விடாமுயற்சி திரைப்படத்தின் படப்பிடிப்பு தடைப்பட்டது. படப்பிடிப்பு மீண்டும் ஆரம்பிக்கப்படவுளதாக லைகா நிறுவனம் அறிவித்தது.

இந்நிலையில், இப்படத்தில் நடிகர் அஜித்துக்கு வில்லனாக பொலிவூட் நடிகர் சஞ்சய் தத் நடிக்க உள்ளதாக புதிய தகவல் வெளியாகியுள்ளது. சஞ்சய் தத் தென்னிந்திய படங்களில் கவனம் செலுத்தி வருகிறார். இவர் நடித்த கே. ஜி. எவ். மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. தொடர்ந்து, லியோ படத்தில் நடித்துள்ளார். தற்போது, அஜித்துடன் இணையும் தகவல் வெளியாகியுள்ளதால் படத்தின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்து வருகிறது.

# மீண்டும் விஜயுடன்...!

விஜய், வெங்கட்பிரபு இணையும் ‘தளபதி 68’ வேகம் எடுக்கிறது. செப்ரெம்பர் இரண்டாவது வாரத்துக்குள் படப்பிடிப்பை தொடங்கிவிட தீர்மானித்திருக்கிறார்கள். படத்தின் நாயகிகளாக ஜோதிகா, பிரியங்கா மோகன் இருவரும் நடிக்கவிருக்கிறார்கள்.

இந்நிலையில், விஜயின் ‘பீஸ்ட்’ படத்தின் மூலம் தமிழுக்கு வந்த மலையாள வரவான அபர்ணா தாஸூக்கு ‘டாடா’ படம் திருப்புமுனையை ஏற்படுத்தியது. இப்போது ‘தளபதி 68’இலும் அபர்ணா தாஸூக்கு வலுவான ஒரு கதாபாத்திரம் கொடுத்திருப்பதாக சொல்கிறார்கள்.





# வா... வாத்தியாரே...!

நடிகர் கார்த்தி நடிப்பில் விருமன், சர்தார், பொன்னியின் செல்வன் படங்கள் வியாபார ரீதியாக பெரும் வெற்றி பெற்றது. இதைத் தொடர்ந்து இயக்குநர் ராஜூ முருகன் இயக்கத்தில் ‘ஜப்பான்’ படத்தில் நடித்து முடித்துள்ளார். இது கார்த்தியின் 25ஆவது படமாகும்.

தொடர்ந்து, ‘சூது கவ்வும்’, ‘காதலும் கடந்து போகும்’ உள்ளிட்ட படங்களை இயக்கிய இயக்குநர் நலன் குமாரசாமி இயக்கத்தில் கார்த்தி நடித்து வருகிறார்.

இப்படத்தில் கார்த்திக்கு வில்லனாக நடிகர் சத்யராஜ்/ம் முக்கிய கதாபாத்திரம் ஒன்றில் நடிகர் ராஜ்கிரணும் நடித்து வருகிறார். இந்தப் படத்துக்கு ‘வா வாத்தியாரே’ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

# எஸ். கே. 21

நடிகர் கமல்ஹாசன் தயாரிப்பில் சிவகார்த்திகேயனின் 21ஆவது படத்தை இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி இயக்கி வருகிறார். நாயகியாக சாய் பல்லவி நடிக்கிறார்.

இராணுவ வீரர் ஒருவரின் வாழ்க்கையை தழுவி இந்தப் படம் உருவாகி வருவதாக தகவல் வெளியாகியிருந்தது. மேலும், இதன் முதல்கட்ட படப்பிடிப்பு கடந்த 75 நாள்களாக காஷ்மீரில் நடைபெற்று வந்தது.

தற்போது, காஷ்மீர் படப்பிடிப்பு நிறைவு பெற்றதாக படக்குழு அறிவித்துள்ளது. அடுத்தகட்ட படப்பிடிப்பு சென்னையில் விரைவில் தொடங்கவுள்ளது.



# 3 வேடங்களில் கவுண்டமணி



கவுண்டமணி நீண்ட இடைவெளிக்குப் பிறகு கடந்த 2015ஆம் ஆண்டு ‘49-ஓ’ படத்தில் நடித்தார். 2016ஆம் ஆண்டுக்குப் பிறகு அவர் எந்த படங்களிலும் நடிக்கவில்லை.

இந்நிலையில், 7 ஆண்டுகளுக்குப் பிறகு கவுண்டமணி நாயகனாக ‘ஒத்த ஓட்டு முத்தையா’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இதில், யோகி பாபு, மொட்டை ராஜேந்திரன், தம்பி ராமையா, சிங்கம் புலி, வையாபுரி, முத்துக்காளை உள்ளிட்ட பலர் நடிக்கிறார்கள்.

படத்தை இயக்கும் சாய் ராஜகோபால் கவுண்டமணி படங்களுக்கு நகைச்சுவை வசனம் எழுதியவர். இந்தப் படத்தில் கவுண்டமணி 3 வேடங்களில் நடிக்கிறார்.





**திரைப்படம் - லக்கிமேன்**
**இயக்கம் - பாலாஜி வேணுகோபால்**
**இசை - ஷான் ரோல்டன்**
**நடிப்பு - யோகிபாபு, ரெய்ச்சல் ரெபேக்கா, வீரா**

வாழ்க்கையில் அதிர்ஷ்டம் (லக்) என்றால் என்னவென்றே தெரியாத ஒருவனுக்கு திடீரென ஓர் அதிர்ஷ்டம் அடித்து பின் அதுவும் பிசகிப் போனால் என்ன நடக்கும் என்பதுதான் இந்த ‘லக்கிமேன்’. கொஞ்சம் நகைச்சுவை, கொஞ்சம் சீரியஸ், கொஞ்சம் யதார்த்தம் கலந்து படத்தை கொடுத்திருக்கிறார் இயக்குநர் பாலாஜி வேணுகோபால்.

சிறு வயதிலிருந்தே அதிர்ஷ்டம் இல்லாதவர் யோகிபாபு. ஒரு ரியல் எஸ்டேட் கம்பெனியில் தரகராக வேலை பார்க்கிறார். மனைவி, ஒரு மகன் என வாழ்க்கை சுமாராக போய்க் கொண்டிருக்கிறது. ஒரு சீட்டு கம்பெனியில் அவருக்கு குலுக்கலில் ஒரு கார் பரிசாக விழுகிறது. அந்தக் காரை வைத்து ரியல் எஸ்டேட்டில் கூடுதலாக சம்பாதிக்க ஆரம்பிக்கிறார். இந்நிலையில் அந்தக் கார் திடீரென காணாமல் போகிறது. யோகி பாபுவுடனான ஒரு மோதலில் பொலிஸ் பொறுப்பதிகாரியான வீரா அந்தக் காரை எடுத்து மறைத்து வைத்துக் கொள்கிறார். காணாமல் போன கார் யோகி பாபுவுக்குக் கிடைத்ததா, இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

‘மண்டேலா’ படத்துக்குப்




பிறகு யோகிபாபுவின் நடிப்பை அழுத்தமாய் வெளிப்படுத்தும் ஒரு கதாபாத்திரம். பொறுப்பான கணவனாக, அப்பாவாக தனது கதாபாத்திரத்தில் இயல்பாக நடித்திருக்கிறார் யோகி பாபு. அவருக்குள் நகைச்சுவை உணர்வுகளையும் மீறி குணச்சித் திர உணர்வுகள் நிறைய ஒளிந்து கிடக்கிறது என்பது இந்தப் படத்தைப் பார்க்கும்போது மேலும் புரிகிறது.

யோகிபாபுவின் மனைவியாக ரெய்ச்சல் ரெபேக்கா, சினிமாத்தனமில்லாத ஒரு மனைவி கதாபாத்திரம். கணவனை நன்றாகப் புரிந்து வைத்திருப்பவர் ஒரு கட்டத்தில் அவரை விட்டுப் பிரிந்து செல்வது மட்டும் ஏற்புடையதாக இல்லை. யோகிபாபுவின் மகனாக நடித்திருக்கும் சிறுவனும் நிறைவாக நடித்திருக்கிறார்.

படம் முழுவதும் யோகிபாபுவுடனேயே இருக்கும் நண்பன் கதாபாத்திரத்தில் அப்துல் லீ. சுகதுக்கங்களில் எப்போதும் பங்கெடுக்கும் இது மாதிரியான நண்பர்கள்தான் பலரின் வாழ்க்கையில் தூணாக இருக்கிறது. வில்லன் போன்ற குணாதிசயத்தில் வீரா. யோகிபாபுவை சிரமத்துக்கு உள்ளாக்க வேண்டும் என்பதில் முனைப்புடன் இருப்பவர்.

ஷான் ரோல்டன் இசையமைப்பில் பின்னணி இசை படத்திற்கு பக்கபலமாய் அமைந்துள்ளது. சந்தீப் கே விஜய் ஒளிப்பதிவு காட்சிகளுக்குரிய யதார்த்தத்தை அருமையாகப் பதிவு செய்திருக்கிறது.

இடைவேளை வரை சுவாரசியமாக நகரும் படம், அதன் பின் கொஞ்சம் தடுமாறுகிறது. காரை தேடி யோகிபாபு அலைவதும், அவரை வீரா வெறுப்பேற்ற நினைப்பதும் என காட்சிகள் மீள வருவது போன்ற உணர்வுதான் வருகிறது. அதைச் சரி செய்திருந்தால் ‘லக்கிமேன்’, கொஞ்சம் ‘சுப்பர் மான்’ ஆக மாறியிருப்பார்.

# தொடர் ஆஸி. வசம்

தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி மூன்று 20 ஓவர் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது. இதன்படி இவ்விரு அணிகளுக்கு இடையே முதலில் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடர் நடைபெற்று வருகிறது.

முதலாவது இருபது - 20 போட்டியில் அவுஸ்திரேலிய அணி 111 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் அவுஸ்திரேலியா 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனைத் தொடர்ந்து இவ்விரு அணிகளுக்கு இடையேயான 2ஆவது இருபது - 20 கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் அணித் தலைவர் மிட்செல் மார்ஷ் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதன்படி தென் ஆப்பிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய ஆர்.ஹெண்ட்ரிக்ஸ் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய வான் டெர் டுசென் 6 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். இதையடுத்து மற்றொரு தொடக்க வீரர் பவுமாவுடன்மார்க்ரம் ஜோடி சேர்ந்தார்.

இதில் பவுமா 35 ஓட்டங்களில் பிடியெடுப்பாகி வெளியேறினார். அரை சதத்தை நோக்கி முன்னேறிய மார்க்ரம் 49 ஓட்டங்களில் பிடியெடுப்பாகி ஆட்டமிழந்தார். அடுத்து வந்த டிரிஸ்டன் ஸ்டப்ஸ் 27 ஓட்டங்கள் எடுத்து போல்ட் ஆனார். இறுதியாக 20 ஓவர்கள் முடிவில் தென்னாபிரிக்கா அணி 8 விக்கெட்களை இழந்து 164 ஓட்டங்கள் சேர்த்தது. அவுஸ்திரேலிய அணியில் பெஹ்ரெண்டார்ப் 2 விக்கெட்களும், அபாட் மற்றும் நாதன் எலீஸ் தலா 3 விக்கெட்களும் வீழ்த்தினர். இதைத் தொடர்ந்து 165 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலிய அணி விளையாடியது.

தொடக்க ஆட்டக்காரர்களாக மத்தியூ ஷார்ட்-டிரேவிஸ் ஹெட் களமிறங்கினர். இதில் டிரேவிஸ் ஹெட் 18 ஓட்டங்களில் பிடியெடுப்பாகி வெளியேற, அடுத்து களமிறங்கிய அணித் தலைவர் மிட்செல் மார்ஷ், மேத்யூ ஷோர்ட்டுடன் இணை சேர்ந்தார். இந்த இணை தென்னாபிரிக்காவின் பந்துவீச்சை நாளா பக்கமும் சிதறடித்தது. 25 பந்துகளில் அரைச்சதத்தைக் கடந்த மேத்யூ ஷோர்ட், 30 பந்துகளில் 7 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்கள் விளாசி 66 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். மறுபுறம் அதிரடி காட்டிய மிட்செல் மார்ஷ், 39 பந்துகளில் 8 பௌண்ட்ரிகள், 6 சிகஸ்ர்களுடன் 79 ஓட்டங்கள் எடுத்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

இதையடுத்து ஆஸ்திரேலிய அணி 14.5 ஓவர்களில் 165 ஓட்டங்கள் எடுத்து 8 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட இருபது -20 தொடரை அவுஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளது.



# அஸ்வினின் பாராட்டு




இலங்கை அணியின் இளம் கிரிக்கெட் வீரர் மதீஷ பத்திரணவின் பந்து வீச்சுத் திறனை பாராட்டி ருவிற் செய்துள்ளார் இந்திய கிரிக்கெட் வீரர் அஸ்வின்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம் ஆகிய 6 அணிகள் கலந்து கொள்ளும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இம்முறை போட்டிகள் இலங்கை, பாகிஸ்தானில் நடைபெறுகின்றன. செப்ரெம்பர் 17ஆம் திகதி வரை நடைபெறும் இந்தத் தொடரில் கலந்து கொண்டுள்ள 6 அணிகளும் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. இந்த தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் விளையாடின.

இதில் இலங்கை வீரர் மதீஷ பத்திரண, 7.4 ஓவர்கள் வீசி 32 ஓட்டங்கள் கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தி இருந்தார். அதன் மூலம் பங்களாதேஷ் அணியை 164 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தி ஆட்டமிழக்க செய்தது இலங்கை அணி. 20 வயதான பத்திரண, ஐ. பி. எல். கிரிக்கெட்டில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி வருகிறார்.

இதுவரை 14 ஐ. பி. எல். போட்டியில் விளையாடி 21 விக்கெட்களை கைப்பற்றி உள்ளார். ஐ. பி. எல். 2023 தொடரில் இவர் 19 விக்கெட்களை வீழ்த்தி கவனம் ஈர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

"ஐ. பி. எல். 2023 தொடரில் பத்திரணவின் செயல்பாடு பாராட்டும் வகையில் இருந்தது. ஆனால், பங்களாதேஸூக்கு எதிரான போட்டியில் அவரது செயல்பாடு கடந்த 12 மாதங்களில் அவர் கண்டுள்ள செயல்திறன் மேம்பாட்டை சுட்டிக் காட்டுகிறது" என அஸ்வின் தெரிவித்துள்ளார்.

# பணமழையில் இந்தியா!

இந்தியாவில் அடுத்த 5 ஆண்டுகளில் நடைபெறவிருக்கும் கிரிக்கெட் போட்டிகளுக்கான ஊடக ஒளிபரப்பு உரிமை வியாபாரமாகியிருக்கிறது. வியாகாம் 18 நிறுவனம் 5,963 கோடி (இந்திய) ரூபாய் கொடுத்து வாங்கியுள்ளது.

2018 முதல் 2023 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான ஒளிபரப்பு உரிமையை ஸ்டார் நிறுவனம் வைத்திருந்தது. 2018 இல் அந்த உரிமையை 6138 கோடி ரூபாய் கொடுத்து ஸ்டார் நிறுவனம் வாங்கியிருந்தது. தொலைக்காட்சி மற்றும் டிஜிற்றல் என இரண்டிற்கும் சேர்த்து இந்தத் தொகை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், 2023 முதல் 2028 வரையிலான ஐந்தாண்டுகளுக்கான தொலைக்காட்சி மற்றும் டிஜிட்டல் உரிமைக்கான ஏலம் மும்பையில் நேற்று நடைபெற்றிருந்தது. டிஸ்னி ஸ்டார், சோனி, வியாகாம் 18 என மூன்று நிறுவனங்கள் இந்த ஏலத்தில் முக்கிய போட்டியாளர்களாக இருந்தனர். ஏலத்தின் முடிவில் வியாகாம் 18 நிறுவனம் 5,963 கோடி ரூபாய்க்கு ஒளிபரப்பு உரிமையை வாங்கியிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுகளில் இந்தியாவில் நடைபெற இருக்கும் 88 இருதரப்பு தொடர் போட்டிகளை யும் வியாகாம் 18 நிறுவனமே தொலைக்காட்சி மற்றும் டிஜிற்றலில் ஒளி பரப்பும்.

ஒட்டுமொத்தமாக 5 ஆண்டுகளுக்கான ஏல மதிப்பு கடந்த ஏலத்தை விட இந்த ஏலத்தில் குறைவாக இருந்தாலும் ஒரு போட்டியின் மதிப்பு என பார்க்கும் போது கொஞ்சம் அதிகரிக்கவே செய்திருக்கிறது. ஸ்டார் ஒளிபரப்பு உரிமையை வைத்திருந்த போது ஒரு போட்டியின் மதிப்பு 60 கோடியாக இருந்தது. வியாகாம் 18 வாங்கியிருக்கும் அடுத்த 5 ஆண்டுகளுக்கான உரிமையில் ஒரு போட்டியின் மதிப்பு 67.8 கோடியாக உயர்ந்திருக்கிறது.



ஐ.பி.எல் க்கான டிஜிட்டல் ஒளிபரப்பு உரிமையும் வியாகாம் 18 நிறுவனத்திடமே இருக்கிறது. மேலும், வுமன்ஸ் ப்ரீமியர் லீகின் தொலைக்காட்சி உரிமை, தென்னாபிரிக்கா இருபது -20 லீக் ஒளிபரப்பு உரிமை ஆகியவற்றையும் வியாகாம் 18 தான் வைத்துள்ளது. அடுத்தடுத்து பெரிய பெரிய தொடர்களின் ஒளிபரப்பு உரிமையை வியாகாம் 18 வாங்கி கவனத்தை ஈர்த்திருக்கிறது.

# மட்டக்களப்புக்கு வருகிறது அஞ்சியோகிராம் இயந்திரம்



## சுகாதார அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் உறுதி!

*மட்டக்களப்பு, செப். 03*

புதிதாக சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்றுள்ள இருதய சிகிச்சைப் பிரிவிற்கான (அஞ்சியோகிராம்) இயந்திரத்தை மட்டக்களப்புக்கு முன்னுரிமை கொடுத்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு சுகாதார அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், சுகாதார அமைச்சின் செயலாளர் ஆகியோர் தொலைபேசி மூலம் உத்தரவாதம் தந்துள்ளார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கரணாகரம் ஜனா தெரிவித்தார்.

இவ்விடயத்தை அரசியல் ரீதியாகப் பாராது மாவட்டத்தின் ஏனைய சக பாராளுமன்ற உறுப்பினர்களும் இவ்வியத்திரத்தை இங்கு கொண்டு வருவதற்கு ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மட்டக்களப்பு போதானா வைத்தியசாலைக்கு நாங்கள் நீண்ட காலமாகக் கேட்டுக் கொண்டிருந்த கத்லெப் எனப்படும் இருதய சிகிச்சைப் பிரிவிற்கான (அஞ்சியோகிராம்) இயந்திரம் வர இருக்கின்றது.

அதாவது 2021ஆம் ஆண்டு சுகாதார அமைச்சினால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கென்று இந்த இருதய சிகிச்சைப் பிரிவிற்கான இயந்திரம் ஒதுக்கப்பட்டிருந்தாலும் தீடீரென அது களுத்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அப்போதைய சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மற்றும் அப்போதைய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கலந்து பேசியிருந்தும், பாராளுமன்றத்திலும் வெளியிலும் எத்தனையோ பிரயத்தனங்களை மேற்கொண்டும் பலனில்லாமல் அந்த இயந்திரம் களுத்துறை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

தற்போது புதிதாக சுகாதார அமைச்சுக்கு அந்த இயந்திரம் மேலுமொன்று வர இருப்பதாக அறியக் கிடைத்ததையிட்டு சுகாதார அமைச்சின் செயலாளர் சந்திரகுப்தாவுடன் தொலைபேசியில் கலந்துரையாடினேன். அவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அந்த இயந்திரம் தேவை என்பதை உணர்ந்திருக்கின்றார். அதேபோன்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுடனும் உரையாடினேன். அவரும் இந்தத் தேவையை உணர்ந்து கொண்டு அமைச்சரும் செயலாளரும் மட்டக்களப்பிற்கு முன்னுரிமை கொடுத்து அந்த இயந்திரத்தை மட்டக்களப்பிற்குத் தருவதாகத் தொலைபேசி மூலம் உத்தரவாதம் தந்துள்ளார்கள்.

அதற்கு மேலாக ஜனாதிபதியின் செயலாளரான சமன் ஏக்கநாயக்கவுடனும் தொலைபேசியில் உரையாடியதற்கமைவாக தானும் இவ்விடயத்திற் நூறு வீத ஒத்துழைப்பைத் தருவதாகவும், ஜனாதிபதிக்கு கடிம் எழுதி அதன் பிரதியை வாட்சப் மூலமாகத் தனக்கும் அனுப்புமாறும் தெரிவித்திருக்கின்றார். அந்த வகையில் மேற்சொன்ன மூவரும் அந்த இருதய சிகிச்சை இயந்திரத்தை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றார்கள்.

எமது மாவட்டத்தில் இருதய சிகிச்சை செய்பவர்கள் யாழ்ப்பாணம், கொழும்பு அல்லது தனியார்துறை வைத்தியசாலைகளையே நாடிச் செல்கின்ற நிலையில் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அந்த இயந்திரம் வருமாக இருந்தால் ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தில் வாழும் இருதய நோயால் பாதிக்கப்படுபவர்கள் இந்த சிகிச்சையைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

அத்துடன் என் சக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நான் விடுக்கும் வேண்டுகோள். இவ்விடயத்தை அரசியல் ரீதியாகப் பார்க்காமல் அனைவரும் ஒன்றாக நின்று இந்த இயந்திரத்தைக இங்கு கொண்டு வருவதற்கு மேலதிக முயற்சிகளை எடுக்க வேண்டும்.

தற்போது இந்த நாட்டிலே சுகாதாரத் துறை சர்ச்சைக்குள்ளாக்கப்பட்ட ஒரு துறையாக உள்ளது. பல ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருகின்றன. வைத்திய நிபுனர்கள், வைத்திய அதிகாரிகள் இந்த நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவிக் கொண்டு வருகின்றது. கண் வைத்தியம் போன்ற சில நோய்களுக்கு சிகிச்சை செய்யும்போது நோயாளர்கள் பாதிப்படையும் நிலைமை கூட இருக்கின்றது. அத்துடன் சுகாதார அமைச்சருக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணனைகூட கொண்டுவரப்பட்டு பாராளுன்றத்திலே எதிர்வரும் வாரங்களில் இதன் மீதான விவாதம் நடைபெற இருக்கின்றது.

பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த நாடு இன்று ஒரு சுமுகமான நிலைக்கு வந்திருப்பதாக வெளியுலகிற்கு தெரிகின்றதே தவிர நாட்டு மக்கள் இன்னமும் மிகவும் கஸ்டத்திலேயே இருக்கின்றார்கள். விலைவாசி அதிகரிப்பு, சம்பளப் பற்றாக்குறை என ஒட்டுமொத்தமாக அரச ஊழியர்கள் தொடக்கம் சாதாரண மக்கள் வரை இந்த நாட்டிலே மிகவும் துக்கத்திற்குள்ளாகியிருக்கின்றார்கள். இதை உணர்ந்து இந்த அரசாங்கம் சுகாதாரத் துறையில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு முழுமையான ஒரு விசாரணை ஆணைக் குழுவை நியமித்து சுகாதாரத்துறையை மேம்படுத்த வேண்டும்-என்றார். (அ)

